REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜூன் 6 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY தினகரன்

வரு. 92 இல. 134 | Thursday 06, June, 2024 | 16 பக்கங்கள் | 50/-






## இந்தியப் பிரதமராக மோடி நாளை மறுதினம் பதவியேற்பு

### தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று ஒன்றுகூடி ஆலோசனை

இந்திய மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றதையடுத்து, புதிய அரசாங்கத்தில் பிரதமராக நரேந்திர மோடி எதிர்வரும் 08 ஆம் திகதி பதவியேற்கிறார். அவர் இந்தியாவில் 03 ஆவது முறையாக பிரதமர் பதவியை வகிக்கப் போகின்றார். இதையடுத்து புதிய அமைச்சரவையும் பதவியேற்கவுள்ளது. 06

## இந்திய - இலங்கை பொருளாதார ஒத்துழைப்பிற்கு இந்தியா தொடர்ந்து பாடுபடும்

### ஜனாதிபதியின் வாழ்த்துக்கு இந்திய பிரதமர் பதில்

இந்திய - இலங்கை பொருளாதார ஒத்துழைப்பிற்கு தொடர்ந்து பாடுபடப் போவதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நரேந்திர மோடியின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய பிரதமருக்கு அனுப்பிய செய்திக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இதனை இன்ஸ்டகிராம் சமூக வலைத்தளத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியில் நாட்டின் வளர்ச்சி மற்றும் சுபீட்சம் குறித்த, இந்திய மக்களின் நம்பிக்கை இந்த முடிவின் மூலம் தெளிவாகத் 06



உலக சுற்றாடல் தின நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் "சொபா" சஞ்சிகையின் முதலாவது இதழ் கையளிக்கப்பட்டது. முழுமையான செய்தி 02ஆம் பக்கம்

## நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளில் நிலவும் 10,535 ஆசிரியர் வெற்றிடங்கள்; 02 வாரங்களில் நிரப்ப ஏற்பாடு

### விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்ப பாடங்களுக்கான ஆசியர் பற்றாக்குறை இதன்மூலம் நிறைவு

லோரன்ஸ் செல்வநாயகம்

### மாகாண பாடசாலைகளில் நிலவும் 6,000 ஆசிரியர் வெற்றிடங்களை விரைவில் நிரப்பவும் நடவடிக்கை

தேசிய பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம் உள்ளிட்ட பாடங்களுக்கு நிலவும் 10,535 ஆசிரியர் வெற்றிடங்களை எதிர்வரும் இரண்டு வாரங்களில் நிரப்புவதுடன், தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதும் இதன் மூலம் நிறைவு செய்யப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் கல்வித் துறை தொடர்பில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்:

நாட்டில் 8,000 ஆசிரியருக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன. மாகாண பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள 6,000 ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிய கொரோனா சூழலுக்குப் பின்னர் அதிபர், ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் நாட்டில் இடம்பெற்ற போராட்டம் காரணமாக 2022 ஆம் ஆண்டு கல்வித்துறை உட்பட முழு நாடும் பாரிய பின்னடைவைக் கண்டது.

அந்த ஆண்டில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, கல்விப் பொது தராதர உயர்தரப் 06



## மூன்றாம் முறையாக பதவியேற்கும் மோடிக்கு அரசு சார்பாக பிரதமர் வாழ்த்து

### உலகுக்கே பெரும் செய்தியை வழங்கும் வெற்றி

லோரன்ஸ் செல்வநாயகம்



மூன்றாவது தடவையாகவும் இந்தியாவின் பிரதமராக பதவியேற்றுள்ள நரேந்திர மோடிக்கு, அரசாங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாக பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கை, இந்தியாவுக்கிடையில் நிலவும் நீண்ட கால பலமான நட்புறவு, இருதரப்பு மற்றும் அன்னியோன்ய துறை சார்ந்த பிணைப்புகள் அவரது 06

### கல்வி நிர்வாக கட்டமைப்பு சீர்திருத்தம்

## கல்வி அமைச்சரின் ஆலோசனைக்கு அமைச்சரவையில் அங்கீகாரம்



கல்வி நிர்வாகக் கட்டமைப்பில் சீர்திருத்தம் செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதன் மூலம் தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பை தயாரிப்பதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்த யோசனையை முன்வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். சர்வதேச தரத்துக்கு அமைவாக பாடசாலைகளை வகைப்படுத்துதல், 06

## வேறுபாடுகளின்றி ஈழப் போராட்டத்தை முன்னெடுத்த தலைவர்களுக்கும் சிலை

### இழந்ததை ஈடு செய்வோம் - அமைச்சர் டக்ளஸ்



தேசிய நல்லிணக்கமும் அணுகுமுறைகளும் மட்டுமல்லாது எமது தற்றுணிவுமே இன்று சிவகுமாரன் சிலை கம்பீரமாக நிமிர்ந்திருக்க காரணமென சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கட்சி மற்றும் இயக்க வேறுபாடுகளின்றி, ஈழப் போராட்டத்தை முன்னெடுத்த அனைத்து தலைவர்களுக்கும் எதிர்காலத்தில் சிலைகளை அமைத்து அவர்கள் அனைவரையும் வரலாற்றில் நிலைநிறுத்த எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். ஈழப் போராட்ட வரலாற்றில் 06

## பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் போராட்டம்: தீர்வுகாண நிதி அவசியம்

### தேசிய கல்விக் கொள்கையை வகுக்க அரசியலுக்கு அப்பாலான பேச்சு வேண்டும்



லோரன்ஸ் செல்வநாயகம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பதிலாக தேசிய உயர் கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 06

## கிளிநொச்சி இரணைமடு குள நீர்ப்பங்கீடு; அமைச்சர் ஜீவன் தலைமையில் ஆராய்வு

### அங்கஜன், ஸ்ரீதரன், சித்தார்த்தன் MP க்கள் பங்கேற்பு



இரணைமடு நீர்ப்பங்கீடு தொடர்பான கலந்துரையாடல், இரணைமடு கமக்கார அமைப்புக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகளுடன் நடைபெற்றது.

நீர் வழங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று (05) நடைபெற்ற இக்கலந்துரையாடலில், அமைச்சர் 06

## சட்டவிரோதமான இஞ்சி மூடைகள் பறிமுதல்



இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்கு சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 29 மூடை இஞ்சி கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக நுரைச்சோலை பொலிசார் தெரிவித்தனர். 06

## விசாரணைகள் நிறைவுற்றதும் பெறுபேறுகள் வெளியிடப்படும்

லோரன்ஸ் செல்வநாயகம்

**இன, மத அடிப்படையில் எவருக்கும் அநீதி இழைக்கப்படவில்லை - கல்வி அமைச்சர் சுசில் பாராளுமன்றத்தில் நேற்று விளக்கம்**

இரு காதுகளும் தெரியும் வகையில் ஹிஜாப் அணியாமை, கையடக்கதொலைபேசி பாவனை, ஆளடையாளத்தை உறுதிப்படுத்த தவறியமை, அனுமதிப்பத்திரத்தை முறையாக பூர்த்திசெய்யாமைபோன்ற காரணங்களுக்காகவே, சிலரின் க.பொ. த உயர்தரப்பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டன. இன, மத அடிப்படையிலும் அவர்களுக்கு அநீதி இழைக்கப்படவில்லை எனத் தெரிவித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் அணிந்து பரீட்சைக்குத் தோற்றியமைக்காக அவர்களது பெறுபேறுகள் இரத்துச் செய்யப்படமாட்டாதெனவும் 06

## இலங்கையில் அவுஸ்திரேலிய யுனைடெட் பெற்றோலியம்

### ஆகஸ்ட் முதல் ஆரம்பம்

United

'யுனைடெட் பெற்றோலியம் அவுஸ்திரேலியா' என்ற அவுஸ்திரேலிய நிறுவனம் இலங்கையில் எரிபொருள் விநியோகத்தை ஆரம்பிக்கவுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்துக்கு முன்னர், இந்நிறுவனம் தனது நடவடிக்கைகளை நாட்டில் முன்னெடுக்கும் என 06

## களுத்துறை, பேருவளை ஆசிரியர் வெற்றிடங்களை உடன் நிரப்பவும்

### கல்வியமைச்சரிடம் கோருகிறார் இம்தியாஸ்


லோரன்ஸ் செல்வநாயகம்



களுத்துறை, பேருவளை, கல்வி வலயங்களில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வியமைச்சு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். மேற்படி கல்வி வலயங்களில் 06

## மண்ணுக்குள் புதையுண்டு 03 வயது சிறுமி மரணம்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்



**மண்சரிவில் சிக்கிய 03 வயது சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்தார். இச்சம்பவம் மாவனல்லை மங்களகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் (04) இடம்பெற்றுள்ளது.** 06

## Gas விலைகள் குறைந்ததால் சிற்றுண்டிகளின் விலையில் வீழ்ச்சி

சமையல் எரிவாயு விலைகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதையடுத்து உணவுப்பொதிகள், கொத்துரொட்டி என்பவற்றி ன் விலைகளும் 25 ரூபாவால் குறக்கப்பட்டுள்ளன.

சமையல் எரிவாயு விலை குறைப்பின் நன்மை நுகர்வோருக்கு வழங்கப்படும் நோக்கிலேயே, இவ்விலை குறைப்பு செய்யப்படுவதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக நேற்று முதல் உணவுப்பொதி, கொத்து ஆகியவற்றின் விலையை 25 ரூபாவினால் குறைக்க சங்கம் தீர்மானித்துள்ளது. இதேபோன்று ஏனைய வகை சிற்றுண்டி வகைகளின் விலையும் 10 ரூபாவினால் 06

## எச்சரிக்கை விடுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளை அகற்ற நடவடிக்கை



### 30 பேர் பலி, 3,261 குடும்பங்கள் பாதிப்பு; வெள்ள நிவாரண நிதி 33% அதிகரிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களில் நேற்று வரை 30 பேர், உயிரிழந்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் 06

## சுற்றுலா வந்த இந்திய தம்பதி கிரிந்த கடலில் மூழ்கி மரணம்

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

இந்தியாவிலிருந்து சுற்றுலா வந்த இந்திய தம்பதியினர், கிரிந்தை கடலில் நீராடிக் கொண்டிருந்த போது கடலில் மூழ்கி நேற்று (05) உயிரிழந்துள்ளதாக திஸ்ஸமகாராமை பொலிஸார் தெரிவித்தனர்.

35 வயதான கணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்ததுடன், 33 வயதுடைய மனைவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 06

# பசுமை இலக்குகளை அடைவதற்கு 2040 இல், இலங்கை அர்ப்பணிக்கும்

## கார்பன் உமிழ்விற்கான கொள்கையை உள்வாங்கிய முதலாவது ஆசிய நாடு இலங்கை.. உலக சுற்றாடல் தின நிகழ்வில் ஜனாதிபதி





பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்ளும் அதேவேளை 2040 களில் பசுமை இலக்குகளையும் அடைந்துகொள்ள இலங்கை அர்ப்பணிக்கும் என உறுதியளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்விற்கான உலகின் இலக்கை, தேசிய கொள்கையில் உள்வாங்கிய முதலாவது ஆசிய நாடு இலங்கையாகும் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (05) நடைபெற்ற உலக சுற்றாடல் தின நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி,

காலநிலை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுப்பதற்கான நாட்டின் தற்போதைய சுற்றாடல் செயற்பாடுகளை, சம்பிரதாய வேலைத்திட்டங்களுக்கு மட்டுப்படுத்த முடியாது. இதனை முன்னோக்கிக் கொண்டு சென்று நாட்டின் பொருளாதார மற்றும் வெளிவிவகார கொள்கைகளிலும் உள்வாங்க வேண்டியது அவசியம்.

அதேபோல், காலநிலை மாற்றங்கள் மற்றும் காலநிலை மாற்றங்களுக்கான மத்திய நிலையச் சட்டமூடாக சுற்றாடல், காலநிலை மாற்றங்களுக்கு அமைவான சட்டரீதியான கட்டமைப்பு நாட்டுக்குள் உருவாக்கப்படும். இவ்வாறான தொரு சட்டக் கட்டமைப்பை எந்தவொரு நாட்டிலும் காண முடியாது.

காலநிலை மாற்றம் தொடர்பான (Cop) மாநாட்டிலும் ஏனைய சர்வதேச அரங்கங்களிலும், இலங்கை முன்னின்று செயற்படுகிறது. இதற்கான அடிப்படை முன்னெடுப்பாக காலநிலை மாற்றங்கள் தொடர்பிலான சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான சட்டமூலத்தை அடுத்த வருடம் ஜூன் மாதத்திற்கு முன்னதாக சட்டபூர்வமாக்க எதிர்பார்த்துள்ளோம்.

காலநிலை அர்த்தங்களுக்கு ஈடுகொடுப்பதற்கான மேற்கத்திய நாடுகளும் அபிவிருத்தி அடைந்த நாடுகளும் நிதி வழங்குவதாக உறுதியளித்திருந்தாலும், அது குறித்து நம்பிக்கை கொள்ள முடியாது.

அமெரிக்காவும் ஐரோப்பாவும் இவ்வருடத்தில் உக்ரைன் யுத்தத்துக்கு ஒதுக்கியிருக்கும் தொகையை கொண்டு, இரு வருடங்கள் காலநிலை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்க முடியும்.

காலநிலை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுப்பதற்கு குறைந்த வருமானம் ஈட்டும் நாடுகள், அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு அழுத்தம் கொடுப்பது அவசியம். வெப்பவலய நாடுகள் தமக்கு தேவையான நிதியை தேடிக்கொள்வதும் அவசியம்.

"பயனுள்ள பூமிப் பயன்பாட்டின் ஊடாக ஆரோக்கியமான இல்லம்" எனும் தொனிப்பொருளில் உலக சுற்றாடல் தின கொண்டாட்டம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றதுடன், "தேசிய பசுமை கொள்முதல் கொள்கை" ஜனாதிபதி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசமாக இரத்தினபுரி மாவட்டத்தின் வர்ண கலவத்தை பிரதேசத்தை பிரகடனப்படுத்துவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலிலும் இதன்போது ஜனாதிபதி கையொப்பமிட்டார்.

08 பாடசாலை சுற்றாடல் முன்னோடிகளுக்கும் ஜனாதிபதியினால் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டன.

# இலங்கையில் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்துக்கு Forever நிறுவன பங்களிப்பு மிக இன்றியமையாதது

## கலாநிதி பந்துல குணவர்தன





இலங்கையின் முன்னணி அழகுசாதனப் பொருட்கள் நிறுவனங்களில் ஒன்றாகவும் தெற்காசியாவின் மிகப் பெரிய அழகுசாதனப் பொருட்கள் உற்பத்தியாளராகவும் கருதப்படும் 4ever skin natural பிராண்டின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தயாரிப்புகளின் அறிமுகம் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் தலைமையில் இடம்பெற்றது.

"Derma Elite" என்ற சர்வதேச தோல் பராமரிப்பு தயாரிப்பு வரிசை " மற்றும். கேச பராமரிப்பு ஷாம்புவான "Viger O 5" ஷாம்பும் இதன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டது.

தற்போது அறுபது சர்வதேச சந்தைகளுக்கு தனது தயாரிப்புகளை ஏற்றுமதி செய்து வரும் Forever, நாட்டின் அந்நியச் செலாவணி வருமானத்தில் பெரும் பங்களிப்பை வழங்கும் நிறுவனமாகவும் உள்ளது.இந்நிகழ்வில், நிறுவனம் புதிதாக உருவாக்கிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தியதுடன்,அந்த தயாரிப்புகள் தொடர்பான சமூக ஊடக பக்கங்களையும் அறிமுகப்படுத்தியது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன,

"சுதந்திரத்திற்குப் பிறகு, இலங்கையின் பொருளாதாரத்தில் இரண்டு முக்கிய கட்டமைப்பு சிக்கல்கள் உள்ளன. முதலாவதாக, அரச நிதி முகாமைத்துவம் தொடர்பானது. அரச வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை உள்ளது. நீண்ட காலமாக, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடன் வாங்குவதன் மூலம் அது தீர்க்கப்பட்டது. . வழக்கமாக இந்த நாட்டில் 20 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகிறன, இந்த நாட்டில் விவசாய, தொழில்துறை மற்றும் கனிம ஏற்றுமதி மூலம் ஈட்டப்படுவது 10, 12 பில்லியன் அமெரிக்க டொலர்களே. ஈட்டும் தொகையை விட இரண்டு மடங்கு செலவழிக்க இயலாது, கையிருப்பு பற்றாக்குறையை ஈடுகட்ட, ஒவ்வொரு அரசாங்கமும் கடன் வாங்க வேண்டும். நீண்ட நாட்களாக கடன் வாங்கி, கடனை செலுத்த முடியாமல், ரூபாய் மதிப்பு சரிந்துள்ளது. சுதந்திரத்தின் போது, ஒரு அமெரிக்க டொலருக்கு 4.54 ரூபாய் வழங்கப்பட்டது, நவம்பர் 15, 1977 இல், ஒரு டொலருக்கு எட்டு ரூபாய் வழங்கப்பட்டது. , திறந்த பொருளாதாரத்தின் கீழ், டொலர் பதினாறு ரூபாய்க்கு சமமாக இருந்தது. அன்று முதல், மிதக்கும் மாற்று விகித முறை நிறுவப்பட்டது. இதன்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் ஒரு டொலர் 105 ரூபாவை எட்டியது. யுத்தத்தின் முடிவில் டொலருக்கு 131 ரூபா வழங்கப்பட்டது. அதன் பின்னர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் ஏற்பட்ட பெரும் பொருளாதார நெருக்கடியின் போது, வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறை, எரிபொருள், எரிவாயு, மருந்து இறக்குமதி செய்ய இயலாமை போன்ற வடிவங்களில் நாடு பல பிரச்சினைகளை எதிர்கொண்டது. அந்த நேரத்தில், டொலர் சுமார் 420 ரூபாயாக உயர்ந்தது. நாட்டின் அரசியல்வாதிகளால் இந்த நெருக்கடியை தீர்க்க முடியவில்லை. இதனை உற்பத்தி செயல்முறையை முடிந்தவரை மேம்படுத்துவதன் மூலமும் இறக்குமதியின் அளவைக் குறைப்பதன் மூலமும் அடைய முடியும். அப்போது நாட்டில் இருந்து வெளியேறும் அந்நியச் செலாவணி அளவு குறையும்.

# மினி சூறாவளி காரணமாக 204 குடும்பங்கள் பாதிப்பு; 64 வீடுகள் சேதம்

**புத்தளம் தினகரன் நிருபர்**



வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டிய கிழக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஹொரோம்பாவ, மெடிவலகெதர பிரதேசத்தில் வீசிய மினி சூறாவளி காரணமாக சுமார் 64 வீடுகள் கடுமையாக சேதமுற்றுள்ளன. இதன் காரணமாக 204 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது நானூறுக்கும் மேற்பட்ட மரங்கள் சரிந்து வீழ்ந்து, வீதிகள் மற்றும் வீடுகளுக்கு பாரிய சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

இந்நிலையில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு ஆறுதல் கூறவும் நிலைமையை நேரில் அவதானித்து தேவையான நடவடிக்கையை முன்னெடுக்கும் நோக்கில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் விஜயம் செய்தார்.

இதன்போது மெடிவலகெதர பிரதேசத்தில் வீதிகளில் வீழ்ந்து கிடந்த பாரிய மரங்களை உடனடியாக வெட்டி அகற்றி மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் போக்குவரத்துக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் துண்டிக்கப்பட்டுள்ள மின்சார விநியோகத்தை துரிதகதியில் சீரமைக்கவும் உரிய அதிகாரிகளுக்கு ஆளுநர் பணித்துள்ளார்.

சேதமடைந்துள்ள வீடுகள், பாதிக்கப்பட்ட மக்கள், கர்ப்பிணி தாய்மார்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரை நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறிய ஆளுநர், மீட்பு மற்றும் புனருத்தாபன நடவடிக்கையை உடனடியாக மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஆறுதல் கூறியதுடன், அவர்களின் கல்வி நடவடிக்கைகளை துரிதகதியில் மீள ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அவர் பணித்துள்ளார்.

சூறாவளி காரணமாக பாதிப்புற்றிருந்த மெடிவலகெதர ஜும்ஆ பள்ளிவாசலை பார்வையிட்டு, பள்ளிவாசலின் இமாம் மற்றும் நிர்வாக சபையினரிடம் சேத விபரங்களை அவர் கேட்டறிந்து கொண்டார்.

பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பள்ளிவாசலூடாக இலவசமாக சமைத்த உணவு உள்ளிட்ட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளமைக்கு இதன்போது ஆளுநர் நஸீர் அஹமட் தனது பாராட்டை தெரிவித்துள்ளார்.

# நகர்வலம்

## வெசாக் பக்தி கீதம் இசைக்கும் நிகழ்வு



ஏசியன் கிரமர் பாடசாலையின் பிள்ளைகள் வெசாக் பக்தி கீதம் இசைக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

வெசாக் தினத்தை முன்னிட்டு ஏசியன் கிரமர் பாடசாலையின் (AGS) மாணவர்கள் கொதட்டுவ புதிய நகரில் வெசாக் பக்தி கீதம் நிகழ்ச்சியை நடத்தினர். மத வேறுபாடின்றி பல்வேறு இனங்களைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்களின் பங்கேற்புடன் ஒரே மேடையில் வெசாக் பக்தி கீதம் பாடினர். ஏசியன் கிரமர் பாடசாலையின் ஸ்தாபகர் துஷாரி கோரலகேயின் பணிப்புரைக்கமைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட வெசாக் கூடுகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததோடு தானமாக கஞ்சியும் வழங்கப்பட்டது.

சன்மார்க்க சமுதாயத்தை உருவாக்கும் இலக்குடன் கொலன்னாவ மேற்கு சாசன பாதுகாப்பு சபை, இளம் பௌத்த சங்கம், கொலன்னாவ பிரதேச செயலகம், ஐக்கிய வர்த்தக சங்கம் இணைந்து கொதட்டுவ புதிய நகரில் வெசாக் உற்சவம் வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

# வெலிகம புதிய தெரு ஷாதுலிய்யா இளைஞர் முன்னணியின் 14ஆவது வருட பூர்த்தி

**வெலிகம தினகரன் நிருபர்**



வெலிகம புதிய தெரு ஷாதுலிய்யா இளைஞர் முன்னணியின் 14ஆவது வருட பூர்த்தி மற்றும் புதிய அலுவலகம் திறப்பு வைபவங்கள் அண்மையில் வெலிகம புதிய தெரு ஸாவியாவில் இடம்பெற்றது.

முன்னணியின் தலைவர் எம். ஆர்.முஹம்மத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முர்ஸிய்யா அரபுக் கல்லூரி அதிபரும் முன்னணியின் ஆலோசகருமான அல் உஸ்தாத் என். எம்.எம் அஸ்கின், போஷகர் அல்ஹாஜ் இன்ஆம் அப்துல்லாஹ் மற்றும் முன்னணியின் உறுப்பினர்கள், கலீபாக்கள், ஷாதுலிய்யா முக்கியஸ்தர்கள், ஸாதாத்மார்கள், உலமாக்கள், ஊர் மக்கள் என பலரும் கலந்து கொண்டதாக செயலாளர் முகத்துமுஷ் ஷாதுலி எம். எப்.முகம்மது தெரிவித்தார். இம்முன்னணி ஷாதுலிய்யா தரீக்காவின் வளர்ச்சிக்காக பல செயற்திட்டங்களை வகுத்து செயற்படுத்தி வருவதோடு, மக்களின் நலன் கருதி சமூக சேவைகளையும் மேற்கொண்டு வருவதாக செயலாளர் குறிப்பிட்டார்.



கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரியின் வருடாந்த இன்டர்நெட் கலாசார விழா அண்மையில் சினமன் லேக் சைட் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் Country Manager – Sri Lanka and Maldives at MasterCard சந்துன் ஹபுகொட பிரதம அதிதியாக கலந்து கொண்டார். (படம்: ருஸைக் பாரூக்)





அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் அகுரஸ்ஸ கொடப்பிட்டிய ஸாதாத் முஸ்லிம் மகா வித்தியாலயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மாணவர்களது கற்றல் உபகரணங்களும் வெள்ளத்தினால் அள்ளுண்டு சென்றன. மேலும் அப்பகுதி வீடுகள், பள்ளிவாசல் மற்றும் விற்பனை நிலையங்களும் பாதிக்கப்பட்டிருந்தன. அக்கம் பக்கத்திலுள்ள கிராமவாசிகள் அங்கு சென்று துப்புரவு பணிகளில் ஈடுபட்டனர். (படம்: வெலிகம தினகரன் நிருபர்)

# தர்கா நகரில் ஒன்றுகூடல்

**பேருவளை விசேட நிருபர்**



தர்கா நகர் ஸாகிரா மகா வித்தியாலயத்தில் 1982ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதர பரீட்சை எழுதிய மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்ச்சி அண்மையில் தர்கா நகர் மீரிப்பென்னை நதா ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த ஒன்றுகூடலின் போது எதிர்காலத்தில் சமூக, சமய, கலாசார விடயங்களில் கரிசனை காட்டி அவற்றை முன்னெடுப்பதற்காக நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இந்த நிர்வாகக் குழுவின் தலைவராக ஏ.ஜே.எம்.பாரி, செயலாளராக ஏ.ஐ.எம்.பஹ்மி, பொருளாளராக ஏ.பீ.எம்.ஸுஹைர், உப தலைவர்களாக எம்.இஸட்.எம்.அமீஸ், எம். டீ.எம்.அஸ்லம், எம்.எஸ்.எம். ஸரபான், உப செயலாளர்களாக எம்.ஆர்.எம்.ஹில்மி, எம்.என். நியாஸ் அஹமட், உப பொருளாளர்களாக இஸட்.ஏ.எம்.ரஸ்லான், எம். எஸ்.எம்.பைஸர், குழு உறுப்பினர்களாக ஏ.எம்.யூசுப் ஐத்ரூஸ், எஸ். எம்.எம்.நிஹ்மத்துல்லாஹ், என். எம்.எம்.ஐத்ரூஸ், ஏ.எச்.எம்.பஸ்மி, எம்.வை.எம்.அஸ்லம், ஏ.ஆர்.எம். அன்வர், எம்.எம்.ருஸ்பி (ரிஸ்வி), எச்.ஏ.ஸிபர் இஸ்மாயில், எம். டீ.எம்.நதீக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜூன் 6 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN



தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 04.32 |
| லுஹர் | 12.10 |
| அஸர் | 03.36 |
| மஃரிப் | 06.24 |
| இஷா | 07.40 |

இன்றைய சுபதினம்

குரோதி வருடம் வைகாசி 24

ராகுகாலம் : பகல் : 1.22 - 2.52வரை
சுபநேரம் : காலை : 7.22 - 8.52வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

# புதிய இராஜதந்திரிகள் ஜனாதிபதியிடம் நற்சான்றுப் பத்திரங்கள் கையளிப்பு

புதிதாக நியமிக்கப்பட்ட 05 உயர்ஸ்தானிகர்கள் மற்றும் 09 தூதுவர்கள் நேற்று (05) கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர்.

நியூசிலாந்து, சைப்ரஸ் குடியரசு, மாலைதீவுகள், சியரா லியோன் குடியரசு மற்றும் மொரீஷியஸ் குடியரசு என்பவற்றுக்கான உயர்ஸ்தானிகர்களும் குவாத்தமாலா குடியரசு, அல்ஜீரியா மக்கள் ஜனநாயகக் குடியரசு, எஸ்டோனியா குடியரசு, லாவோஸ் மக்கள் ஜனநாயக குடியரசு, கொலம்பியா குடியரசு, துருக்கி குடியரசு, அயர்லாந்து, ஹெலனிக் குடியரசு (கிரீஸ்) மற்றும் பல்கேரியா குடியரசு ஆகிய நாடுகளின் புதிய தூதுவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த புதிய உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்களை வரவேற்பதற்காக கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஒரு சிறிய விழாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நற்சான்றுப் பத்திரங்கள் வழங்கப்பட்ட புதிய உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்களின் விபரம் பின்வருமாறு:

01. ஓமார் கெஸ்டனெடா சோலாரேஸ் குவாத்தமாலா குடியரசு தூதுவர் (புது டில்லி)

*(Omar Castaneda Solares. Ambassadordesignate of the Republic of Guatemala based in New Delhi)*

02. அலி அச்செய் அல்ஜீரியா மக்கள் குடியரசு தூதுவர் (புது டில்லி)

*(Ali Achoui.Ambassadordesignate of the People's Democratic Republic of Algeria in New Delhi*

03. மர்ஜே லூப் எசுத்தோனியா குடியரசு தூதுவர் (புது டில்லி)

*(Marje Luup.Ambassadordesignate of the Republic of Estonia in New Delhi)*

04. பௌன்மி வன்மணி லாவோஸ் மக்கள் குடியரசின் தூதுவர் (புது டில்லி)

*(Bounmy Vanmany. Ambassadordesignate of the Lao People's Democratic Republic based in New Delhi)*

05. விக்டர் ஹ்யூகோ ஜரமிலோ கொலம்பியா குடியரசு தூதுவர் (புது டில்லி)

*(Victor Hugo Jaramillo. Ambassadordesignate of the Republic of Colombia based in New Delhi)*

06. டேவிட் கிரிகரி பைன் நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் (கொழும்பு)

*(David Gregory Pine.High Commissionerdesignate of New Zealand based in Colombo)*

07.செமிஹ் லுட்பு தரகத் துருக்கி குடியரசு தூதுவர் (கொழும்பு)

*(Semih Lutfu Turgut. Ambassadordesignate of the Republic of Turkiye based in Colombo)*

08. எவகோரஸ் வர்யோனைட்ஸ் சைப்ரஸ் குடியரசு உயர்ஸ்தானிகர் (புது டில்லி)

*(Evagoras Vryonides.High Commissionerdesignate of the Republic of Cyprus based in New Delhi)*

09. கெவின் கெலி அயர்லாந்து தூதுவர் (புது டில்லி)


*(Kevin Kelly.Ambassadordesignate of Ireland based in New Delhi)*

06

தினகரன்
THINAKARAN

# 92 வருடங்களுக்கு முன் தினகரன்

இன்று 06 ஜூன் 1932


வியாபார விருத்தி.
புறக்கோட்டையில் சில தினங்களாக நல்ல வியாபாரம்.

## வியாபார விருத்தி

### புறக்கோட்டையில் சில தினங்களாக நல்ல வியாபாரம்

அயல் நாடுகளிலிருந்து சரக்குகள் வரவழைத்து வியாபாரஞ்செய்யும் புறக்கோட்டையிலுள்ள வியாபாரஸ்தலங்களில் கடந்த சில தினங்களாக நல்ல வியாபாரம் நடந்து வருவதாகத் தெரிகிறது. இவ்வியாபார ஸ்தலங்களிலிருந்து இலங்கையின் ஏனைய பாகங்களிலுள்ளவர்களுக்கு அனுப்பப்பட்டு வந்த சரக்குகளின் தொகை கடந்த ஆறு மாதங்களாகப் படிப்படியாகக் குறைந்துகொண்டு வந்திருக்கிறது. வியாபாரம் அநேகமாக ஸ்தம்பித்துவிட்டதென்று சொல்லக்கூடிய நிலைமையும் சிறிது காலமாக ஏற்பட்டிருந்தது.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# இளைஞர் விவசாய தொழில் முனைவோர் மாதிரிக் கிராமங்கள்

## முல்லைத்தீவில் 02 , அநுராதபுரத்தில் 03 கிராமங்கள் அபிவிருத்தி

ஐந்து கிராமங்கள், இளைஞர் விவசாய தொழில்முனைவோர் மாதிரிக் கிராமங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதற்காக

முல்லைத்தீவு மாவட்டத்தில் பற்றக்குளி, கல்யாணிபுரம் மற்றும் அநுராதபுரம் மாவட்டத்தில் ஆடியாகல, நெல்லிக்குளம, நல்லமுதவ ஆகிய மூன்று கிராமங்களும்

தெரிவு செய்யப்பட்டுள்ளன. விவசாயம் மற்றும் பெருந்தோட்டகைத்தொழில்அமைச்சு, இக்கிராமங்களை அபிவிருத்தி செய்யும்.

ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்ளடக்கிய வகையில் 160 இளைஞர் விவசாய தொழில்முனைவோர் மாதிரி கிராமங்களை அமைப்பதற்கு வேலைத் திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன. இதன் முன்னோடியாகவே இந்த ஐந்து கிராமங்களும் முதற்கட்டமாக தெரிவாகியுள்ளன.

இதற்கான ஆரம்பகட்ட நிகழ்வு அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் அடுத்த வாரம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்வருடத்தில் இளைஞர் விவசாய தொழில்முனைவோர் மாதிரி கிராம வேலைத் திட்டத்திற்காக அரசாங்கம் 1,600 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது

# கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்கு புதிய தலைவர் நியமனம்



இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக, முகாமைத்துவப் பணிப்பாளராக பதவி வகித்த துஷார லொக்குகுமார (30) நியமிக்கப்பட்டுள்ளார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவருக்கு இந்நியமனத்தை வழங்கினார்.

06

# தே.ம.ச தொழிற்சங்கவாதியுடன் கிழக்கு ஆளுநர் ஜெனீவாவில் பேச்சு



ஜெனிவாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான், தேசிய மக்கள் சக்தியின் தொழிற்சங்கவாதியான வசந்த சமரசிங்கவை ஜெனிவாவில் சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின் போது தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இருவருக்குமான நீண்ட கால நட்பு குறித்து நினைவு கூர்ந்ததுடன், உலகளவில் தொழிற்சங்கத்தின் நலனில் இருவரும் வலுவாக இணைந்து பணியாற்றியமை தொடர்பிலும் நினைவு கூர்ந்தனர்.

இச்சந்திப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவர் இராஜதுரையும் கலந்துகொண்டார்.

# அநுராதபுரத்தில் தேசிய பொசன் விழா

## விழா ஏற்பாட்டுக் குழு நேற்று அறிவிப்பு

அநுராதபுரத்தை கேந்திரமாகக்கொண்டு திட்டமிட்டபடி தேசிய பொசன் விழாவுக்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என, அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தெரிவித்தார். தேசிய பொசன் விழா ஏற்பாட்டுக் குழுவின் கூட்டம் நேற்று முன்தினம் (04) அநுராதபுர மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்விடயத்தை குறிப்பிட்டார்.

தேசிய பொசன் விழாக் குழுவின் தலைவராக அநுராதபுரம் மாவட்டச் செயலாளர் செயல்படுகின்றார். இதற்கமைய இந்த குழுக்கூட்டம் நடைபெற்றது.

அநுராதபுரம் அட்டமஸ்தானாதிபதி பிரதம சங்கநாயக்க தேரர் சங்கைக்குரிய பல்லேகம ஹேமரத்தன தேரர் தலைமையில், இந்த கூட்டம் நடைபெற்றது. அநுராதபுரம் அட்டமஸ்தான, மிஹிந்தலை மற்றும் தந்திரிமலை விகாரைகள்,பிற ஆலயங்களில் பொசன் சமய வழிபாடுகள் வழமைபோன்று நடைபெறுவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தேசிய பொசன் குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக 18 முதல் 24 வரை 'தேசிய பொசன் வாரம்' ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் இதன் போது தெரிவித்தார்.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் இராமேஸ்வரத்தில் நேற்று தஞ்சம்



(மன்னார் குறூப் நிருபர்)

சட்டவிரோதமாக படகில் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர்,நேற்று (05) இராமேஸ்வரத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

முல்லைத்தீவிலிருந்து மன்னாருக்குச் சென்று மன்னாரிலிருந்து சட்டவிரோதமாக படகில் புறப்பட்ட இவர்களில்,நான்கு பிள்ளைகளும் அடங்குவர் .

இவர்களை மீட்ட கரையோர பொலிஸார் மண்டபம் கரை யோர பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இராமேஸ்வரத்தையடுத்த சேராங்கோட்டை யைச் சென்றடைந்தபோதே, இவர்கள் கைதாகி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 24ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 28

## குறள் தரும் சிந்தனை



மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

*அனிச்சப்பூ மோந்தவுடன் வாடிவிடும்:
அதுபோல் முகம் மலராமல் வேறு பட்டு
நோக்கியவுடன் விருந்தினர் வாடி நிற்பார்.*

# நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காக பொறுப்புடன் செயற்படுவதன் அவசியம்

நாடு பிரதான தேர்தலை எதிர்நோக்கியுள்ளது. இவ்வருடத்தின் பிற்பகுதியில் இத்தேர்தல் நடத்தப்படவிருக்கிறது. பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி கட்டம் கட்டமாக மீட்சி பெற்று நம்பிக்கை தரும் வகையில் நாடு குறுகிய காலப்பகுதிக்குள் மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்துள்ளது.

இவ்வாறான நிலையில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையை ஏற்றார். அத்தோடு பொருளாதார ரீதியில் நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களையும் அவர் விரிவான அடிப்படையில் முன்னெடுத்தார். அதன் பயனாக பொருளாதார வீழ்ச்சி காலத்தில் நாடு எதிர்கொண்ட நெருக்கடிகளும் அசௌகரியங்களும் குறுகிய காலப்பகுதியில் நீங்கின.

இவ்வாறான சூழலில் தான் நாடு தேசிய தேர்தலை எதிர்நோக்கியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சிகள் தேர்தலை இலக்காகக் கொண்டு நகர்வுகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றன. அரசியல் மேடைகளில் வீண் பேச்சுக்களை முன்னெடுப்பதிலும் கண்டபடி வாக்குறுதிகளை அள்ளி வீசுவதிலும் நாம் சளைத்தவர்கள் அல்லர் என்றபடி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் கடந்த காலங்களைப் போன்று அரசியல் மேடைகளில் வீண் பேச்சுக்களை முன்னெடுக்கக்கூடிய காலம் இதுவல்ல. அதனை எதிர்க்கட்சிகளும் உணர்ந்து செயற்படுவது அவசியம்.

ஏனெனில் நாடு பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்திருக்கிறது. அதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் பயனாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களும் இலங்கையின் பெருளாதார மேம்பாட்டுக்கு ஒத்துழைப்பு நல்க முன்வந்து ஒத்துழைக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகளின் பிரகாரம் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமாக பேணுவதற்கு பல பொருளாதார இலக்குகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அந்த இலக்குகளை மீறுவது நாட்டின் பொருளாதாரத்தை அழிவுப் பாதையிலேயே இட்டுச் செல்லும்.

அதனால்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேகாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய போது, 'சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்கள் மீறப்படுமானால் நாடு பின்னோக்கிச் செல்லும். எனவே அந்த உடன்படிக்கைகள் அனைத்தையும் அமுல்படுத்துவது அவசியம். அதன் நிமித்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொருளாதார நிலைமாற்ற சட்டமூலத்திற்கு ஆதரவளிக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பு' என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை நிலைபேறானதாக மேம்படுத்தவும் முன்னேற்றவும் இச்சட்டக் கட்டமைப்பு இன்றியமையாததாகும்.

தற்போதுபொருளாதார ரீதியில் நாடு முன்னோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது. சுற்றுலாத்துறை முன்னேற்றமடைந்துள்ளது. நாட்டின் வறுமையை குறைப்பதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் நிமித்தம் விவசாய நவீனமயமாக்கல் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்தாமல் வறுமையை ஒழிக்க முடியாது.

மேலும் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான இலக்குகள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. இதன்படி 2027 இற்குள் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாக உயர வேண்டும். எதிர்காலத்தில் இது 08 சதவீதமாக அதிகரிக்கப்பட வேண்டும். அடுத்தாண்டுக்குள் வேலையின்மை 5 சதவீதமாக குறைக்கப்பட வேண்டும். மேலும், வறுமையை 2027 இல் 25 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாகவும் 2035இற்குள் 10 சதவீதமாகவும் குறைக்கப்பட வேண்டும். அவை இலக்குகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

பொருளாதார நிலைமாற்ற சட்டமூலம் இப்பொருளாதார இலக்குகளையும் ஒப்பந்தங்களையும் சட்டப்பூர்வமாக்கக்கூடியதாக உள்ளது. எமக்கு கடன் வழங்கிய நாடுகள், இலங்கை இந்தத் திட்டத்தைத் தொடரும் என்பதில் திருப்தியடைந்துள்ளதால் அவர்களின் ஆதரவை இலங்கை பெற்றுக்கொள்ளுகிறது.

அதேநேரம் இவ்வைபவத்தில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில், 'இப்பணியை முன்னெடுப்பதாக நாம் அறிவித்துள்ள நிலையில், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் எங்களுக்கு முழு ஆதரவை அளித்துள்ளது. மேலும், நாங்கள் பெற்ற வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதை இலகுபடுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். இச்செயற்பாட்டை மீறினால் நாடென்ற வகையில் பின்னோக்கி சென்று விடுவோம். சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை இழக்க நேரிடும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே நாட்டின் பொருளாதாரத்தைக் கருத்தில் கொண்டு கடந்த காலங்களைப் போலல்லாது எதிர்க்கட்சிகளும் பொறுப்புடன் செயற்பட வேண்டிய காலம் இது. அது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும் மக்களின் நலன்களுக்கும் அளிக்கும் பாரிய சேவையாக அமையும் எனலாம்.

editor.tkn@lakehouse.lk

---

## குடியரசு தலைவர் திரவுபதி முர்முவிடம் இராஜினாமாக் கடிதம் கையளிப்பு

# பிரதமராக நாளைமறுதினம் பதவியேற்கிறார் மோடி

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிரதமர் பதவியை நேற்று இராஜினாமா செய்தார். குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை சந்தித்து நரேந்திர மோடி தனது இராஜினாமா கடிதத்தை கையளித்தார்.

நரேந்திர மோடி அமைச்சரவையின் இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்துவிட்டு, ஆட்சி அமைக்க உரிமை கோரவிருந்தார்.

பிரதமர் நரேந்திர மோடியுடன் ராஜ்நாத் சிங், அமித் ஷா உள்ளிட்டோரும் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு சென்றனர். பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அமைச்சரவையின் இராஜினாமாவை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஏற்றுக் கொண்டார். ஒன்றிய அமைச்சரவை கூட்டத்துக்கு பின் குடியரசுத் தலைவரை சந்தித்து நரேந்திர மோடி ராஜினாமா கடிதம் அளித்திருந்தார். 17 ஆவது மக்களவையை கலைக்கும் பரிந்துரைகளையும் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஏற்றுக்கொண்டார்.

எதிர்வரும் 8ஆம் திகதி 3ஆவது முறையாக பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கவுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

லோக்சபா தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 291 இடங்கள் கிடைத்துள்ளன. பா.ஜ.க தனித்து 240 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இதனால் மீண்டும் தே.ஜ.கூட்டணி ஆட்சி அமைக்கின்றது.

இந்நிலையில், பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் மோடியை பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. தற்போதைய லோக்சபாவை கலைக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இதேவேளை பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் பயணிப்பதில் உறுதியாக இருக்கிறேன். இன்று (ஜூன் 5) மாலை நடைபெற உள்ள கூட்டணி கூட்டத்தில் பங்கேற்க உள்ளேன்" என்று ஆந்திர முதல்வராக பொறுப்பேற்க உள்ள தெலுங்கு தேசம் கட்சி தலைவர் சந்திரபாபு நாயுடு நேற்று கூறியுள்ளார்.எனவே மோடி தலைமையில் புதிய அரசாங்கம் அமைவது உறுதியாகியுள்ளது.

ஆந்திர சட்டசபை தேர்தலில் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றிய தெலுங்கு தேசம் கட்சியின் சந்திரபாபு நாயுடு, ஜூன் 9 இல் முதல்வராக பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சந்திரபாபு நாயுடு என்.டி.ஏ கூட்டணியில் அங்கம் வகிப்பதை சஉறுதிப்படுத்தியது, இந்தியா கூட்டணியினரின் கனவு தகர்ந்ததாக பார்க்கப்படுகிறது. ஆந்திரா மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து, சபாநாயகர் பதவி, அமைச்சரவையில் இடம் உள்ளிட்ட கோரிக்கைகளை தெலுங்கு தேசம் கட்சி முன்வைக்கும் எனக் கூறப்படுகிறது.

எதிர்வரும் 8 ஆம் திகதி நரேந்திர மோடி பதவி ஏற்கும் வரை அவர் காபந்து பிரதமராக நீடிப்பார்.

அதேநேரம் மறுபுறம் இந்தியா கூட்டணிக் கட்சித் தலைவர்களின் கூட்டமும் நேற்று நடைபெற்றது. காங்கிரஸ் தலைவர் கார்கே தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் சோனியா காந்தி, ராகுல் காந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், சமாஜ்வாதி கட்சி தலைவர் அகிலேஷ் உள்ளிட்டோரும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். இந்தியா கூட்டணி கூட்டத்தில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதுடன் வியூகம் அமைக்கவும் திட்டம் வகுக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் பதவி மிகவும் முக்கியமானது என்பதால் கடந்த இரண்டு முறை ஆட்சியிலும் அதை பா.ஜ.கவே தக்கவைத்துக் கொண்டிருந்தது. சென்ற முறை ஓம் பிர்லா சபாநாயகராக இருந்தார். அதற்கு முன்பும் சபாநாயகர் பா.ஜ.கவை சேர்ந்தவராகவே இருந்தார். ஆனால் இந்த முறை சபாநாயகர் பதவி எங்களுக்கு வேண்டுமென தற்போது பா.ஜ.க கூட்டணியில் முக்கிய தூண்களாக இருக்கும் சந்திரபாபுவின் தெலுங்கு தேசமும், நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளமும் நிபந்தனை விதித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.





## பெரும்பான்மையை நிரூபித்தது தேசிய ஜனநாயகக் கூட்டணி

சந்திரபாபு நாயுடு ஆந்திர மாநிலத்திற்குச் சிறப்பு அந்தஸ்து வழங்க வேண்டும் என்பதை நிபந்தனையாக வைத்துள்ளார். ஆந்திரா, தெலுங்கானா என மாநிலங்கள் பிரிக்கப்பட்ட சமயத்தில் இருந்து ஆந்திராவிற்குச் சிறப்பு அந்தஸ்து வேண்டும் என கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில், இந்த நிபந்தனையை தற்பொழுது மீண்டும் கையில் எடுத்துள்ளது தெலுங்கு தேசம்.

அதேபோல் பீகார் மாநிலம் பின்தங்கி இருக்கிறது எனவே எங்களுக்கும் சிறப்பு அந்தஸ்து வேண்டும் என மாநில முதல்வர் நிதிஷ்குமார் நிபந்தனை விதித்துள்ளார் என்று கூறப்படுகிறது. கூட்டணி கட்சிகளின் இந்த கோரிக்கைகளை பா.ஜ.க சமாளிக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. எனவே நேற்று நடைபெற்ற பா.ஜ.கவின் கூட்டணித் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

இந்நிலையில் நாளை ஏழாம் திகதி பா.ஜ.க கூட்டணியில் இடம்பெற்றுள்ள முதல்வர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

---

# ரஷ்ய நவீன இலக்கியத்தின் தந்தை அலெக்சாண்டர் புஷ்கின்

ரஷ்ய இலக்கிய சிருஷ்டி, பெருங்கவி அலெக்சாண்டர் புஷ்கின் பிறந்த தினமே (ஜூன் 06, 1799) ரஷ்ய மொழி தினமாக ஒவ்வொரு ஆண்டும் கிழக்கு ஐரோப்பாவிலும் ரஷ்யாவிலும் கொண்டாடப்படுகிறது.

ஆங்கில இலக்கிய மேதை ஷேக்ஸ்பியருக்கு ஒப்பானவராக கருதப்படுவரே ரஷ்ய இலக்கிய சிருஷ்டி அலெக்சாண்டர் புஷ்கின்.

ரஷ்யக் கவிஞரும், காதல் கவிதைகள் யுகத்தின் சிறந்த படைப்பாளியுமாக அலெக்ஸாண்டர் செர்ஜியேவிச் புஷ்கின் மதிக்கப்படுகிறார்.

அவர் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் 1799 இல் பிறந்தவ ர். இளம் வயதிலேயே தனது நகர நூலகத்தில் பல புத்தகங்களைப் படித்தார். இந்தச் சூழல் இலக்கிய தாகத்தை ஊற்றெடுக்க வைத்தது.

பின்னர் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் உள்ள பாடசாலையில் பயின்றார். படிக்கும்போதே 15 வயதில் தனது முதல் கவிதையை எழுதி வெளியிட்டார்.

விரைவிலேயே இலக்கிய உலகில் அங்கீகாரம் பெற்றார். அலெக்சாண்டர் புஷ்கின் தனது கவிதைகளிலும் நாடகங்களிலும் உரைநடையைக் கையாள்வதில் முன்னோடியாகவிருந்தார். அத்துடன் நவீன ரஷ்ய இலக்கியத்தில் ஒரு தனித்துவமான கதைசொல்லும் பாங்கையும் உருவாக்கியிருந்தார். இவை முன்னெப்போதுமில்லாத அளவில் பிற்கால ரஷ்ய எழுத்தாளர்களிடம் மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தன.

சர்வதேச இலக்கிய வானில் இவரது செல்வாக்கு என்றும் மேலோங்கி பறந்தது. கவிதை, நாடகங்கள், உரைநடைகளைக் கையாள்வதில் முன்னோடியாகவும் கதைசொல்லும் பாணியில் புஷ்கின் தனித்துவம் வாய்ந்தவராகவும் திகழ்ந்தார். அத்துடன் ரஷ்ய இசை அமைப்பாளர்களுக்கு இவரது கவிதைகள் உந்து சக்தியாக அமைந்தன. இவரது தி ஸ்டோன் கெஸ்ட், மொஸார்ட் அண்ட் ஸலியெரி ஆகிய நாடகங்கள் புகழ்பெற்றவை.

இவரது எழுத்தில் நிகோலாய் கராம்சின், பைரன் பிரபு ஆகியோரது தாக்கங்கள் காணப்பட்டன. கொண்டோர் ஃபியோடார் டாஸ்டோவ்ஸ்கி, விளாடிமிர் நபோகோவ், ஹென்றி ஜேம்ஸ் உள்ளிட்டோர் இவரது தாக்கத்தைப் பிரதிபலித்த பிரபல படைப்பாளிகள்.






புஷ்கின் எழுதிய நாவலான 'யூஜின் ஆனிஜின்', ரஷ்ய வாழ்க்கையின் கலைக்களஞ்சியம் எனப்படுகிறது.

'போரிஸ் குட்னவ்' என்ற தனது மிகவும் பிரபலமான நாடகத்தை எழுதினார். 1820 இல் ரஸ்லன் அண்ட் லுட்மிலா என்ற தனது முதல் நீண்ட கவிதையை வெளியிட்டார். குறுகிய காலமே வாழ்ந்த இவர், உரைநடை கவிதை, கவிதை, நாவல், சிறுகதை, நாடகம், விமர்சனக் கட்டுரைகள், கடிதங்கள் என இலக்கியத்தின் அனைத்து களங்களிலும் முத்திரை பதித்தார். தீவிர இலக்கியவாதிகளுக்கு ஆதரவாக குரல் கொடுத்தார். ஜார்அரசின் கோபத்துக்கு ஆளானதால், தலைநகரைவிட்டு வெளியேறினார். காகசஸ், கிரிமியா ஆகிய இடங்களுக்குச் சென்றார். 1823ல் பல காதல் காவியங்களைப் படைத்தார். இவரது படைப்புகள் பிற்கால ரஷ்ய எழுத்தாளர்களிடம் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தின.

நவீன ரஷ்ய இலக்கியத்தின் தந்தையாக புஷ்கின் கருதப்படுகிறார். புஷ்கின் எந்த சூழலிலும் சுயமரியாதையை இழக்காமல் உழைக்கும் மக்களுக்காக குரல் கொடுத்தார். இதனால் அன்றைய ரஷ்யா முழுவதும் ஜார் மன்னரின் உளவாளிகள் தீவிரமாக புஷ்கினை கண்காணித்து வந்ததால் படைப்புகளை வெளியிட முடியாத நிலை இருந்தது.

புஷ்கினின் படைப்புகள் ஆங்கிலத்தில் மட்டுமன்றி, பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு பல நாடுகளில் வெளிவந்தன. நவீன ரஷ்ய இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்பட்ட புஷ்கின் 38 வயதில் (1837) மறைந்தார். இன்றும் ரஷ்யாவில் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் கடைசியாக புஷ்கின் வாழ்ந்த வீடு தற்போது அருங்காட்சியகமாக மாற்றப்பட்டுள்ளது.



ஐங்கரன் விக்கினேஸ்வரா...

## அன்னாரின் பிறந்த தினமான இன்று ரஷ்ய மொழிதினம் அனுஷ்டிப்பு

---

# இலங்கையில் இருந்து 20 பேருக்கு ஹஜ் கடமை நிறைவேற்ற வாய்ப்பு

இலங்கைக்கு சவுதி அரேபியாவினால் தொடர்ந்தும் வழங்கப்படும் உதவிகளில் இம்முறை 20 இலங்கையர்களுக்கு ஹஜ் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் சவுதி அரேபியா இச்சந்தர்ப்பத்தை உலக முஸ்லிம்களுக்கு வழங்குகிறது. இம்முறை கடந்த வருடத்தை போன்று பாலஸ்தீனிய மக்களுக்கு விஷேட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. காஸா போரில் பாதிக்கப்பட்ட மக்களின் உறவினர்களில் 1000 பேருக்கு இலவச ஹஜ் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சவுதி அரேபியாவில் அறுவை சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்ட ஒட்டிப் பிறந்த குழந்தைகளின் பெற்றோருக்கும் சவுதி அரேபிய மன்னரின் விருந்தினராக செல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

மொத்தமாக 88 நாடுகளைச் சேர்ந்த 2300 பேர் இம்முறை சவுதி அரேபிய மன்னரின் விருந்தினர்களாக செல்கின்றனர். இம்முறை இலங்கையில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களில் உலமாக்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊடகவியலாளர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் போன்றோர் அடங்குவர். இவர்களை வழியனுப்பும் நிகழ்வு சவுதி அரேபிய தூதரகத்தில் இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சவுதி அரேபிய இஸ்லாமிய மதவிவகார அமைச்சின் பிரதிநிதி அஷ்ஷைக் பத்ர் அல் அனஸி கலந்து கொண்டார். இக்குழு இம்மாதம் 8 ஆம் திகதி புறப்படும்.

இலங்கையில் இருந்து மன்னரின் விருந்தினர்களாகச் செல்லும் குழுவினருக்கு சவுதி அரேபிய தூதுவர் மற்றும் சவுதி இஸ்லாமிய மத விவகார அமைச்சின் பிரதிநிதி ஆகியோரினால் ஹஜ் கடமையை நிறைவேற்றத் தேவையான பொருட்கள் அடங்கிய ஒரு பொதி வழங்கப்பட்டது.

இதேவேளை இலங்கையிலிருந்தும் 10 பேருக்கு இம்முறை உம்ரா செய்வதற்கு கடந்த மார்ச் மாதம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. மன்னரின் வழிகாட்டலின் கீழ் சவூதி அரேபிய இஸ்லாமிய விவகார அமைச்சு இதனைப் பொறுப்பேற்று செய்திருந்தது. உலகளாவிய ரீதியில் 1000 பேருக்கு இந்த வாய்ப்பு அளிக்கப்பட்டதோடு, நான்கு கட்டங்களாக பிரித்து இறுதியாக 250 பேரில் இலங்கையைச் சேர்ந்தவர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தனர். இறுதி விருந்தினர்களில் 17 நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

ஹஜ் மற்றும் உம்ரா கடமைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கையருக்கு வழங்கிய சந்தர்ப்பத்துக்காக சவுதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான் ஆகியோருக்கும் இலங்கை முஸ்லிம்கள் நன்றி தெரிவிக்கின்றனர்.





அஷ்ஷைக்
எம்.எச்.பௌஸுல் அலவி...
(மதனி)




# எத்தனை கூட்டணி எதிர்த்து நின்றாலும் பிரதமர் மோடி அவற்றை தகர்த்தெறிந்து வெற்றிபெற்றுள்ளார்

**நுவரெலியா நிருபர்**

இந்திய அரசியல் வரலாற்றில் மூன்றாவது முறையாக பிரதமர் மோடி வெற்றி பெற்றுள்ளமை முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகும். எத்தனை கூட்டணி எதிர்த்து நின்றாலும் அவற்றையெல்லாம் உடைத்தெறிந்து மக்களின் மனங்களில் பிரதமர் நரேந்திர மோடி நீங்காத இடம்பிடித்து விட்டதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தனது வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில் பிரதமர் மோடியின் வெற்றி தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இராதாகிருஷ்ணன் எம்.பி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், இந்தியாவின் அனைத்து எதிர்கட்சிகளும் ஒன்று சேர்ந்து கூட்டணி அமைத்து மோடியை தோற்கடிப்பதற்காக செயற்பட்ட போதிலும் அதனை எல்லாம் தகர்த்தெறிந்து மக்களின் வாக்குகளை பெற்று மூன்றாவது முறையாகவும் பிரதமராக வெற்றி பெற்றுள்ளார். இது அவருடைய சேவைக்கும் மக்கள் அவர் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கும் கிடைத்த ஒரு வெற்றியாகும்.



பிரதமர் நரேந்திர மோடி கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் மட்டுமல்லாது உலக நாடுகளில் இந்தியாவின் பெயரையும் புகழையும் அதன் பொருளாதாரத்தையும் உச்சத்திற்கு கொண்டுசென்றுள்ளார்.

இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்த பொழுது உடனடியாக உதவிகளை செய்து எங்களுக்கு உணவளித்தவர் பிரதமர் மோடி என்று சொன்னால் அது மிகையாகாது. அதுமாத்திரமின்றி இன்னும் பல உதவிகளை அவர் செய்து வருகின்றார்.

குறிப்பாக மலையக பகுதிகளுக்கு விஜயம் செய்துள்ளார். இங்குள்ள மக்களின் வீடமைப்பு உட்பட பல விடயங்களுக்கு தொடர்ந்தும் உதவிகளை செய்து வருகின்றார்.இந்திய வம்சாவளி மக்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அவர்களுக்கெல்லாம் நான் இருக்கின்றேன் என்ற நம்பிக்கையை கொடுத்தவர்.

இந்த தேர்தலில் ஒரு சில பின்னடைவுகள் இருந்தாலும் அவற்றை நாம் பெரிதாக கணக்கில் எடுக்க முடியாது. காரணம் அது எல்லா நாடுகளிலும் இருக்கின்ற ஒரு நிலைமை. ஏன் எங்கள் நாட்டிலும் ஒரு காலத்தில் நாட்டின் கடவுளாக பார்க்கப்பட்ட பலர் இன்று அரசியல் களத்தில் நிலை கொள்ள முடியாமல் தடுமாறி வருவதை நாம் காண்கின்றோம்.

இந்திய நாட்டில் இந்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்த பெருமையும் பிரதமர் மோடியையே சாரும்.

எனவே அவருடைய வெற்றிக்கு மலையக மக்களின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் மூன்றாவது முறை பிரதமராக பதவியேற்ற பின்பு இலங்கையின் வீடமைப்பு தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளையும் இந்த சந்தர்ப்பத்தில் முன்வைக்க விரும்புகின்றேன் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## களுகங்கையின் அபாயநிலை படிப்படியாக குறைவு

களனி கங்கை, களுகங்கை மற்றும் அத்தனகலு ஓயா ஆகிய பகுதிகளில் ஏற்கனவே இருந்த அபாயநிலை படிப்படியாக குறைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர் சகுரா தில்தாரா தெரிவித்தார்.

இதன் காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கம்பஹா, ஜாஎல, வத்தளை, மினுவாங்கொட, கட்டான ஆகிய பகுதிகளில் படிப்படியாக நீர்மட்டம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, களனி கங்கைப் படுகையின் தாழ்வான பகுதிகளான கடுவெல, பியகம, கொலன்னாவை, வத்தளை மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் நீர் மட்டம் படிப்படியாகக் குறைந்து வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

எனினும் மண்சரிவு அபாயம் தொடர்வதாக தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர தெரிவித்துள்ளர். இதேவேளை, நாட்டை பாதித்துள்ள சீரற்ற வானிலையினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 161,000ஐ தாண்டியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## விக்டோரியா நீர்த்தேக்கத்தில் சடலமாக மீட்கப்பட்டவர் அடையாளம்

**அக்குறணை குறூப் நிருபர்**

விக்டோரியா நீர்த்தேக்கத்தில் சடலமாக மீட்கப்பட்டவர் கம்பளை, கஹடபிட்டியவிலுள்ள கடையொன்றில் பணியாற்றிய 21 வயதுடைய இளைஞன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 10 நாட்களாக காணாமல் போயுள்ளதாகவும் வீடு திரும்பவில்லையெனவும் உறவினர்களால் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் விக்டோரியா நீர்த்தேக்கத்திலிருந்து இவர் சடலமாக மீட்கப்பட்டதாக கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பளை, கஹடபிட்டிய பகுதியைச் சேர்ந்த மொஹமட் ஹசன் ராஷிக் என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் சில வருடங்களாக கடையில் பணியாற்றி வந்ததாக தெரியவருகிறது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.





கண்டி நகர தமிழ் கல்வி வளர்ச்சி ஒன்றியத்தின் மூலமாக கண்டி கலைமகள் தமிழ் மகாவித்தியாலயத்திற்கு தரம் 05 பயிற்சி வினாத்தாள்களை கண்டி நகர தமிழ் கல்வி வளர்ச்சி ஒன்றிய தலைவர் எம்.தீபன் வித்தியாலய அதிபரிடம் வழங்கிவைத்தார் . இந்நிகழ்வில் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர் .

க.பொ.த உயர்தரப் பரீட்சை

## பூனுகல தமிழ் மகாவித்தியாலயத்தில் எட்டு மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தகுதி

### இருவர் 3ஏ சித்தி

உயர்தர பெறுபேறுகளின் படி கே / தெஹி /பூனுகல தமிழ் மகா வித்தியாலயம் மூன்றாவது வருடமும் சாதனை படைத்துள்ளது. அந்த வகையில் பரீட்சைக்கு தோற்றிய 13 மாணவர்களும் சித்தியடைந்துள்ளதோடு 8 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்றுள்ளனர். 2 மாணவர்கள் 3 A சித்திகளை பெற்றுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும். எம். ஜெயச்சந்திரன் 3ஏ, ஆர். அசோஜ் 3ஏ என்ற அடிப்படையில் பெறுபேறுகளை பெற்றுள்ளனர். எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையில் உயர்தரம் ஆரம்பித்து மூன்று வருடத்தில் 25 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இப்பாடசாலையிலிருந்து பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும்.





அதிலும் குறிப்பாக இரண்டு மாணவிகள் சட்டத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


பரிசு அட்டைகளுக்கு சுகாதார அணையாடைகளை வழங்குவதற்கு உங்களுடைய வர்த்தக நிலையத்தையும் பதிவுசெய்துக் கொள்ளுங்கள்



சுகாதாரத்தை ஊக்குவிப்பதன் மூலமாக பாடசாலை மாணவிகளை வலுவூட்டும் நோக்கத்துடன் நாடு முழுவதும் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவிகளுக்கு புதிய கருத்திட்டமாக சுகாதார அணையாடைகளை கொள்வனவு செய்வதற்கு பரிசு அட்டைகளை வழங்கும் செயற்றிட்டம் ஒன்று கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அது தொடர்பாக ஆர்வம் காட்டும் நாடளாவிய வர்த்தக உரிமையாளர்களினால் கையடக்க தொலைபேசியில் 'play store' இல் நுழைந்து 'Thilinapath Android' பதிவிறக்கம் செய்து வழங்குநர்களாக பதிவு செய்துக் கொள்ளலாம்.

அதற்காக பின்வரும் ஆலோசனைகளை பின்பற்றி 2024/06/05 ஆம் திகதி தொடக்கம் உங்களுடைய பதிவை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

**பதிவு செய்துக் கொள்வதற்காக முன்வைக்கப்பட வேண்டிய தகவல்கள்**

- உங்களுடைய கையடக்க Android தொலைபேசியில் play store இல் நுழைந்து Thilinapath Android பதிவிறக்கம் செய்து **300.00** ரூபாய் கட்டணம் செலுத்துவதன் மூலம் பதிவை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- இதற்காக வர்த்தக உரிமையாளரின் பெயரில் திறக்கப்பட்ட வங்கிக் கணக்கின் தகவல் மற்றும் இதை பயன்படுத்துவதற்கு உபயோகப்படுத்தும் தொலைபேசி இலக்கத்தை வழங்குவது அத்தியாவசியமாகும்.
- பதிவு செய்வதற்குரிய மேற்படி தகவல்களை சமர்ப்பித்து இரண்டு நாட்களுக்குள் உங்களுடைய பதிவு உறுதிப்படுத்தப்படும்.
- பதிவு செய்யும் வர்த்தகர்களுக்கு கையடக்க தொலைபேசி இலக்கம் ஒன்றை பதிவிறக்கும் செய்யும் வாய்ப்பு கிடடுவதுடன் அதன் மூலமாக மாத்திரம் பரிசு அட்டைகளில் குறிப்பிடப்பட்டுள்ள QR குறியீட்டை (Scan) செய்வதன் ஊடாக பரிசு அட்டைகளுக்கான சுகாதார அடையாளங்களை அணையாடைகளை விற்பனை செய்யும் வசதிகள் ஏற்படும்.
- இதில் உள்நுழைவதன் மூலம் மேலதிக தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளலாம்.

உங்களால் விற்பனை செய்யப்படும் சுகாதார அணையாடைகளுக்குரிய பரிசு அட்டைகளின் பெறுமதி பரிசு அட்டைகளின் செல்லுபடியாகும் காலம் காலாவதியான பின்னர் உங்களுடைய வங்கி கணக்கிற்கு நேரடியாகவே அனுப்பப்படும்.

**2024.06.05 ஆம் திகதி முதல் பதிவுகள் ஆரம்பிக்கப்படும்**




play store இல் பிரவேசித்து Thilinapath Android பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்

Hot Line: 0112 785 573

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

முதற்கட்டம் 2024.06.10 ஆம் திகதி முதல் 2024.07.10 ஆம் திகதி வரையிலும் பரிசு அட்டைகள் மூலமாக சுகாதார அணையாடைகளை கொள்வனவு செய்வதற்கு மாணவிகளுக்கு வாய்ப்பு உண்டு.

# மாணவர்களின் விழிப்புணர்வு போராட்டம்



நாட்டில் தொடரும் சிறுவர் துஷ்பிரயோகம், போதைப்பொருள் அச்சுறுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் மக்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் ரங்கிரி தம்புள்ளை தேசிய பாடசாலை மாணவர்கள் நேற்று (05) ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

ரங்கிரி தம்புள்ளை தேசிய பாடசாலையின் அதிபரால் தம்புள்ளை நகரில் இந்த போராட்டம் நடத்தப்பட்டது. அதிபர் எம். ஜே. பி. விஜேசிங்கவின் ஆலோசனையின் பேரில் கல்லூரி ஆசிரியர்களின் பூரண வழிகாட்டலுடனும் கல்லூரி மாணவர்களின் பங்களிப்புடனும் இப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது சிறுவர் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு குறித்து சமூகத்தை அறிவுறுத்தல், சட்டவிரோத செயல்களுக்கு குழந்தைகளை பயன்படுத்துவதை கண்டித்தல் மற்றும் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பது போன்ற பல நோக்கங்களின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது.

## இந்திய – இலங்கை பொருளாதார...

தெரிகிறது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் தொடர்ந்தும் வளர்ச்சியடையும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்தியில் நம்பிக்கைத் தெரிவித்திருந்தார்.

## பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்...

இது தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக சபையில் தெரிவித்த அவர்,

தேசிய கல்விக் கொள்கையை தயாரிப்பதற்கு அரசியலுக்கு அப்பால் தேசிய கருத்தாடல் அவசியம் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கல்வித்துறை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## விசாரணைகள் நிறைவுற்றதும்...

நேற்று தெரிவித்தார். இது தொடர்பான விசாரணைகளின் பின்னர் தாமதமின்றி விரைவில் இவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் என தெரிவித்த அமைச்சர், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்றும் தெரிவித்தார்.

இரு காதுகளையும் மறைத்து ஹிஜாப் அணியும் போது, சூட்சுமமான முறையில் காதுக்குள் கருவிகளை வைத்திருக்க முடியும்.

இதனை கருத்திற் கொண்டே காதுகள் தென்படும் வகையில் ஹிஜாபை அணியுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் நிர்வாக சேவை தொடர்பான பரீட்சைக்குத் தோற்றிய 13 பேரில், ஏழு பேர் கையடக்கத் தொலைபேசியை வைத்திருந்ததுடன் இருவர் தமது அனுமதிப் பத்திரத்தை முறையாக பூர்த்தி செய்யவில்லை.

அத்துடன் மேலும் 10 பேர் தமது ஆளடையாளத்தை உறுதி செய்யத் தவறியுள்ளனர்.

இதுவே உண்மையான காரணம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே கல்வியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## களுத்துறை, பேருவளை ஆசிரியர்...

உயர் தர வகுப்புகளுக்கு நீண்டகாலமாக நிலவி வரும் ஆசிரிய வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படாதுள்ளன. இதனால் சிக்கல்கள் தொடர்கிறது. இந்நிலையில் இது தொடர்பாக ஆராய்ந்து அதனை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம் பி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நாட்டின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

களுத்துறை கல்வி வலயத்தில் நிலவும் பாரிய ஆசியர் பற்றாக்குறை தொடர்பாக பல தடவைகள் கல்வியமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன். அதற்கு சிறந்த முறையில் பதில் வழங்கப்பட்டபோதும் அதற்கான செயற்பாடுகள் திருப்தியளிக்கும் வகையில் இடம் பெறவில்லை.

களுத்துறை கல்வி வலயத்தில் பேருவளை தொகுதியில் மாத்திரம் நூற்றுக்கு 36வீத ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது.நூறுபேர் செயற்பட வேண்டிய நிலையில் 36 பேருக்கான வெற்றிடம் நிலவுகிறது.

பேருவளை தொகுதியில் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புகளுக்கு கணிதம் மற்றும் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. 10, 12 வருடங்களாக இந்த ஆசிரியர் பற்றாக்குறை தொடர்கிறது.அவ்வாறாயின் இந்த மாணவர்கள் எவ்வாறு பரீட்சைகளுக்கு முகம்கொடுக்க முடியும்? என நான் கேட்க விரும்புகின்றேன். அது தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் கல்விமைச்சரைக் கேட்டுக் கொள்கின்றேன்.

அதேபோன்று பேருவளை கல்வித் தொகுதியில் 52 ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன. அது களுத்துறை வலயத்தில் 92ஆக இருந்து வருகிறது. கல்வியற் கல்லூரிகளில் இருந்து வெளிவரும் ஆசிரியர்களை இந்த பாடசாலைகளுக்கு நியமிப்பதாக அமைச்சர் தெரிவித்து வருகின்றபோதும் இந்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்களையும் வேறு பிரதேசங்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கி அனுப்பும் நிலையே காணப்படுகிறது. இவ்வாறான தீர்மானங்களை யார் எடுக்கிறார்கள் என அறிய முடியவில்லை. அந்த ஆசிரியர்கள் பல மணி நேரம் பயணித்து அந்தந்த பாடசாலைகளுக்கு செல்லவேண்டிய நிலை காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்தியப் பிரதமராக மோடி...

இதற்கிடையில் நேற்று ஜனாதிபதியின் இல்லத்துக்குச் சென்ற பிரதமர் மோடி, ஜனாதிபதி திரவுபதி முர்முவிடம் தனது இராஜினாமா கடிதத்தை கையளித்தார்.

லோக்சபா தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு(பா.ஜ.க அணி) 291 இடங்கள் கிடைத்துள்ளன. பா.ஜ.க தனித்து 240 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. பெரும்பான்மை ஆசனங்கள் கிடைத்ததையடுத்து தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைக்கின்றது. பிரதமராக நரேந்திர மோடி 8 ஆம் திகதி பதவியேற்கிறார்.

இந்நிலையில், பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மோடியை பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், பல முக்கிய முடிவுகளும் எடுக்கப்பட்டன. தற்போதைய லோக்சபாவை கலைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது, இவ்விதமிருக்க, பிரதமர் மோடி தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதற்காக டெல்லியில் உள்ள பிரதமர் மோடியின் இல்லத்துக்கு நிதிஷ் குமார், சந்திரபாபு நாயுடு ஆகியோர் சென்றனர்.

மத்தியில் ஆட்சி அமைக்க எக்கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை இல்லாததால் கூட்டணிக் கட்சிகளுடன் ஆட்சி அமைக்க பா.ஜ.க முடிவு செய்துள்ளது.இந்நிலையில், நேற்றைய இக்கூட்டம் அரசியல் வட்டத்தில் மிக முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. அதேசமயம், பா.ஜ.க எம்.பி.க்கள் அனைவரையும் இன்று டெல்லிக்கு வரும்படி கட்சித் தலைமை உத்தரவிட்டுள்ளது.

## வேறுபாடுகளின்றி ஈழப் போராட்டத்தை...

உயிர் தியாகம் செய்த முதல் போராளியான பொன் சிவகுமாரனின் 50 ஆவது ஆண்டு நினைவு தினத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உரும்பிராயிலுள்ள பொன். சிவகுமாரனின் உருவச் சிலைக்கு அருகில் நேற்று நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈகைச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தி உரையாற்றினார். இங்கு பேசிய அமைச்சர்:

தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடிய தமிழ் தலைவர்கள், போராளிகள், மக்கள் எனப் பலரும் நினைவுகூரப்பட வேண்டியவர்கள். இவர்களது நினைவேந்தல்களை நடத்துவது சிறந்தது. இவர்களுக்கு நினைவுச் சிலைகள் நிறுவப்படுவது அவசியமாகும். இதில் கட்சி பேதங்களோ, இயக்க வேற்றுமைகளோ இருக்கப்போவதில்லை.

பொன் சிவகுமாரனது உருவச் சிலை தற்போதுள்ள உருவச்சிலை நிறுவப்படுவதற்கு முன்னர், மூன்று தடவைகள் உடைத்தெறியப்பட்டது. இதற்கு சரியான புரிதலின்மையே காரணம். ஆனால் 1999 களில் அன்றைய அரசுடன் எமக்கிருந்த நல்லுறவு, எமது தேசிய நல்லிணக்க வழிமுறை என்பவற்றுடன் எமக்கிருக்கும் தற்துணிவுமே இச்சிலையை அமைப்பதற்கு உதவியது.

அதுபோலதான் யாழ். மணிக்கூட்டு கோபுர சுற்றுவட்டத்திலுள்ள மன்னர்களது சிலைகள், முத்திரைச்சந்தியிலுள்ள சங்கிலியன் சிலை, யாழ். மடத்தடியிலுள்ள தனிநாயகம் அடிகளார் சிலை போன்றனவும் நிறுவப்பட்டன.

இதேநேரம் பொன் சிவகுமாரனது நினைவு நாளான இன்று, தமிழர் அரசியல் பரப்பில் உள்ள பல கட்சியின் தலைவர்கள் முக்கியஸ்தரகள் பிரமுகர்கள் என ஒன்றாக கூடியிருப்பதானது இந்நாளை அனைவரும் எமது இனத்தின் ஒரு பொதுவான நாளாக அடையாளப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இருப்பவைகளை பாதுகாத்துக்கொண்டு இழந்தவைகளை ஈடு செய்யும் வகையில், முன்னோக்கி நகரவேண்டும். எமது மக்களின் உரிமைசார் விவகாரங்களிலும் நடைமுறை சாத்தியமான முன்னெடுப்புக்களை அனைத்து தரப்பினரும் இணைந்து முன்னெடுக்க முடியும்.

அதேபோன்று, எமது மக்களின் இருப்புக்கள் மற்றும் வரலாறுகள் அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லப் படுவதற்கான முயற்சிகள் அனைத்திற்கும் நாம் முழுமையான ஒத்துழைப்புகளுடன் முயற்சிகளையும் மேற்கொள்ள தயாராக இருக்கின்றோம்"

விடுதலை வித்துக்கள் தினமும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஈழ மக்கள் ஜநயானகக் கட்சியால் நினைவுகூர்ந்து அனுஸ்டிக்கப்பட்டது.

## கல்வி அமைச்சரின் ஆலோசனைக்கு...

09 மாகாணங்களில் 09 கல்வி சீர்திருத்த அலகுகளை நிறுவுதல், பிராந்திய கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கையை முன்னுரிமை அடிப்படையில்100 இலிருந்து 122 ஆக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

பாடசாலை கண்காணிப்பு, ஆசிரியர் கண்காணிப்பு மற்றும் பள்ளி அடிப்படையிலான மதிப்பீட்டின் செல்லுபடியை உறுதி செய்யும் நோக்கத்துடன், தற்போது காணப்படுகின்ற தொகுதிக் கல்வி காரியாலயங்கள் 314 ஐ உள்ளடக்கி 350 பாடசாலை சபைகளை அமைத்தல், தெரிவு செய்யப்பட்ட இரண்டாம் நிலை பாடசாலைகள் ஒன்று அல்லது பலவற்றை தலைமை பாடசாலைகளாக பெயரிட்டு ஒரே கொத்தணியில் 08 தொடக்கம் 12 பாடசாலைகள் கொண்ட எண்ணிக்கையிலான பாடசாலைகள் முதன்மைப் பாடசாலை நியமித்து, 1,220 பாடசாலைக் குழுக்களில் முழுப் பாடசாலை கட்டமைப்பையும் இணைப்பதற்கும் இதன்மூலம் திருத்தம்செய்யப்படவுள்ளது.

இலங்கைக் கல்வி நிர்வாக சேவை மற்றும் ஆசிரியர் ஆலோசனைச் சேவைகளுக்குத் தேவையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்

## எச்சரிக்கை விடுக்கப்பட்ட பகுதிகளில்...

பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதில், பாதிக்கப்பட்டுள்ள 3,261 குடும்பங்களைச் சேர்ந்த 1,13,028 பேர் தற்காலிகமாக 165 முகாம்களில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

வெள்ளப் பெருக்கால் வெளியேற முடியாமல் வீடுகளின் மேல் மாடிகளில் தங்கியுள்ளவர்க ளுக்கு உலர் உணவுகளும் வழங்கப்படுகிறது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதற்கட்டமாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.எனினும்,முழுமையான நட்ட ஈடு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிவாரண மானியமும் 33 வீதத்தால் அதிகரிக்கப் பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை மற்றும் பாதிப்புகள் தொடர்பில் ஆளும் கட்சி எம்.பி அகில சாலிய எல்லாவல முன்வைத்த, கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்

(06.06.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)





**மேஷம் :**
இல்லத்தில் சுப காரியங்களை நடத்துவது தொடர்பான முயற்சிகள் நல்ல விருப்பத்தை சந்திக்கும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

**ரிஷபம் :**
கூட்டுத் தொழிலில் பணியாளர்களின் ஒத்துழைப்பினால் தொழில் முன்னேற்றம் உண்டாகும். போட்டிகளை எதிர் கொண்டு வெற்றி அடைவீர்கள்.

**மிதுனம் :**
கூட்டுத் தொழில் நன்றாக நடைபெறும். கூட்டாளிகளின் ஆலோசனைப்படி புதிய தொழில் தொடங்க முயற்சிப்பீர்கள்.

**கடகம் :**
வாடிக்கையாளர்களால் வசந்த காலத்தை நோக்கி முன்னேறுவீர்கள். கூட்டுத் தொழிலில் கூடுதல் ஆதாயம் கிடைக்கும்.

**சிம்மம் :**
நிர்வாகத்தில் அசோகரியம் ஏற்படலாம். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் தோன்றி மறையும். சிறிய கடன் தொல்லைகள் தலை தூக்கும்.

**கன்னி :**
கொடுக்கல் வாங்கலில் சற்று கவனம் தேவை. சிறிய வார்த்தைகளும் மனவருத்தங்களை உண்டாக்க கூடும். குடும்பத்தில் பணத்தொகை அதிகரிக்கும்.

**துலாம் :**
அக்கம் பக்கத்தினரிடம் குடும்ப விஷயங்களைப் பற்றி பேசாமல் இருப்பது நல்லது. முயற்சித்த சில செயல்களில் தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம் :**
முடிவுகளில் நிதானத்தை கடைபிடிப்பது அவசியம். குடும்பத்தில் செலவுகள் இருந்தாலும் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது.

**தனுசு :**
புதிய கிளைகளைத் தொடங்க சிறிது காலம் காத்திருப்பது நல்லது. குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் தோன்றுக்கூடும். கடன் காரர்களின் மறைமுகத் தொல்லை இருக்கும் .

**மகரம் :**
கூட்டாளிகளில் ஒருவர் மனம் வேறுபாடு காரணமாக பிரிந்து செல்ல நேரலாம். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காமல் போகக்கூடும்.

**கும்பம் :**
கூட்டுத் தொழில் சில சிரமங்களோடு நடைபெறும். கூட்டாளிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் உண்டாகக்கூடும். குடும்பத்தில் எதிர்பாராத சிறு சிறு பிரச்சனைகள் தலை தூக்கினாலும் சமாளிப்பீர்கள்.

**மீனம் :**
கூட்டுத் தொழிலில் போட்டிகள் உருவாகலாம். பணியாளர்களை கண்காணித்து ஆலோசனை கூறுவீர்கள். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சனைகள் ஏற்பட்டாலும் அவற்றை சமாளித்து விடுவீர்கள்.

## புதிய இராஜதந்திரிகள்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

10. மசூத் இமாத் மாலைதீவு குடியரசு உயர்ஸ்தானிகர் (கொழும்பு)

(Masood Imad.High Commissionerdesignate of the Republic of Maldives based in Colombo)

11. அலிகி கௌட்சோமிடோபௌலோ ஹெலனிக் குடியரசு (கிரீஸ்) தூதுவர் (புது டில்லி)

(Aliki Koutsomitopoulou.Ambassadordesignate of the Hellenic Republic based in New Delhi)

12. அபூ பக்கர் கரீம் சியோரா லியோனி குடியரசு உயர்ஸ்தானிகர் (பீஜிங்)

(Abu Bakarr Karim.High Commissionerdesignate of the Republic of Sierra Leone based in Beijing)

13. நிகோலாய் யான்கோவ் பல்கேரியா குடியரசு தூதுவர் (புது டில்லி)

(Dr. Nikolay Yankov. Ambassadordesignate of the Republic of Bulgaria based in New Delhi

14. ஹெய்மண்டோயல் தில்லும் மொரிசியசு குடியரசு உயர்ஸ்தானிகர் (புது டில்லி)

(Haymandoyal Dillum.High Commissionerdesignate of the Republic of Mauritius based in New Delhi)

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நற்சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் புதிய உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

## கடற்றொழில்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இதற்கு முன்னர் நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாக பதவி வகித்த இவர், பல்வேறு அரச நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்ததுடன் அந் நிறுவனங்களின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியுள்ளார்.

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக நீண்ட காலம் பதவி வகித்துள்ளார். கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் டி.வி. உப்புல் அண்மையில் இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, இப்பதவியில் இவர், நியமிக்கப்பட்டள்ளார். இவர் கொழும்பு பல்கைலைகழகப் பட்டதாரியாவார்.

## சுற்றுலா வந்த இந்திய தம்பதி...

மேலதிக சிகிச்சைக்காக தெபரவெவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## Gas விலைகள் குறைந்ததால்...

குறைக்கப்படுவதாக அகில இலங்கை உணவகம் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்தார்.

லிற்றோ மற்றும் லாஃப் நிறுவனங்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் விலையை குறைத்தன.

12 கிலோ 5 லீற்றர் எரிவாயு சிலிண்டரின் விலை 150 ரூபாவினாலும் 12 கிலோ 5 லீற்றர் எரிவாயு சிலிண்டரின் விலை 160 ரூபாவினாலும் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 10,535 ஆசிரியர் வெற்றிடங்கள்...

பரீட்சை, சாதாரண தரப் பரீட்சை நடத்துதல் மற்றும் வினைத்திறன் பரீட்சை வினாத்தாள் திருத்துதல், பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் ஆறு மாதத்துக்கும் மேலாக தாமதமடைந்தன.

## இலங்கையில் அவுஸ்திரேலிய...

எதிர்பார்க்கப்படுகிறது. இதுதொடர்பாக இலங்கை தனியார் பெற்றோலிய கூட்டுதாபனத்தின் பணிப்பாளர் கலாநிதி பிரபாத் சமரசிங்க தெரிவிக்கையில், தற்போதுள்ள 150 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளடங்கலாக 50 க்கும் மேற்பட்ட புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைக்கவுள்ளதாக அந் நிறுவனம் அறிவித்துள்ளது என்றார்.

இலங்கையின் முதலீட்டுச் சபையுடன் இந்த நிறுவனம் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. இலங்கையில் பெற்றோலியப் பொருட்களை வழங்குவதற்கு மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சுடனான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மூன்றாம் முறையாக பதவியேற்கும்...

வெற்றி மூலம் மேலும் முன்னேற்றம் காண, நாட்டின் பிரதமர் என்ற வகையில் வாழ்த்து தெரிவிப்பதாக சபையில் பிரதமர் தெரிவித்தார்.

அது தொடர்பில் பிரதமர் சபையில் மேலும் தெரிவிக்கையில்:

எமது அயல்நாடும் பல்வேறு விதத்தில் எம்முடன் இணைந்து ஒத்துழைப்பு வழங்கும் நாடுமான இந்தியாவில், மூன்றாவது தடவையாகவும் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கிறார். உலகத்திற்கு பெரும் செய்தியை வழங்கும் இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி வெற்றி பெற்று ஆட்சியமைக்கவுள்ளமைக்கு எமது வாழ்த்துக்கள்.

பாராளுமன்ற ஜனநாயகத்தின் பலசாலியாக நாம் அனைவரும் கருதும், உலகின் மக்கள் தொகையை அதிகமாகக் கொண்ட நாடாகத் திகழும் இந்தியாவை பிரதிநிதித்துவப் படுத்தியே அவர் பிரதமராக வெற்றி பெற்றுள்ளார். ஆசிய நாடுகளுக்கிடையில் நட்புறவு ஒத்துழைப்பு மற்றும் ஒருமைப்பாட்டைப் போன்றே, இலங்கையுடன் இந்தியா கொண்டுள்ள நட்பு மற்றும் ஒத்துழைப்பு தொடர்பில் இந்த சந்தர்ப்பத்தில் நாம் கௌரவத்துடன் நினைவு கூர வேண்டும்.

அந்த வகையில் நரேந்திர மோடி பெற்றுக் கொண்டுள்ள வெற்றி மூலம் மேலும் புதிய வெற்றிகள் இந்தியாவுக்கு கிடைக்க வேண்டும்.

சமாதானம், அபிவிருத்தி புதிய இலக்குகள் ஆகியவற்றை உலகுடன் பகிர்ந்து கொண்டு பொருளாதாரம் மற்றும் ஏனைய துறைகள் மூலம் வெற்றிகளை பெற்றுக்கொள்ள இந்தியாவுக்கு வாய்ப்புக் கிட்டட்டும் என, வாழ்த்துகிறோம்.

## கிளிநொச்சி இரணைமடு குள நீரப்பங்கீடு...

ஜீவன்தொண்டமான் விளக்கமளித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களால் கேட்கப்பட்டதற்கு அமைவாக இக்கூட்டம் நேற்று (05) ஒழுங்குசெய்யப்பட்டது.

இதன்போது இரணைமடு நீரப்பங்கீடு தொடர்பான யாழ். மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் ஏற்படாதவாறு ஒரு தீர்க்கமான முடிவை எட்டுவதற்கான நடவடிக்கைககளை அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேற்படி தெளிவுப்படுத்தினார்.

குறிப்பாக இதன்போது இரணைமடு நீரப்பங்கீடு தொடர்பான இறுதிபடுத்தப்பட்ட புதிய நவீன ஆய்வுகளுக்கு அமைவாக சிவில் அமைப்புக்கள், விவசாய அமைப்புக்கள், தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபை, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ.நா நீர் முகாமைத்துவம், யாழ் பல்கலைக்கழகம், நீர்ப்பாச திணைக்களம், ஐ.நா உணவு மற்றும் விவசாய அமைப்புக்கள் ஆகிய அமைப்புக்களின் தீர்மான மிக்க ஆய்வு அறிக்கையை எதிர்வரும் 06 மாதங்களுக்குள் பெற்றுக்கொண்ட பின்னர், முடிவுகள் எட்டப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், அங்கஜன் இராமநாதன், தர்லிங்கம் சித்தார்த்தன் அமைச்சின் ,செயலாளர் நபீல், நீர் வழங்கள் மற்றும் வடிகால் அமைப்பின் தலைவர், பொதுமுகாமையாளர் அரச அதிகாரிகள்,கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துக்கொண்டனர்.

## மண்ணுக்குள் புதையுண்டு...

மதில் கட்டுவதற்காக வெட்டப்பட்ட அகழியில் இறங்கி விளையாடிய சிறுமியே உயிரிழந்தார்.

மண்சரிவு ஏற்பட்டதில் அகழியை மண் மூடியபோது இச்சம்பவம் இடம்பெற்றது. வீட்டின் பின்புறமிருந்த பாதுகாப்பில்லாத மண்திட்டால் ஆபத்து ஏற்படாதிருக்க மதில் அமைக்கப்படவிருந்தது. இதற்காக வெட்டிய அகழியில் இறங்கியே சிறுமி விளையாடி உள்ளார்.

குடும்பத்தவர்க ள் மற்றும் பிரதேச வாசிகளால் சிறுமி மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட பின்னர், மரணமடைந்துள்ளார்.

## சட்டவிரோதமாக இஞ்சி...

இந்த இஞ்சியுடன் மூன்று மீன்பிடி படகுகள், மூன்று என்ஜின்கள் மற்றும் இருப்பிடத்தின் திசையைக் கண்டறியும் ஜிபிஎஸ் கருவியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொதியிடப்பட்டிருந்த இஞ்சியின் எடை 1,456 கிலோ என தெரிவித்த பொலிசார் , அதன் மொத்த பெறுமதி ஒரு கோடி ரூபாவுக்கு மேல் எனவும் குறிப்பிட்டனர். சந்தேகநபர்கள் கற்பிட்டி உச்சிமுனே பிரதேசத்தில் வசிக்கும் 30 மற்றும் 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மீட்கப்படாத தங்க ஆபரணங்களின் ஏல விற்பனை

அமானா வங்கியின் அனைத்துக் கிளைகளிலும் ஆவணமாக உத்தரவாதமாக வைக்கப்பட்டு 29.02.2024 அல்லது அதற்கு முன்பு மீட்கப்பட வேண்டியவையும், ஆனால் 31.05.2024 ஆம் திகதி வரை மீட்கப்படாமலிருப்பவையுமான அனைத்து தங்க ஆபரணங்களும் 29.06.2024, 30.06.2024 மற்றும் 07.07.2024ம் திகதிகளில் மு.ப 10.00 மணிக்கு பகிரங்க ஏல விற்பனை (கையிருப்பில் உள்ளவரை) செய்யப்படும்.

**ஏல விற்பனை நடைபெறும் இடம்**
அமானா வங்கி, தெமட்டகொடை கிளை
7, கெண்ட் வீதி, தெமட்டகொடை கொழும்பு 09.

ஏல வளாகத்திற்குள் நுழையும் ஒவ்வொரு பங்கேற்பாளரும் ரூ5,000/- மீள் செலுத்தப்படாத நுழைவுக் கட்டணம் செலுத்த வேண்டும்.
ஏல விற்பனையை பிற்போடும் மற்றும் இரத்துச்செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

Amãna Bank

பிரதம அதிகாரி - நுகர்வோர் நிதியுதவி
தனியாருக்கான வங்கியலுவால் பிரிவு
இல. 486, காலி வீதி, கொழும்பு 03.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

செவ்வாய் 2024.06.04
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5494
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.29,348,708.00
ஆங்கில எழுத்து Y | வெற்றி இலக்கங்கள் 1 4 6 8 5 5

**அத சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 069
ஆங்கில எழுத்து Y | வெற்றி இலக்கங்கள் 6 8 5 5

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3736 | சீட்டிழுப்பு திகதி 2024.06.04
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.60,150,878.40
ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கங்கள் 13 19 62 68 | விசேட எழுத்து X
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 39198

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1842 | 2024.06.04
93054
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.434,793,186.00
ஆங்கில எழுத்து M | சுப்பர் இலக்கம் 05 | வெற்றி இலக்கங்கள் 42 55 68 69
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**VIP**
திகதி 2024.06.04 | சீட்டிழுப்பு இலக்கம் 0320
ஆங்கில எழுத்து X | L7 எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 0 8 2 3 5 1
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 30,853,676.04

**ராசி சுப பலன்**
திகதி 2024.06.04 | சீட்டிழுப்பு இலக்கம் 803
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.4,716,074.20
வெற்றி இலக்கினம் மேஷம் | வெற்றி இலக்கங்கள் 16 21 29 32
தனயோக இலக்கம் 47607 | நாளுக்கான விதி எண் 29

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1524 | 2024.06.04
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,748,461.76
ஆங்கில எழுத்து Y | வெற்றி இலக்கங்கள் 06 46 55 67 | விசேட எழுத்து Y
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 28126

**For classified advertisements and for replies**
received in response to advertisements published under Lake House box numbers

+94 112429342
+94 112429343


## Invitation for Expression of Qualifications

### ICB No: CES/FP/05/PT/6587(IS)

Invitation for Expression of Qualifications (EOQ) for Pre-qualification of Bids for the Design, Development/Customization, Finance, Operation, Upgrading and Maintenance of **Port Community System** for Sri Lanka Ports Authority

Interested party may download the EOQ document by scanning the QR code below or using www.slpa.lk or physical inspect the address in Note-1 below commencing from 06th June 2024 and ending 19th July 2024 during normal working days between 1000 hrs – 1600 hrs at free of charge.

A non-refundable fee of Sri Lankan Rupees One Hundred Thousand (LKR 100,000.00) or Three Hundred and Fifty US Dollars (USD 350.00), inclusive of taxes, must be paid and The payment receipt should be presented upon submission of the completed EOQ documents.

*Issue of Invitation for EOQ Document* - From 1000 hrs on 06th June 2024 to 1600 hrs on 19th July 2024 (Working Days) at Note-1

*Pre- EOQ meeting* - 4th July 2024, 1000 hrs at Note-2

*Deadline for Submission of EOQ* - 19th July 2024, 1400 hrs at Note-3

SLPA will not be responsible for any costs or expenses incurred by Interested Parties in connection with the preparation and submission of the EOQs.

For more details about the advertisement, simply scan the QR code.

*Note-1:*
Chief Manager,
Supplies and Material Management Division,
Sri Lanka Ports Authority
45, Leyden Bastian Road,
Colombo 01, Sri Lanka
Tel. No +94 (0) 112483456,
Fax No. +94 (0) 112323055,
Email address: pcs@slpa.lk

*Note-2:*
Sri Lanka Port Authority
Head Office,
HQ Colombo,
5th floor,
Conference Room,
464 A , T B Jaya Mawatha,
Colombo 10 ,
Sri Lanka
Tel. No +94 (0) 112483430

*Note-3:*
Ministry of Ports,
Shipping and Aviation
No, 19, Chaithya Road,
Colombo 01 ,
Sri Lanka

Sri Lanka Ports Authority
Sri Lanka the Maritime Hub

වරාය,නාවික හා ගුවන් සේවා අමාත්‍යාංශය
MINISTRY OF PORTS, SHIPPING AND AVIATION
துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு



## கதிர்காமத்தில் மலிவான விலையில் வசதியான தங்குமிடம்



இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கதிர்காமம் சுற்றுலா விடுதி

- குளிரூட்டப்பட்ட வசதியான அறை (A/C)
- சுதந்திரமான மற்றும் பாதுகாப்பான சுற்றுப்புறம்
- சுத்தமாக குடிநீர்
- ஒரே தடவையில் 80 பேர் தங்குவதற்கான வசதி
- வாகனம் நிறுத்துவதற்கான வசதி

புலம்பெயர்ந்த இலங்கையர்களுக்கு விசேட சலுகை

தங்குமிடத்தை முன்பதிவு செய்து கொள்ள
047 2236 888 தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்கவும்
உடனடி அழைப்பு இலக்கம் 1989



தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

நானே ஆரம்பம்
## வெல்வோம் ஸ்ரீலங்கா
SMART சூரன்களோடு

நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் மக்கள் நடமாடும் சேவை

ஜூன் 07-08
மு.ப. 09.30 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை

திருகோணமலை மக்ஹெய்ஸர் விளையாட்டரங்கில்

வெளிநாட்டு வேலை தேடும் உங்களுக்கும்...

- அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள்
- பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் மற்றும் புலமைப்பரிசில்கள்
- பாடசாலைகளுக்கு 'Smart Board'
- சுயவேலைவாய்ப்புக்கான உதவிகள் மற்றும் ஆலோசனைகள் உள்ளிட்ட பல சேவைகள்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டு வேலைகளுக்கு செல்லும் உங்களுக்கு பூரண பாதுகாப்புண்டு. மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள வெல்வோம் ஸ்ரீலங்கா நடமாடும் சேவையின் பணியக காட்சியகத்துக்கு வருகை தரவும்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
*அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்பு*

# கிழக்கின் குரல்



# மதுபானம், புகையிலை பாவனையால் இலங்கையில் தினமும் 50 பேர் மரணம்

**ஒலுவில் விசேட நிருபர்**

இலங்கையில் புகை பிடிப்பதனாலும், மது பாவனையினாலும் தினமும் 50 பேர் மரணமடைவதாக, பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் உவைஸ் பாரூக் தெரிவித்தார்.

சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினத்தையொட்டி பொத்துவில் சுகாதார அலுவலகமும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வு ஊர்வலமும், கருத்தரங்கும் அண்மையில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.எம். அப்துல் மலிக் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார். சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் உவைஸ் பாரூக் தொடர்ந்து உரையாற்றுகையில்,

புகைத்தலினால் இலங்கையில் வருடமொன்றுக்கு சராசரியாக 22 ஆயிரம் பேரும், சர்வதேச ரீதியில் வருடாந்த 60 இலட்சம் பேரும் உயிரிழக்கின்றனர்.

புகைத்தல் காரணமாக இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ளோரின் சுகாதார சேவைக்காக அரசாங்கம் வருடத்திற்கு சுமார் 05 மில்லியன் ரூபாவை செலவு செய்கின்றது.

புகைத்தலினால் நீரிழிவு, புற்றுநோய், வாதநோய், இருதய நோய், சுவாசநோய், சிறுநீரக நோய் போன்ற தொற்றா நோய்கள் ஏற்படுகின்றன. இந்த நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக சுகாதார அமைச்சு அதிக நிதியை செலவு செய்து வருகின்றது. ஆரோக்கியமான சமூகமே நாட்டின் மதிப்பிட முடியாத வளமாக உள்ளது. புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களும் அடிமையாக மாறிக்கொண்டு வருவது பாரிய சவாலாகும். எமது பிரதேசங்களில் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களிலும் புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பழக்கம் அதிகரித்து வருவதைக் காண முடிகின்றது. புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனைக்காக தங்களின் வருமானத்திலிருந்து ஒரு தொகைப் பணம் செலவிடப்படுவதால், போசணை மட்டம் குறைவடைந்து செல்வதுடன், சிறுவர்களின் கல்வி நிலையும் பாதிக்கப்படுகின்றது. புகைத்தல் தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டு உலகில் நிமிடத்திற்கு 06 பேர் மரணிப்பதாக சர்வதேச சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது.

புகைக்கும் போது வெளிவரும் புகையில் 400ற்கும் அதிகமான நச்சு இரசாயனப் பொருட்கள் காணப்படுகின்றன. இவற்றில் 50 வீதமானவை சுவாச புற்றுநோயை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமைகின்றது. புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ள மக்களை அதிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு

# அறுகம்பை சுற்றுலா பிரதேசத்தில் மாபெரும் சிரமதானம்

**பாலமுனை விசேட நிருபர்**

சுற்றுலாத்துறைக்கு பிரசித்தி பெற்ற அறுகம்பே கடற்கரை பிரதேசத்தையும் அதனை அண்டியுள்ள சுற்றுச்சூழலையும் பாதுகாக்கும் நோக்கில் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிரமதான நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், அறுகம்பே ஆட்டோ உரிமையாளர் நலன்புரிச் சங்கம், கிளீன் ஸ்ரீலங்கா அமைப்பு, அறுகம்பே சுற்றுலா பொலிஸ் பிரிவு ஆகிய நிறுவனங்களின் பூரண ஒத்துழைப்புடன் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

'தூய்மையான கடற்கரை பிரதேசம்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற சிரமதான நிகழ்வில் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள், அறுகம்பே ஆட்டோ உரிமையாளர் நலன்புரிச் சங்கத்தின் உறுப்பினர்கள், கிளீன் ஸ்ரீலங்கா அமைப்பினர், அறுகம்பே சுற்றுலா பொலிஸ் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது அறுகம்பே கடற்கரை பிரதேசத்தில் காணப்பட்ட பொலித்தீன்கள், திண்மக்கழிவுப் பொருட்கள் துப்புரவு செய்யப்பட்டு அகற்றப்பட்டதுடன் டெங்கு பெருகும் இடங்களும் அழிக்கப்பட்டன. மேலும் கடற்கரை பிரதேசத்தில் போக்குவரத்துக்கு இடையூறாகவிருந்த தடைகளும் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



வரலாற்று சிறப்புமிக்க வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆலயத்திலிருந்து வரலாற்று சிறப்புமிக்க கதிர்காம கந்தன் ஆலய உற்சவத்துக்கு பாதயாத்திரையாகச் செல்லும் பக்த அடியார்கள் கல்முனை துரைவந்தியமேடு பாதை ஊடாக செல்வதை படத்தில் காணலாம். (படம்: துறைநீலாவணை நிருபர்)

# அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக ஜெகராஜன் நியமனம்

**காரைதீவு குறூப் நிருபர்**



அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இலங்கை நிர்வாக சேவை தரம் 1 அதிகாரியான காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைவாக பொது நிர்வாக அமைச்சு இந்நியமனத்தை வழங்கியுள்ளது.

ஏற்கனவே மேலதிக அரசாங்க அதிபராகவிருந்த வேதநாயகம் ஜெகதீசன் பதவி உயர்வு பெற்று போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சுக்கு செல்கின்ற காரணத்தினால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

2007 இல் இலங்கை நிர்வாகசேவையில் இணைந்து கொண்ட ஜெகராஜன் காரைதீவு பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராகவும் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி கல்முனை வடக்கு பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியிருந்தார்.

2013 இல் திருக்கோவில் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டு அங்கு சிறப்பான பணியாற்றி வந்த வேளையில் 2019 மீண்டும் காரைதீவுக்கு நியமிக்கப்பட்டார்.

ஐந்து வருட கால சேவையை பூர்த்தி செய்து தற்பொழுது அவர் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இவரது தெரிவுக்காக சரமாரியாக வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன.

இவரது இடத்திற்கு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி சஜிந்ரன் இராகுலநாயகி பதில் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# வழிகாட்டல் கருத்தரங்கு

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

நற்பிட்டிமுனை team 97 சமூகசேவைகள் அமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் வழிகாட்டல் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் அதன் தலைவர் ஏ.ரீ.ம் அப்ரிட் தலைமையில் நற்பிட்டிமுனை அல்அக்ஸா மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் 156 மாணவர்கள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் கல்வியில் மாணவர் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை எவ்வாறு வெற்றி கொள்வது தொடர்பில்க கலந்து கொண்ட வைத்தியர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

# தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் 20 வருட நிறைவு

## மாபெரும் விழாவுக்கான கலந்துரையாடல்

**அட்டாளைச்சேனை விசேட நிருபர்**

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் விசேட நிர்வாக சபைக் கூட்டம் நேற்று காலை 10.00 மணிக்கு அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கூட்ட மண்டபத்தில் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நுஜா ஊடக அமைப்பின் தவிசாளர் ஏ.எல். றமீஸ், சிரேஷ்ட பிரதித் தலைவர் எஸ்.எல்.எம்.அபுபக்கர், பிரதித் தலைவரும், பன்னூலாசிரியருமான எஸ்.எல்.மன்சூர், சிரேஷ்ட ஆலோசகர் ஐ.எல்.எம்.தாஹிர், பொருளாளர் ஜுல்பிகா செரீப், தேசிய ஒருங்கிணைப்பாளர் பீ.எம்.றியாத் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நுஜா ஊடக அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதியுடன் 20 வருடங்களை நிறைவு செய்வதால் மாபெரும் விழாவொன்றை ஏற்பாடு செய்வதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் நிறைவு விழாவுக்கு முன்னோடி நடவடிக்கைகளை செயற்படுத்துவது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது.




இங்கு தலைவர் எஸ்.எம்.அறூஸ், தவிசாளர் ஏ.எல்.றமீஸ், சிரேஷ்ட பிரதித் தலைவர் எஸ்.எல்.எம்.அபுபக்கர், பிரதித் தலைவர் எஸ்.எல். மன்சூர் ஆகியோர் உரையாற்றியதுடன் நிர்வாகசபை உறுப்பினர்கள் பலரும் தமது கருத்துக்களையும் தெரிவித்தனர்.

20 வருட நிறைவு விழாவுக்கு முன்னோடியாக செயற்படுத்தவுள்ள 20 வேலைத்திட்டங்களின் முதலாவது வேலைத்திட்டம் இம்மாதம் நடுப்பகுதியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதுடன், இந்நிகழ்வுகளில் ஊடகத்துறை சார் அதிதிகள் பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.கடந்த 20 வருடங்களாக ஊடகவியலாளர்களின் உரிமைக்காகவும், நலனுக்காகவும் பல்வேறுபட்ட அர்ப்பணிப்புகளையும், வேலைத் திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்ற நுஜா ஊடக அமைப்பு சமூக உரிமைக்காகவும் குரல் கொடுத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நுஜா ஊடக அமைப்பு 2004ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி அட்டாளைச்சேனை முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் தலைமையில் வெற்றிகரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# கல்முனையில் மின், இலத்திரனியல் கழிவுகள் சேகரிப்பு



**கல்முனை விசேட நிருபர்**

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் மின்சாரம் மற்றும் இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை மாநகரசபையும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இவ்வேலைத்திட்டம், கல்முனை மாநகரசபை முன்றலில் மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி தலைமையில் சுற்றாடல் அதிகார சபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர் எம்.எம்.இஸ்ஹாக்கின் நெறிப்படுத்தலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாநகர சபையின் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜெளஸி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், உள்ளூராட்சி உத்தியோகத்தர் தாரிக் அலி சர்ஜுன் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

இரண்டு நாட்கள் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வேலைத் திட்டத்தின் மூலம் வீடுகளிலும் பொது இடங்களிலும் பாவனைக்குதவாமல் ஒதுக்கி அகற்றப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் இலத்திரனியல் கழிவுகளை மாநகர சபையின் கழிவகற்றல் வாகனங்களில் சேகரித்து முறையாக அகற்றுவதன் மூலம் சூழலின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர் எம்.எம்.இஸ்ஹாக் தெரிவித்தார்.

# சித்தமருத்துவ கல்லூரியில் வைத்தியர் நித்தி கனகரத்தினத்தின் விரிவுரைகள்



**திருகோணமலை தினகரன் நிருபர்**

அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்திருக்கும் வைத்தியர் நித்தி கனகரத்தினம் கடந்த இரு தினங்களாக கிழக்கு பல்கலைக்கழகத்தின், திருகோணமலை வளாகத்தில் அமைந்துள்ள சித்தமருத்துவ கல்லூரியில் மருத்துவம் தொடர்பான விசேடவிரிவுரைகளை நடத்தினார்.

ஆனால் 1981 ஆம் ஆண்டில், வந்தாறுமூலை கிழக்கு பல்கலைகழகத்தின் முதலாவது விவசாய பீடாதிபதியாக கடமையாற்றியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியா விக்டோரியா பல்கலைக்கழகத்தின் மருத்துவியல் விரிவுரையாளராக சுமார் 16 வருடங்கள் பணியாற்றினார். அத்துடன் 'பாரம்பரிய தமிழர் உணவுகளின் போசணைக் கூறுகள் 8 ஓர் அறிவியல் நோக்கு" எனும் நூலை விரைவில் இவர் வெளியீட்டு வைக்கவுள்ளார். இவர் யாழ்ப்பாணம் நாவற்குழி தச்சன்தோப்பு என்னுமிடத்தில் சித்த, மேற்கத்திய இணைந்த மருத்துவமனையொன்றை தனது சொந்த முயற்சியில் நிறுவியுள்ளார்.

விரைவில் அதன் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில்

# நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய 55 வர்த்தகர்களுக்கு அபராதம்

அம்பாறை மாவட்டத்தில் கடந்த மே மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 55 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 01 இலட்சத்தி 72 ஆயிரத்தி 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தக்கண்டி ஆகிய நீதிமன்றAங்களின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 103 வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, இதில் 55 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், இவ் வர்த்தகர்களுக்கு 01 இலட்சத்தி 72 ஆயிரத்தி 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஏனைய வர்த்தகர்களுக்கு நீதி மன்றிங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றி வளைப்புகளை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

அத்தியவசியப் பொருட்களுக்கு அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கெதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாகவும் கூறினார்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை

# புதிய வைத்திய அத்தியட்சகராக டொக்டர் ஐ.எம்.ஜவாஹிர் பதவியேற்பு

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



பொதுச் சேவை ஆணைக் குழுவின் நியமனத்தின் அடிப்படையில் சுகாதார அமைச்சினால், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அத்தியட்சகராக நியமிக்கப்பட்ட அட்டாளைச்சேனையைச் சேர்ந்த டொக்டர் ஐ.எம். ஜவாஹிர் தனது கடமையை அண்மையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதற்கு முன்னர் இவர், அக்கரைப்பற்று மற்றும் கிண்ணியா ஆதார வைத்தியசாலைகளில் பதில் வைத்திய அத்தியட்சகராக பணியாற்றியுள்ளார்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2021ஆம் ஆண்டு வரை வைத்திய அத்தியட்சகராக பணியாற்றிய இவருடைய காலப்பகுதியில் வைத்தியசாலை நிர்வாகம் மேம்பட்டதோடு, மிகச்சிறப்பான தேசிய ரீதியான அடைவுகளையும் பெற்றிருந்தது. அந்தவகையில், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் நிகழ்வில் தேசிய ரீதியாக தங்க விருதும், 2018 இல் ஜனாதிபதி பசுமை விருது வழங்கும் நிகழ்வில் வெண்கல பதக்கமும் இவ்வைத்தியசாலைக்கு கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் உலக சுற்றுச் சூழல் தின நிகழ்வுகள்

மாங்குளம் குறூப், மன்னார் குறூப் நிருபர்கள்






உலக சுற்றுச் சூழல் தின நிகழ்வுகள் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் நேற்று புதன்கிழமை கடைப்பிடிக்கப்பட்டதுடன், பயன்தரும், பலனளிக்கும் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. சிரமதானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் மற்றும் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகமும் இணைந்து முல்லைத்தீவின் மாங்குளம் பிரதான வீதியோரத்தில் மரக்கன்றுகளை நடுகை செய்தன. சுற்றுலா தளமாக அபிவிருத்தி செய்யப்படும் நீர் நிலையை சுற்றி இலுப்பை கன்றுகள் மற்றும் பூமரக் கன்றுகள் இதன் போது நடப்பட்டன.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட பட்டண சூழலை தூய்மைப்படுத்தும் வகையில் சிரமதானப் பணியும் அம்மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை மன்னார் பெரியபாலம் மற்றும் தள்ளாடி பிரதேசத்துக்கும் இடையில் காணப்படும் கடற்கரையோரத்தில் கண்டல் தாவரங்கள் மீள் நடுகை செய்யப்பட்டன.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் மன்னார் நகர பிரதேச செயலகமும் இணைந்து மெசிடோ நிறுவனத்தின் உதவியுடன் ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இதற்காக 300 கண்டல் தாவரங்களை டினோஸா கண்டல் தாவரப் பள்ளியினர் வழங்கினர்.

## வடக்கின் உதயம்



இலங்கை போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலைக்கு நேற்று புதன்கிழமை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயம் செய்து அங்குள்ள நிலைமையை ஆராய்ந்தார். கோண்டாவில் டிப்போவிலுள்ள குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக சாரதிகள் மற்றும் நடத்துநர்களிடம் அவர் கேட்டறிந்து கொண்டார். (படம்: யாழ். விசேட நிருபர்)

# நெடுங்கேணியில் வீட்டுக்குள் நுழைந்த பொலிஸ் வாகனம்



புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

வவுனியா, புளியங்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரியின் வாகனம், நெடுங்கேணி பிரதேசத்திலுள்ள தனியார் வீடொன்றுக்குள் புகுந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன்போது அந்த வீட்டுக்கும் அங்கிருந்த சொத்துகளுக்கும் இந்த விபத்தினால் சேதம் ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீட்டின் முன்பகுதி வேலி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவற்றை மோதித் தள்ளி வீட்டின் இணைப்புக்குரிய மின்சார கம்பத்தையும் மோதி உடைத்துள்ளதால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு வீட்டிலுள்ள இலத்திரன் உபகரணங்கள் அனைத்தும் சேதமடைந்துள்ளதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தை தொடர்ந்து அந்தப் பிரதேசத்துக்கு விசேட அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் நெடுங்கேணி பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளதுடன், தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு குறித்த விபத்து தொடர்பான தடயங்களை சேகரிக்க நடவடிக்கை எடுத்தனர்.

# இந்திய மக்களவை தேர்தலில் பா.ஜ.க. வெற்றி; யாழில் கொண்டாட்ட நிகழ்வு

யாழ். விசேட நிருபர்



இந்தியாவின் 14ஆவது மக்களவை தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சி தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாகவும் அதிக ஆசனங்களை பெற்று வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியை கொண்டாடும் நிகழ்வு, யாழ்ப்பாண நகரிலுள்ள வைரவர் கோயில் முன்றலில் நேற்று நடைபெற்றது.

இலங்கை சிவசேனை அமைப்பு மற்றும் இலங்கை உருத்திரசேனை அமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் வெற்றி கொண்டாட்ட நிகழ்வு நடைபெற்றது. இதன்போது வைரவர் கோயிலில் கற்பூரம் ஏற்றப்பட்டு, சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டு வழிபாடு நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து பட்டாசு கொழுத்தியும் வெற்றி கொண்டாட்டம் நடைபெற்றது.

இதன் பின்னர் பொதுமக்களுக்கு மோதகம், லட்டு போன்ற இனிப்புப் பண்டங்கள் அவர்களால் பரிமாறப்பட்டு மகிழ்ச்சி வெளிப்படுத்தப் பட்டது.

# முன்னாள் எம்.பி. சிவசிதம்பரத்தின் நினைவுதின நிகழ்வு அனுஷ்டிப்பு

யாழ். விசேட, நாகர்கோவில் விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்



மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சிவசிதம்பரத்தின் 22ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வு நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம், நெல்லியடி பிரதேசத்தில் நடைபெற்றது.

நெல்லியடியில் அமைந்துள்ள அன்னார் சிவசிதம்பரத்தின் உருவச் சிலைக்கு அருகில் நினைவுதின நிகழ்வு நடைபெற்றது. இதன்போது உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவுதின நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்.

இலங்கைத் தமிழ் அரசியலில் முன்னாள் எம்.பி.யான முருகேசு சிவசிதம்பரம் நீண்டகாலம் செயற்பட்டதுடன், இவர் ஒரு சட்டத்தரணியாகவும் இருந்துள்ளார். பாராளுமன்ற துணை சபாநாயகராகவும் 1968ஆம் ஆண்டு முதல் 1970ஆம் ஆண்டுவரை இவர் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இளம் பெண்ணின் சடலம் மீட்பு

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம், புங்குடுதீவு பிரதேசத்தில் இளம் பெண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புங்குடுதீவு, மடத்துவெளி வயலூர் முருகன் ஆலய கிணற்றிலிருந்தே இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. புங்குடுதீவு, மடத்துவெளி எட்டாம் வட்டாரத்தை சேர்ந்த 27 வயதுடைய சிவகுகானந்தன் சிந்துயா என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

# யுத்தத்தில் தந்தையை இழந்த கிளிநொச்சி மாணவி சாதனை

மாங்குளம் குறூப் நிருபர்



முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்ட யுத்தத்தில் தனது தந்தையை இழந்த மாணவி ஒருவர், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 03 A சித்திகளை பெற்று, உயிரியல் விஞ்ஞான பிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளார். அகில இலங்கை ரீதியில் 124 ஆவது இடத்தை இம்மாணவி பெற்றுள்ளார்.

மணிவண்ணன் துஷாகா என்ற மாணவியே இச்சாதனையை நிலை நாட்டியுள்ளார். யுத்தத்தில் தந்தையை இழந்த நிலையில், அரசாங்க உத்தியோகத்தராக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பணியாற்றி வரும் தனது அன்னையின் அரவணைப்பில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கல்வி கற்று வந்த இம்மாணவிக்கு பலரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

தனது கணவரின் கனவான மகள் வைத்தியராக வேண்டுமென்ற கனவை தனது மகள் நிறைவேற்றியுள்ளதாகவும் இதனால் தான் பெருமை கொள்வதாகவும் அம்மாணவியின் அன்னை தெரிவித்தார்.

# சட்டவிரோத மணல் அகழ்வுக்காக பயன்படுத்திய ஹன்டர் வாகனம் மீட்பு

நாகர்கோவில் விசேட நிருபர்



யாழ்ப்பாணம், வடமராட்சியின் வல்லிபுரம் பிரதேசத்தில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வுக்காக பயன்படுத்தப்பட்டு வந்த ஹன்டர் ரக வாகனமொன்று விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளது.

வல்லிபுரம் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெறுவதாக கிடைத்த தகவலை அடுத்து விசேட அதிரடிப்படையினர் அங்கு சென்று சோதனை நடத்தினர். இதன்போது மணல் கடத்தலில் ஈடுபட்டிருந்தவர்கள் மேற்படி வாகனத்தை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், இந்த ஹன்டர் ரக வாகனம் மீட்கப்பட்டுள்ளதாகக் கூறினர்.

இவ்வாறு மீட்கப்பட்ட வாகனம் பருத்தித்துறை பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# கஞ்சாவுடன் மூவர் கைது

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம், கல்வியங்காடு பிரதேசத்தில் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் பொலிஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர்களிடமிருந்து கஞ்சாவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சோதனையின் போதே இச்சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களிடமிருந்து 190 மில்லிகிராம், 120 மில்லிகிராம், 80 மில்லிகிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இம்மூவரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதை தொடர்ந்து இவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இம்மாதம் 08 இல் 'பார்' திரைப்படம்

கோப்பாய் குறூப் நிருபர்

யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வா கலையரங்கில் எதிர்வரும் சனிக்கிழமை (08) மாலை 4.00 மணிக்கு 'பார்' எனும் ஹிந்தி மொழி திரைப்படம் திரையிடப்படவுள்ளது.

ஆங்கிலமொழி துணை தலைப்புகளுடன் இத்திரைப்படம் திரையிடப்படவுள்ளது.

தமிழ்மொழி திரைப்படங்களுக்கு மாற்றாக உலகின் பல மொழிகளிலான திரைப்படங்கள் திரையிடப்பட்டு, அவை தொடர்பான உரையாடல் மாதாந்தம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் ஓரம்சமாகவே இந்த திரையிடல் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான காட்சிப்படுத்தல் இலவசமென்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# குழாய்வழி மூலமான குடிநீர் விநியோகத்துக்கு வேண்டுகோள்

கிளிநொச்சி குறூப் நிருபர்

கிளிநொச்சியின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் பிரதேசங்களுக்கு குழாய் மூலமான குடிநீர் விநியோகத்தை வழங்குமாறு அப்பிரதேசவாசிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இப்பிரதேசங்களில் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் உவர் நீராக மாற்றமடைந்து வருவதாகவும் இந்நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் இதனால் தாம் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளதாகவும் அம்மக்கள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக தாம் தூய்மையான குடிநீருக்காக நீண்ட தூரம் சென்று, இராணுவ முகாம் மற்றும் ஆலயங்களில் குடிநீரை பெற்று வருவதாகவும் அவர்கள் கூறினர்.

வன்னேரிக்குளத்தில் சுமார் 480 குடும்பங்களை சேர்ந்த 1,650 பேரும் ஆனைவிழுந்தானில் 439 குடும்பங்களை சேர்ந்த 1,365 பேரும் வசிக்கின்றனர்.

எனவே தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் குழாய் மூலமான குடிநீர் விநியோகத்துக்கு ஏற்பாடு செய்து தமக்கு உதவுமாறும் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்துமாறும் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இலவச சட்ட உதவி சேவை

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தின் சாவகச்சேரி, கோயில் குடியிருப்பு பிரதேசத்தில் சட்ட உதவி ஆணைக்குழுவின் இலவச சட்ட உதவிச் சேவை நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை நடைபெறவுள்ளது.

கோயில் குடியிருப்பு கிராம அலுவலர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள சட்ட உதவிச் சேவையின் போது, வீட்டு வன்முறைச் சம்பவங்கள் மற்றும் பால்நிலைசார் வன்முறைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்ட ஆலோசனை, சட்ட வழிகாட்டல்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த சேவையை பெற்றுக்கொள்ள விரும்புவோர் பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை, சட்ட உதவி பெற்றுக்கொள்ள பொருத்தமான ஏனைய ஆவணங்களுடன் வருகை தர வேண்டுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கண்காட்சி





உலக சுற்றாடல் தினத்தை அடையாளப்படுத்தும் முகமாக யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கணித, விஞ்ஞான மன்றம் ஏற்பாடு செய்த விஞ்ஞான கணித உபகரண கண்காட்சி மற்றும் மரம் நாட்டல் நிகழ்வு நேற்று புதன்கிழமை கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வின் ஆரம்பத்தில் தேசிய கொடி, கலாசாலை கொடி, சுற்றாடல் கொடி என்பன ஏற்றி வைக்கப்பட்டன. தேசியகீதம், சுற்றாடல் கீதம் என்பனவும் இதன்போது இசைக்கப் பட்டன .

இதனைத் தொடர்ந்து ஆசிரிய மாணவர்களும் விரிவுரையாளர்களும் கலாசாலை சுற்றாடலை தூய்மையாக பேணுவோம் என உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல்துறை முழுநிலை விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா, சிறப்பு விருந்தினராக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் க.சுபோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வுகளை விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவன் இ.செந்தூர்ச்செல்வன் நெறிப்படுத்தினார். சுற்றாடல் பாதுகாப்பு பற்றிய ஆசிரிய மாணவர் உரையினை கணிதநெறி ஆசிரிய மாணவன் ச.சந்திரகுமார் ஆற்றினார். வரவேற்புரையினை ஆசிரிய மாணவி த.கீற்றாவும் விருந்தினர் அறிமுகவுரையை கல்வி அபிவிருத்திக்கான பிரதி அதிபர் த.கோபாலக்கிருஷ்ணனும் ஆற்றினர்.

அதிதிகளின் உரையை தொடர்ந்து விஞ்ஞான, கணித ஆசிரிய மாணவர்களிடையே நடத்தப்பட்ட விஞ்ஞான வினாடி வினா போட்டிக்கான பரிசளிப்பு நடைபெற்றது.

தொடர்ந்து சூழலை நேசிக்கும் உணர்வுடன் மரங்கள் நாட்டி வைக்கப்பட்டன. இந்த மரங்களை பிரதம விருந்தினர் கலாநிதி த.பிரதீபராஜா, கலாசாலை அதிபர் ச.லலீசன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்களான த.அம்பிகைபாகன் மற்றும் இ.சயந்தன் ஆகியோர் நாட்டினர்.

நிகழ்வின் நிறைவாக கணித, விஞ்ஞான உபகரண கண்காட்சி கூடம் திறந்து வைக்கப்பட்டது. காட்சிக் கூடத்தை பிரதம விருந்தினர் திறந்து வைத்தார்.

# அவசரமாக புதுடில்லி புறப்பட்ட ஸ்டாலின்!

## தமிழகத்தில் அத்தனை தொகுதிகளையும்(40) கைப்பற்றிய தி.மு.க



டெல்லியில் நடைபெற்ற இந்தியா கூட்டணி தலைவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க நேற்று (புதன்கிழமை) காலை டெல்லி புறப்பட்டார் முதல்வர் மு.க.ஸ்டாலின். நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் இந்தியா கூட்டணி 232 இடங்கள் வெற்றி பெற்ற நிலையில், நேற்று மாலை 6 மணிக்கு டெல்லியில் காங்கிரஸ் தலைவர் கார்கே இல்லத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

தமிழகம், புதுச்சேரியில் 40 இற்கு 40 தொகுதிகளைக் கைப்பற்றி சாதனை படைத்திருக்கும் முதல்வர் ஸ்டாலின், இந்தியா கூட்டணி ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க நேற்று அவசரமாக டெல்லி சென்றார்.

டெல்லி, இமாச்சல பிரதேசம், உத்தரகாண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் பல தொகுதிகளை கைப்பற்றியிருந்தாலும் உத்தரப் பிரதேசம், தமிழகம் உள்ளிட்ட பெரிய மாநிலங்களில் பா.ஜ.கவுக்கு தோல்வி ஏற்பட்ட நிலையில், பெரும்பான்மையுடன் ஆட்சி அமைப்பதில் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது.

பா.ஜ.க இதை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி நிதிஷ்குமார், சந்திரபாபு நாடு ஆகியோருடன் கூட்டணி அமைத்து ஆட்சி அமைப்பதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

ஆட்சி அமைப்பது தொடர்பாக பாஜக, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் தங்களது கூட்டணி கட்சிகளுடன் நேற்று முக்கிய ஆலோசனைக் கூட்டத்தை நடத்தின.

# பத்து வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் கூட்டணி அரசாங்கம்!

இந்தியாவில் பத்து வருடங்களுக்குப் பின்னர் மத்தியில் மீண்டும் கூட்டணி ஆட்சி அமைகிறது. இதனால் 2024 மக்களவைத் தேர்தலில் மோடி அலை ஓய்ந்து விட்டதாகக் கருதப்படுகிறது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மக்களவை தேர்தல் முடிவுகள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்திவிட்டன.

இந்தமுறை 370 தொகுதிகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்த பா.ஜ.கவிற்கு 240 இடங்களே கிடைத்துள்ளன. பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணிக்கு (என்.டி.ஏ)) எதிர்பார்க்கப்பட்ட 400 இற்குப் பதிலாக 291 தொகுதிகள் கிடைத்துள்ளன. அனைத்துக் கருத்துக் கணிப்புகளும் ஒரே குரலில் 300 முதல் 400 வரையிலான தொகுதிகள் கிடைக்கும் எனக் கணித்ததும் அது தவறாகப் போனது.

கடந்த 1999 தேர்தலில் பா.ஜ.க 182 தொகுதிகள் பெற்றும் கூட்டணி ஆட்சியை அமைத்திருந்தது. 2004 மக்களவைத் தேர்தலில் மீண்டும் பா.ஜ.க தலைமையிலான என்.டி.ஏ



நிதிஷ்குமார், சந்திரபாபு நாயுடு

ஆட்சி அமையும் என பெரிய எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால், பா.ஜ.கவுக்கு மேலும் குறைந்து 138 தொகுதிகள் கிடைத்தன.

இதன் காரணமாக, வாஜ்பாய் தலைமையிலான என்.டி.ஏ ஆட்சி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணியிடம் பறிபோனது. எனினும், காங்கிரஸ் தலைமையில் தொடங்கிய கூட்டணி ஆட்சி 2009 மக்களவைத் தேர்தலுக்கு பிறகும் தொடர்ந்தது. இந்தக் கூட்டணி ஆட்சி நிலையை 2014

## 'மோடி அலை' ஓய்ந்தது! தோழமைக் கட்சிகளின் ஆதரவுடன் பா.ஜ.க ஆட்சி!

இல் மாற்றிக் காட்டிய மோடி அலை, 2024 இல் ஓய்ந்து விட்டது புரிகிறது.

இதனால், பத்து வருடங்களுக்கு பிறகு மத்தியில் மீண்டும் கூட்டணி ஆட்சி அமைகிறது. இதற்கு மீண்டும் பா.ஜ.கவே தலைமை ஏற்றாலும் அது, 'நித்திய கண்டம் பூர்ண ஆயுசாகவே' தொடரும் எனக் கருதப்படுகிறது.

இதை பா.ஜ.கவிடமிருந்து பறிக்க எதிர்க் கட்சிகளின் கூட்டணியான 'இந்தியா' இப்போதே வியூகம் அமைக்கத் தொடங்கி விட்டது. இதற்கு ஏதுவாக இந்தியா கூட்டணிக்கு 234 தொகுதிகள் கிடைத்துள்ளன.

என்.டி.ஏவின் முக்கிய உறுப்பினராக பீஹாரின் முதல்வரும் ஐக்கிய ஜனதா தளம் தலைவருமான நிதிஷ் குமார் உள்ளார். மற்றொரு உறுப்புக் கட்சியின் முக்கிய தலைவராக தெலுங்கு தேசத்தின் தலைவர் சந்திரபாபு நாயுடு இடம்பெற்றுள்ளார்.

அவ்வப்போது இந்த இரண்டு தலைவர்களும் முன்வைக்கும் கோரிக்கைகள் பா.ஜ.கவிற்கு பெரும் சவாலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களைச் சமாளிக்க இந்தியா கூட்டணியின் உறுப்பினர்களையும் பா.ஜ.க குறிவைக்கும் வாய்ப்புகள் உள்ளன.

இந்தியாவில் கூட்டணி ஆட்சி புதிதல்ல. இது 1977 இல் ஜனதா கட்சியின் பேரில்



தொடங்கிய போது நிலைக்கவில்லை. பிறகு காங்கிரஸின் பிரதமர் பி.வி.நரசிம்மராவ் ஆட்சிக்கு பெரும்பான்மை இல்லை என்றாலும் அவர் பல்வேறு கட்சிகளின் மறைமுக ஆதரவுடன் ஆட்சியை நீடித்தார்.

இதுபோல், கட்சிகளை உடைக்கும் புகார் பா.ஜ.க, காங்கிரஸ் கட்சிகள் மீது ஏற்கெனவே உள்ளது. தற்போதைய சூழலில் கூட்டணி ஆட்சி அமைந்தால் மீண்டும் கட்சிகள் உடைப்பும் இருக்குமா? எனும் கேள்வி எழுந்துள்ளது.

# தெலுங்கு தேசம் கட்சியை இழுத்தெடுத்து ஆட்சியமைக்க காங்கிரஸ் முற்படுகிறதா?

## தமது நிலைப்பாட்டை விளக்குகிறார் சந்திரபாபு நாயுடு



நான் தேசிய ஜனநாயக கூட்டணியில்தான் (என்.டி.ஏ_ பா.ஜ.க கூட்டணி) அங்கம் வகிக்கிறேன். என்.டி.ஏ கூட்டணியின் கூட்டத்துக்கு செல்கிறேன் என்று கூட்டணி குறித்து தனது நிலைப்பாட்டை நேற்று தெளிவுபடுத்தியுள்ளார் சந்திரபாபு நாயுடு. இதன்மூலம் பா.ஜ.க கூட்டணி ஆட்சி அமைவது உறுதியாகியுள்ளது.

ஆந்திர சட்டப்பேரவை தேர்தலில், தெலுங்கு தேசம் கட்சி வெற்றி பெற்று பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கிறது. அமராவதியில் எதிர்வரும் 9 ஆம் திகதி சந்திரபாபு நாயுடு 4 ஆவது முறையாக முதல்வராக பதவியேற்க உள்ளார். மொத்தம் உள்ள 175 தொகுதிகளில் தெலுங்கு தேசம் 133 தொகுதிகளிலும், ஜனசேனா கட்சி 21 தொகுதிகளிலும் பா.ஜ.க 8 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. அதன்படி 160 இற்கும் மேற்பட்ட தொகுதிகளில் தெலுங்கு தேசம் கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றது.

வெற்றியை தொடர்ந்து நேற்று (புதன்கிழமை) செய்தியாளர்களைச் சந்தித்த சந்திரபாபு நாயுடு, தேசிய ஜனநாயக கூட்டணி குறித்து தனது நிலைப்பாட்டை விளக்கினார்.

"எனக்கும் அனுபவங்கள் உள்ளன. நாட்டில் பல்வேறு அரசியல் மாற்றங்களைக் கண்டுள்ளேன். இது மாதிரியான சிறப்புத் தேர்தலை பார்த்தது இல்லை. தேசிய ஜனநாயக கூட்டணியில்தான் அங்கம் வகிக்கிறேன். இன்று நடக்கும் என்.டி.ஏ கூட்டணியின் கூட்டத்துக்கு செல்கிறேன். கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் குறித்து பின்னர் தெரிவிக்கப்படும்" என்றார் அவர்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கமாக இருந்து இந்த வெற்றியை பெற்றுள்ளோம். தெலுங்கு தேசம், பா.ஜ.க, ஜனசேனா இணைந்து பணியாற்றியதால்தான் இந்த வெற்றி கிடைத்தது. ஜனசேனா தலைவர் பவன் கல்யாணுக்கும், பிரதமர் மோடி, அமித் ஷாவுக்கும் எனது நன்றிகள்.

தெலுங்கு தேசம் கட்சியை வெற்றிபெற வைத்த மக்களுக்கும் எனது நன்றி. என் வாழ்நாளில் இது போன்று சிறப்புமிக்க தேர்தலை கண்டதில்லை. மக்கள் நலனுக்காக எந்த தியாகத்தையும் செய்ய தயாராக இருக்கிறேன். நாங்கள் எதிர்பார்த்ததை விட மக்கள் அதிகளவில் எங்களுக்கு வாக்களித்துள்ளனர்" என்று அவர் தெரிவித்தார்.

மத்தியில் ஆட்சி அமைக்க 272 உறுப்பினர்கள் தேவை என்ற நிலையில், ஆளும் பா.ஜ.கவுக்கு தனித்து தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. உத்தர பிரதேசம், மகாராஷ்டிராவில் இந்தியா கூட்டணி அபார வெற்றி பெற்றிருப்பது, பா.ஜ.கவுக்கு பின்னடைவாக அமைந்துள்ளது. மேற்கு வங்கத்திலும் பா.ஜ.கவுக்கு எதிர்பார்த்த அளவு வெற்றி கிடைக்கவில்லை.

சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம், நிதிஷ்குமாரின் ஐக்கிய ஜனதா தளம் ஆகிய கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் மத்தியில் 3 ஆவது முறையாக ஆட்சி அமைக்க பா.ஜ.க பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. தெலுங்கு தேசம் 16 தொகுதிகளிலும், ஐக்கிய ஜனதா தளம் 12 தொகுதிகளிலும் வென்றுள்ளன. இதனை தொடர்ந்தே இவர்களின் ஆதரவுடன் மத்தியில் 3 ஆவது முறையாக பா.ஜ.க ஆட்சி அமைக்கிறது.

அதேநேரம், இந்தியா கூட்டணி சார்பில் சந்திரபாபு நாயுடுவை இழுக்க முயற்சி நடந்துவருவதாக பேச்சுக்கள் வெளியாகின. இந்தநிலையில், தான் தேசிய ஜனநாயக கூட்டணியில் தொடர்ந்து அங்கம் வகிப்பதாக கூறி தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளார் சந்திரபாபு நாயுடு.

# ஏற்றத்தில் செல்கிறது இந்திய பங்குச்சந்தை

மக்களவைத் தேர்தல் முடிவுகள் வெளியாகி உள்ள நிலையில் இந்திய பங்குச் சந்தை மீண்டும் ஏற்றம் கண்டு வருகிறது. நேற்றுக் காலை சந்தை வர்த்தகம் தொடங்கியது முதலே சென்செக்ஸ் மற்றும் நிஃப்டி என இரண்டிலும் புள்ளிகள் உயர்ந்துள்ளன.

தேர்தல் முடிவுகள் நேற்றுமுன்தினம் வெளியான போது இந்திய பங்குச் சந்தை வர்த்தகம் வீழ்ச்சியை எதிர்கொண்டது. நேற்றுமுன்தினம் சுமார் 6,000 புள்ளிகள் வரை சென்செக்ஸ் சரிந்தது. நிஃப்டி 50 உம் சுமார் 1,400 புள்ளிகளுக்கு கீழ் சரிந்திருந்தது. இது முதலீட்டாளர்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில், நேற்றுக் காலை வர்த்தகம் தொடங்கியது முதலே மும்பை பங்குச் சந்தை மற்றும் தேசிய பங்குச் சந்தை சீரான ஏற்றம் கண்டு வருகிறது.

முன்னதாக, தேர்தல் கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியான நிலையில் திங்கட்கிழமை அன்று பங்குச் சந்தை வர்த்தகம் உச்சத்தை எட்டி இருந்தது குறிப்பிடத்தக்கது. நேற்றுமுன்தினம் சந்தையில் வீழ்ச்சி ஏற்பட்ட நிலையில் தற்போது சீரான ஏற்றம் கண்டுள்ளது.

# அ.தி.மு.கவுக்கு பத்தாவது தடவையாக படுதோல்வி!



## ஒரு ஆசனம் கூட இல்லை

இம்முறை லோக்சபா தேர்தலில் அ.தி.மு.க படுதோல்வி அடைந்து உள்ளது. தொடர்ந்து 10 ஆவது முறையாக அ.தி.மு.க தேர்தலில் தோல்வி அடைந்துள்ளது. தேர்தலில் அ.தி.மு.க ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறவில்லை. தி.மு.க கூட்டணி 40 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளது. அதிமுகவின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி வந்த காலத்தில் இருந்து வரிசையாக அக்கட்சி தோல்விகளை தழுவி வருகிறது. வரிசையாக 9 தேர்தல்களில் அ.தி.மு.க தோல்வி அடைந்தது. இப்போது 10 ஆவது தேர்தலில் அக்கட்சி தோல்வி அடைந்து உள்ளது.

2017 ஆம் ஆண்டு ஆர்.கே.நகர் இடைத்தேர்தல், 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல், அதே ஆண்டு 22 சட்டசபை தொகுதிகளின் இடைத்தேர்தல், 2020 ஊரக உள்ளாட்சி தேர்தல், 2021 சட்டசபை தேர்தல், 2021 ஆம் ஆண்டு நடந்த 9 மாவட்ட ஊரக உள்ளாட்சி தேர்தல், 2022 ஆம் ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல், 2023 ஆம் ஆண்டு ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல், 2020 இல் நடந்த கன்னியாகுமரி லோக்சபா இடைத்தேர்தல் என மொத்தம் 9 தோல்விகளை எடப்பாடி தலைமையிலான அ.தி.மு.க சந்தித்தது. இன்றோடு 10 ஆவது தேர்தலில் தோல்வி அடைந்து உள்ளது.

# பாரதம்

## சமகால நடப்புகள்

# எதிர்வரும் சனிக்கிழமை பதவியேற்கிறார் மோடி

எதிர்வரும் 8 ஆம் திகதி 3 ஆவது முறையாக பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்பார் என தகவல் வெளியாகி உள்ளது.

லோக்சபா தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 291 இடங்கள் கிடைத்துள்ளன. பா.ஜ.க தனித்து 240 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. மீண்டும் தே.ஜ.கூட்டணி ஆட்சி அமைக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் மோடியை பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. தற்போதைய லோக்சபாவை கலைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக தெரிகிறது.

எதிர்வரும் 8 ஆம் திகதி( சனிக்கிழமை) மாலை மோடி 3 ஆவது முறையாக பதவி ஏற்றுக் கொள்வார் என தகவல் வெளியாகி உள்ளது. புதிய அமைச்சரவையும் பதவியேற்கும் எனத் தெரிகிறது.

# முடிவுக்கு வந்ததா அரசியல் பயணம்?



தற்போது இந்தியாவில் நடந்து முடிந்துள்ள 2024 மக்களவை பாராளுமன்ற தேர்தலில், தி.மு.க கட்சியினருக்கு ஆதரவு அளித்துள்ளார் கமல் ஹாசன். ஒரு தேர்தலில் போட்டியிட்ட கமல், அடுத்து வரும் பெரிய தேர்தலில் போட்டியிடாமல் பெரிய கட்சியுடன் கூட்டணி அமைத்துள்ளார். இதனால் மக்கள் நீதி மய்யம் ஆதரவு இல்லாத ஒரு கூட்டணி கட்சி என மக்கள் மத்தியில் சலசலப்பு எழுந்துள்ளது.

தமிழகத்தில் 2021இல் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு நிகராக இருந்துள்ள பாரதிய ஜனதா கட்சி தற்போது தனித்து போட்டியிட்டு தமிழகத்தில் 10 சதவீத வாக்குகளை அள்ளியுள்ளது. நாம் தமிழர் கட்சி போன்ற இதர கட்சிகளும் பெரிய அளவில் மக்கள் மத்தியில் பிரபலமாகியுள்ளன. சினிமாவில் தற்போது பரபரப்பாக நடித்து வரும் கமல், அடுத்த சட்டமன்ற தேர்தலில் தனித்து போட்டியிட்டால், கட்டுப்பணம் பெறுவாரா? என்ற கேள்வி பலர் மத்தியில் எழுந்துள்ளது.

தி.மு.க கட்சியுடன் கூட்டணி அமைந்து கமல்ஹாசன் தேர்தல் பணி செய்தால், மக்கள் நீதி மய்யம் என்ற கட்சியை தமிழக மக்கள் மறந்து விடுவார்கள் என்று அவரது அபிமானிகள் கூறுகின்றனர். கமலின் எதிர்கால திட்டம் என்ன என்பது தெரியாமல் தடுமாறுகிறது மக்கள் நீதி மய்யம்.

# பிரதமர் அலுவலகத்தில் மோடிக்கு வேலை இல்லை!



## சொல்பவர் சுப்பிரமணியன்சுவாமி

நாடாளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை பெறாததால் மோடி பதவி விலக வேண்டும் என சுப்பிரமணியன்சுவாமி தெரிவித்துள்ளார். மக்களவைத் தேர்தலில் பாஜக மட்டும் தனித்து 239 இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

ஆட்சி அமைக்கத் தேவையான 272 தொகுதிகளில் எந்தக் கட்சியும் வெற்றி பெறாததால் கூட்டணி ஆட்சி அமைகிறது.

இந்நிலையில் இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பா.ஜ.க மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி "பிரதமர் அலுவலகத்தில் மோடிக்கு வேலையில்லை. நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.கவை மக்கள் புறிக்கணித்துள்ளனர். பா.ஜ.க. 240 இடங்களில் மட்டுமே வென்று பெரும்பான்மை பெறாததால் மோடி பதவி விலக வேண்டும். சுயமரியாதை உள்ள எந்த தலைவரும் கண்டிப்பாக இராஜினாமா செய்துவிடுவர்; பதவி நீக்கும் வரை காத்திருக்க மாட்டார்கள். இந்தியாவில் ஜனநாயக ரீதியிலான ஆட்சியை பிரதமர் மோடி வழங்கவில்லை.

பிரதமர் மோடி தோல்வி பயத்தால் தேவையில்லாத பல விஷயங்களை பிரசாரத்தின் போது பேசினார். பிரதமர் அலுவலகத்தில் மோடிக்கு இனி வாய்ப்பில்லை" எனவும் சுப்பிரமணியன்சுவாமி கூறினார்.

# தமிழகம் திராவிட பூமி என்பதை நாட்டுக்கு உணர்த்திய தேர்தல்!



## பா.ஜ.கவை சாடுகிறார் வைகோ

தமிழ்நாட்டில் திராவிட மொடல் நல்லாட்சி நடத்துகின்ற மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைந்த இந்தியா கூட்டணி, அவர் பிரகடனம் செய்தவாறு 40 தொகுதிகளிலும் வெற்றி முரசு கொட்டி தமிழ்நாடு திராவிட பூமி என்பதை இந்தத் தேர்தல் நாட்டுக்கு உணர்த்தியிருக்கிறது என ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "நடைபெற்று முடிந்த 18 ஆவது மக்களவைத் தேர்தலில், இந்தியத் திருநாட்டு மக்கள் ஜனநாயகத்தை நிலைநிறுத்தியிருக்கிறார்கள். பத்தாண்டு காலம் பாசிச அரசு நடத்திய பா.ஜ.கவுக்கு மக்கள் பாடம் புகட்டியிருக்கிறார்கள். 400 இடங்களுக்கு மேல் வெற்றி பெறுவோம் என்று ஆணவமும் அதிகாரத் திமிரும் கொப்பளிக்க தேர்தல் பரப்புரைகளில் மதவெறி ஊட்டி எதேச்சதிகாரப் போக்குடன் நடந்து கொண்டவர்களுக்கு மக்கள் சக்தி என்றால் என்ன என்பதை இந்தத் தேர்தல் உணர்த்தி உள்ளது.

ஒரே நாடு; ஒரே மொழி; ஒரே மதம்; ஒரே கலாசாரம் என்று ஒற்றை இந்துத்துவ தேசியவாதத்தை நிலைநிறுத்த முயன்றவர்களுக்கு 18ஆவது மக்களவைத் தேர்தலில் சரியான அடி விழுந்திருக்கிறது. பா.ஜ.கவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக அமைந்த இந்தியா கூட்டணி இந்திய மக்களின் நம்பிக்கையைப் பெற்று மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கிறது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

பத்தாண்டு கால நரேந்திர மோடி ஆட்சிக்கு எதிராகத்தான் மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களித்திருக்கிறார்கள். எனவே, மோடி அவர்கள் பிரதமர் பதவியில் நீடிக்கின்ற தார்மீக உரிமையை இழந்திருக்கிறார் என்றும் வைகோ தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் மிக இளவயதான எம்.பியாக சாம்பவி சவுத்ரி



இந்தியாவின் இளம் எம்.பி. என்ற பெயரை பீகார் மாநிலத்தைச் சேர்ந்த லோக் ஜனசக்தி கட்சியின் சாம்பவி சவுத்ரி பெற்றுள்ளார்.

பீகாரை சேர்ந்த 25 வயதேயான பெண் சாம்பவி சவுத்ரி அனைவரையும் திரும்பி பார்க்க வைத்துள்ளார். பீகார் லோக்சபா தேர்தலில் சமஸ்திபூர் தொகுதியில் போட்டியிட்ட சாம்பவி சவுத்ரி, 1,87,251 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் காங்கிரஸ் வேட்பாளரை வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் இந்தியாவின் இளம் எம்.பி. என்ற அந்தஸ்தை சாம்பவி சவுத்ரி பெற்றுள்ளார்.

அரசியல்வாதியான சாம்பவி சவுத்ரியின் தாத்தா மஹாவீர் சவுத்ரி காங்கிரஸ் ஆட்சியில் அமைச்சராக இருந்தவர். அதன்பின் அவரின் தந்தை அசோக் சவுத்ரி காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி ஐக்கிய ஜனதா தளம் கட்சியில் இணைந்தவர். தற்போதைய நிதிஷ் குமார் ஆட்சியின் அமைச்சரவையிலும் இடம் பெற்றுள்ளார்.

டெல்லியில் உள்ள பிரபல கல்லூரியில் சமூகவியல் துறையில் பட்டம் பெற்றவர் சாம்பவி சவுத்ரி. இந்த வெற்றிக்கு பின் சாம்பவி சவுத்ரி பேசுகையில், மக்களின் எதிர்பார்ப்புகளை நிச்சயம் பூர்த்தி செய்வேன். மிகப்பெரிய வெற்றியை சமஸ்திபூர் மக்கள் எனக்கு கொடுத்துள்ளனர். இதன் மூலம் அவர்களின் மனதிலும் இடம் கிடைத்துள்ளதாகவே கருதுகிறேன் என்றார்.

மக்கள் என்னை தங்களின் மகளாக ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார். இவருக்கு முன்னாள் ஐ.பி.எஸ் அதிகாரியான ஆச்சரியா கிஷோர் குணாலின் மகன் சயன் குணாலுடன் திருமணம் முடிந்துள்ளது. இந்தியாவின் இளம் எம்பியாக தேர்வாகியுள்ள சாம்பவி சவுத்ரிக்கு பலரும் வாழ்த்து கூறி வருகின்றனர்.

# ஐந்து தொகுதிகளில் 3 ஆவது இடத்தில் நாம் தமிழர் கட்சி



லோக்சபா தேர்தலில் தமிழ்நாட்டின் 39 தொகுதிகளில் 5 தொகுதிகளில் 3 ஆவது இடத்தைப் பிடித்திருக்கிறது சீமானின் நாம் தமிழர் கட்சி. 12 தொகுதிகளில் 1 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுள்ளனர் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள். தமிழ்நாட்டின் 39 லோக்சபா தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் தனித்து களம் கண்டனர். திருச்சி, கள்ளக்குறிச்சி, கன்னியாகுமரி, நாகப்பட்டினம் ,ஈரோடு ஆகிய 5 தொகுதிகளில் 3 ஆவது இடத்தைப் பிடித்தனர் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள்.

மொத்தம் 12 தொகுதிகளில் 1 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் பெற்றுள்ளனர். அனைத்து தொகுதிகளிலும் 50,000 இற்கும் அதிகமான வாக்குகளையே நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் பெற்றுள்ளனர்.

# கிழக்கு புற்றுநோய் பராமரிப்பு நிலைய நிர்வாகிகள் சம்மாந்துறை சுகாதார அலுவலகத்துக்கு விஜயம்



**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

ஏறாவூர் புற்றுநோய் பராமரிப்பு நிலைய நிர்வாகிகள், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.ஐ.எம். கபீர் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோருடனான கலந்துரையாடலொன்று சம்மாந்துறை சுகாதார நிலைய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது .

இதன்போது இப்பிரதேசத்திலிருந்து புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களை பராமரிக்கும் பயிற்சியாளர்களுக்கு ( Training of Trainers) பயிற்சியை வழங்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

கிழக்கு புற்றுநோய் பராமரிப்பு நிலையம் கடந்த 04ஆம் திகதியிலிருந்து ஏறாவூர் சவுக்கடி வீதியில் இயங்கி வருகிறது. தீவிரநோய்வாய்ப்பட்ட புற்றுநோயாளர்களை கவனிப்பதை பிரதான நோக்காக இது கொண்டுள்ளது.

இங்கு நோயாளிகள் முழுநேரம் மகிழ்ச்சியாக தங்கி நோய்த் தடுப்பு சிகிச்சை, ஆலோசனை, உணவு, மருந்துகள், பொழுது போக்கு வசதிகள் என்பவற்றை பெற்றுகொள்ளலாம்.

# ஜயமாலபுர முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம்

**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

கம்பளைக்கும் நாவலப்பிட்டிக்குமிடையில் ஜயமாலபுர என்னுமிடத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவ விழா 07ஆம் திகதி காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. அன்று முதலாவதாக கணபதி அனு புண்ணியா வாஜனம், கிராம சாந்தி, வாஸ்து சாந்தி, ரக்ஷா பந்து, காப்புக் கட்டுதல், முகூர்த்த கால் நாட்டுதல் என்பன நடைபெறும். தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். மாலை 5.00மணியளவில் கரகம் பாலித்தல் என்பன இடம்பெறும். எதிர்வரும் 8ஆம் திகதி பால்குட பவனியை தொடர்ந்து, அஷ்டோத்திர (108) சத சங்காபிஷேகம் மத்தியபூஜையை தொடர்ந்து மகேஸ்வர பூஜையுடன் அன்னதானமும் வழங்கப்படும். அன்று மாலை 5.00 மணிக்கு பட்டு எடுத்தலும் இரவு 7.00மணிக்கு வசந்தமண்டப பூஜையும் இரவு 9.00 மணிக்கு அம்பாள் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட முத்துச்செல்வி வெளிவீதி உலா வருதலும் இடம்பெறும்.

எதிர்வரும் 09ஆம் திகதி காலை 7.00 மணிக்கு அம்பாள் தீர்த்தத்திற்குச் செல்லல் இடம்பெறும். தொடர்ந்து கரகம் குடிவிடல். மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை மாவிளக்கு பூஜை பின்னூட்டம் என்பன இடம்பெறும். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய பரிபாலன சபையினர் செய்துள்ளனர்.



சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னைநாதஸ்வாமி ஆலயத்தில் வருடாந்த பிரதோஷ விரதம் (4) அண்மையில் இடம்பெற்றது. இதன் போது பக்தர்கள் பலர் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுக் கொண்டனர்.

(உடப்பு குறூப் நிருபர்)

# மீனோடைக்கட்டு பிரதேசத்தில் பஸ் தரிப்பிடம் அமைக்கும் பணி

**(பாலமுனை தினகரன் நிருபர்)**



அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட மீனோடைக்கட்டு பிரதான வீதியில் பஸ் தரிப்பிடம் அமைப்பதற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

ஏ.சி.என். நிறுவனத்தின் பணிப்பாளரும், சமூக சேவையாளருமான ஏ.சி.நியாஸின் வேண்டுகோளுக்கிணங்க இந்த பஸ் தரிப்பிடம் அமைக்கப்படவுள்ளது. இப்பகுதியில் பஸ் தரிப்பிடம் இல்லாதுள்ளதால் பலரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனைக் கருத்திற்கொண்டே இதை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்தரிப்பிடம் அமைவதற்கு முயற்சித்த ஏ.சீ.என். நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் பிரதேச சபையினருக்கு பொது மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

# ஆணழகன் போட்டியில் முதலிடம்

**(கல்குடா தினகரன் நிருபர்)**



கிழக்கு மாகாண ஆணழகன் போட்டியில் கோறளைப் பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவில் செம்மண்ஓடையை சேர்ந்த எம்.எல்.எம்.ஸப்ராஸ் முதலிடத்தை பெற்று சாதனை படைத்துள்ளார்.

கிழக்கு மாகண விளையாட்டுத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் ஏற்பாடு செய்து நடாத்திய ஆணழகன் போட்டியில் தங்கப்பதக்கத்தைப் பெற்று மட்டக்களப்பு மாவட்டத்துக்கு பெருமை சேர்த்துள்ளார்.

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**106 கார்கள் விற்பனைக்கு**

NW HC-2111 KIA RIO CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037252

WP KP-3147 TATA NANO CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037259

**109 மிற்சுபிஷி கார்கள் விற்பனைக்கு**

19-8067 MITSUBISHI LANCER CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037251

**110 மாருதி கார்கள் விற்பனைக்கு**

UP KB-6661 MARUTI SUZUKI CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037246

**117 வேன்கள் விற்பனைக்கு**

251-0352 NISSAN SERENA VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037266

62-6651 MERCEDES BENZ VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037262

**118 ஜீப்புகள்,பிக்கப்புகள் விற்பனைக்கு**

WP PQ-9909 MAHINDRA MAXXIMO SINGLE CAB அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037248

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

EP LK-8801 TATA LPK1615 DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037260

JP LC-6028 TATA 207 S/ CAB TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037255

SG DAB-0870 MAHINDRA MAXXIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037263

SP LE-1223 MITSUBISHI FREEZER TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037265

WP HW-0246 TOYOTA DYNA F/B TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037254

WP LL-6542 FOTON AUMARK TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037239

41-1501 ISUZU ELF TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037256

**122 மோட்டார் சைக்கிள், த்ரீவீலர்கள் விற்பனைக்கு**

CP YC-8011 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037258

EP BJD-9458 RANOMOTO MOPED SUPER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037261

SG YM-8523 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037264

WP AAZ-0200 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037244

WP QL-3758 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037242

WP QX-9965 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 037257

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் அலுவலகம், திருகோணமலை**

## அலுவலக உபகரணங்களை வழங்குதல்

## PSSP/PSDG/CBG

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் பின்வரும் ''அலுவலக உபகரணங்கள் - 2024'' என்பதை வழங்கி நிறுவுவதற்காக 2024-06-20ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை முதன்மையாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கிறார்.

அலுவலக உபகரணங்கள் - 2024

| உருப்படி இல. | உருப்படிகள் | விபரங்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாதது |
|---|---|---|---|---|
| Group I- I | 1.1 | Laptop | 2 | 3,500.00 |
| | 1.2 | Photocopy | 5 | |
| | 1.3 | Printer | 4 | |
| | 1.4 | Colour Printer | 2 | |
| | 1.5 | Multimedia Projector | 3 | |
| | 1.6 | Smart Board | 3 | |
| | 1.7 | Desktop Computer | 7 | |
| Group II-I | 2.1 | Air-conditioner | 14 | 3,500.00 |
| | 2.2 | Arm chair | 36 | |
| | 2.3 | Cupboards with glass door | 10 | |
| | 2.4 | High back chair | 2 | |
| | 2.5 | Conference hall Half circle table | 2 | |
| | 2.6 | Conference hall table | 15 | |
| | 2.7 | Ceiling fans | 40 | |

பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து ஆர்வமுள்ள தகுதியுள்ள எந்தவொரு விலைமனுதாரர், முகவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவர் ஆகியோர் 2024-06-06ஆம் திகதியிலிருந்து 2024-06-19ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து நகல் பிரதிகளுடனான விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

- திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்று.
- திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தின் பெயரில் மக்கள் வங்கி, திருகோணமலை நகரக் கிளையின் 255-100120000-490 எனும் கணக்கிலக்கத்திற்கு ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல்.
- வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.
- முதன்மையாளர்களினால் உங்கள் கம்பனியை அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு உள்நாட்டு முகவர்களாக நியமித்தல் தொடர்பாக வழங்கப்பட்ட சான்றிதழ்/கடிதம்.

1. விலைக்கோரல்கள் ஒற்றைக் கட்ட ஒரு கடித உறை முறையில் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
2. ஒவ்வொரு தொகுதி (Group) உருப்படிக்கும் வெவ்வேறாக விலைக்கோரல் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-06-20ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். உறைகளில் தொகுதியின் (Group) பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
4. அனைத்து விலைமனுக்களுடன் விலைமனுப் பெறுமதியின் 2% விலைக்கோரல் பிணைத் தொகையாக இணைக்கப்படல் வேண்டும். விலைக்கோரல் பிணை 2024-08-07ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. அலுவலக உபகரணங்கள் வழங்குதலைக் கையளித்தல் தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
6. ஏதாவது தெளிவுபடுத்தல்களை 026-2220103 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**திருகோணமலை.**

# கேள்வி ஆலோசனைகளைக் கோரல்

## அம்பாறை பொது வைத்தியசாலை

## உணவக சேவையை நடத்திச் செல்லல் - 2024-2025

2024/2025 ஆம் ஆண்டிற்காக அம்பாறை பொது வைத்தியசாலையின் உணவகத்தை உயர்ந்த நிலையில் நடத்திச் செல்லவதற்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களை தேர்ந்தெடுப்பதற்கு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்.

2024.06.06 - 2024.06.19 வரை மு.ப. 8.30 - பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் வார நாட்களில் மீள்ளிக்கப்படாத ரூ. 2500.00 தொகையை மற்றும் மீளளிக்கப்படும் ரூ. 20,000.00 தொகையை அம்பாறை பொது வைத்தியசாலையின் காசாளரிடம் கொடுப்பனவு செய்து சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரத்தின் பிரகாரம் கேள்வி ஆவணங்களை அம்பாறை பொது வைத்தியசாலையின் நிறுவனப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் அம்பாறை பொது வைத்தியசாலையின் உணவகத்திற்காக 2024 ஆண்டிற்காக உணவக சேவையை வழங்குதல் என்று குறிப்பிட்டு 2024.06.20 பி.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு பணிப்பாளர், பொது வைத்தியசாலை, அம்பாறை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அம்பாறை பொது வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
02. கடந்த கிட்டிய 10 வருடத்திற்குள் அரச, அரச சார்பு நிறுவனத்திற்கு அல்லது தனியார்துறை நிறுவனம் சார்பாக குறைந்தபட்சம் அன்றாடம் 500 நகர்களுக்கு மேற்பட்ட தரப்பினருடன் சம்பந்தப்படும் உயர் தரப்பிலான உணவக சேவையை குறைந்தபட்சம் தொடர்ந்து ஒரு வருடம் (01) சேவைக் காலத்துடன் இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
03. கேள்வி ஆவணங்களை இருப்பிரிவில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்று குறிப்பிட்டு வேறுவேறாக உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் தனி உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
04. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன், அவ்வேளையிலேயே கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன், பெறுகைதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதிக்கு அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.
05. கேள்வி ஆவணங்களை கொடுப்பனவுகள் இன்றி அம்பாறை பொது வைத்தியசாலையின் நிறுவனப் பிரிவில் பரீட்சிக்கலாம்.
06. அரச பெறுகை நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியலப்பட்டுள்ள நகர்களுக்கு கேள்விகள் விநியோகிக்கப்பட மாட்டாது அத்துடன் ஏதேனும் காரணத்தினால் கேள்விகளை சமர்ப்பித்த பின்னர் அதுபற்றி தெரியவரின் அக்கேள்விகள் நிராகரிக்கப்படும்.
07. குறித்த கேள்விகளை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளும் உரிமை பெறுகை குழுவிற்கு உரியது.
08. மேலதிக விபரங்களுக்கு அம்பாறை பொது வைத்தியசாலையின் வைத்தியசாலை செயலாளரை அழையுங்கள் (தொ.பே இல. 0632223317)

**பணிப்பாளர்,**
**பொது வைத்தியசாலை,**
**அம்பாறை**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Lake House Branch
Acc. No. 000000377

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## விவசாயத் திணைக்களம் - மேல் மாகாணம் (DOA – WP)

### ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள் (EOI) மேல் மாகாண கொழும்பு மாவட்ட ஹோமாகம விவசாய தொழில்நுட்பவியல் தோட்டத்தில் அதியுயர் தொழில்நுட்பவியல் பாதுகாப்பு மேற்கவிகை இல்லத்தில் (High Tech Poly Tunnel Facility) ஏற்றுமதி நோக்கமுள்ள பயிர்ச்செய்கை உற்பத்தி

**பின்புலம்:**

மேல் மாகாண விவசாயத் திணைக்களமானது மேல் மாகாணத்தின் விவசாயம், காணி, நீர்ப்பாசனம், கடற்றொழில், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரம் மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயலாற்றுகின்றதென்பதுடன் உணவுப் பாதுகாப்பு மற்றும் பயிர்ச்செய்கை உற்பத்தியில் மிக உன்னதமான நிலையையும் உறுதிப்படுத்துவதற்காக அதனது அதிமுக்கிய பங்களிப்பை வழங்குவதற்கான கடப்பாட்டையும் கொண்டுள்ளது.

மேல் மாகாண விவசாய திணைக்களத்தின் நோக்கத்தில் மேல் மாகாணத்தின் விவசாயி மற்றும் விவசாய ஆர்வமுள்ள மக்களுக்கு தொழில்நுட்ப சேவைகள், ஆற்றல் மற்றும் திறன்கள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் விவசாய உள்ளீடுகளின் சமனான விநியோகம், சாதகமான சிந்தனைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவு விவசாய தொழில்முயற்சியாண்மை அபிவிருத்திக்காக மையப்படுத்துகின்றது.

**நோக்கம்:**

மேல் மாகாண விவசாயத் திணைக்களத்துடன் தனியார் அரச பங்குடமை பயிர்ச்செய்கை உற்பத்தியின் ஏற்றுமதி நோக்கத்தை அபிவிருத்தி செய்வதற்காக 2024.02.21 ஆம் திகதியன்று திகதியிடப்பட்டதும் GOS/ADM/03/09/13/2024 என்ற இலக்கமுமுடைய மாகாண சபை அமைச்சர்களின் பத்திரத்தின் அடிப்படையில் இந்த ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோளானது அழைக்கப்படுகின்றது. மேலும், மேல் மாகாண விவசாயத் திணைக்களமானது உத்தேசிக்கப்பட்டுள்ள பயிர்ச்செய்கை உற்பத்திக்காக நிரப்பும் அமைப்பொன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த செயற்றிட்டத்திற்காக மேல் மாகாண விவசாயத் திணைக்களத்தினால் 10 ஏக்கர் காணியுடனான ஒரு நாற்றுப்பண்ணை இல்லம் அடங்கலாக 5 பாதுகாப்புடனான இல்லங்களும் (மொத்தம் 14500 ச.அடி) ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மேல் மாகாண விவசாயத் திணைக்கள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஏற்றுமதி நோக்கமுள்ள அதியுயர் தொழில்நுட்பவியல் பயிர்ச்செய்கைக்கான மாதிரியாக பாதுகாப்பு இல்லங்களாக பாவிப்பதனை இலக்காக கொண்டுள்ளது.

**விண்ணப்பிக்கும் முறைகள்:**

2024 ஜூன் 7 ஆம் திகதியிலிருந்து 2024 ஜூன் 27 ஆம் திகதியன்று வரையும் அலுவலக நேரங்களில் மேல் மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு 10,000 ரூபாவை வரவு வைக்கப்பட்டு மேல் மாகாண விவசாய திணைக்கள மாகாணப் பணிப்பாளரிடமிருந்து உரித்தான தகவலுடனான விபரமான விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ளலாம். அனைத்து ஆர்வ வெளிப்படுத்துகைகளும் (Original and a copy with a softcopy in PDF on a memory stick) 2024 ஜூன் 27 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் பதிவுத் தபாலில் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட தபாலுறையில் கீழே குறிப்பிட்டுள்ள முகவரியான மேல் மாகாண விவசாயத் திணைக்கள மாகாண விவசாயப் பணிப்பாளருக்கு அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **“EOI for Crop Production in Homagama Agro Technology Park”** என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். மாகாண விவசாயப் பணிப்பாளரின் அலுவலகத்தில் 2024 ஜூன் 20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்றிற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

**கவனத்திற் கொள்ளவும்:**

மேலேயுள்ள செயற்றிட்டத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள இலக்கு குழுவொன்றினால் அனைத்து

விண்ணப்பங்களும் திடநுட்பமாக ஆய்வு செய்யப்படும்.

மீளளிக்கப்படும் வைப்பாக 5000 ரூபாவை அல்லது நிகரான தொகை அடங்கலாக 10,000 ரூபாவை செயற்பாட்டு கட்டணமாக இந்த ஆர்வ வெளிப்படுத்தலின் கீழ் அடையாளம் காணப்பட்டவர்களிடமிருந்து மாத்திரம் வர்த்தகரீதியிலான முன்வைப்புக்கள் அழைக்கப்படும்.

தேவைப்படின், மேல் மாகாண விவசாயத் திணைக்கள பணிப்பாளரிடமிருந்து மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**மாகாண விவசாயப் பணிப்பாளர்,**
**விவசாயத் திணைக்களம் (மேல் மாகாணம்),**
**7 ஆம் மாடி, மாகாண புதிய கட்டிடம்,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**
**தொலைபேசி: +94 112092675. தொலைநகல்: +94 112 092666. மின்னஞ்சல்: pdagriwp@gmail.com**

## தேசிய கணக்காய்வு அலுவலகம்

### விலைமனுக்களுக்கான அழைத்தல் (IFB)

### தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு Heavy Duty அச்சடித்தல் இயந்திரமொன்றை (கறுப்பு மற்றும் வெள்ளை) வழங்கல், நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரித்தல்

1. கேள்விக் கோரல் ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு **Heavy Duty** அச்சடித்தல் இயந்திரமொன்றை (கறுப்பு மற்றும் வெள்ளை) வழங்கல், நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் சார்பில் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
   ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதலுக்கான காலம்: ஒப்பந்தத்தை கையொப்பமிடும் திகதியிலிருந்து 02 மாதங்களில்
2. கேள்விதாரர்கள் பின்வரும் தகைமை தகவுத்திறனை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   - கடந்த ஐந்து (5) வருடங்களில் வழங்குநரொருவராக செயற்பட்டு ஆகக் குறைந்தது 20 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியுள்ள ஆகக் குறைந்தது ஒரு (1) Heavy Duty அச்சடித்தல் இயந்திரமொன்றை வழங்குதலை பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த 3 வருடங்களில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொண்ட மொத்த சான்றழிக்கப்பட்ட பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த வருடாந்த நிதிப்புரள்வானது 60 மில்லியன் இலங்கைப் பணமாகவிருத்தல் வேண்டும்.
3. விலைமனுக்கோரலானது தேசிய பெறுகை வழிகாட்டிகளில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைகள் மூலமாக நடத்தப்படுவதுடன் வழிகாட்டிகளில் நிருணயிக்கப்பட்டுள்ளவாறு உரிமையுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் பங்குபற்றலாம்.
4. ஆர்வமும் உரிமையுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 2024 ஜூன் 6 ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்து வேலை நாட்களில் +94 11288703 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக, **wgnmenike64@gmail.com** என்ற மின்னஞ்சலூடாக மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பிரதி கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் ஆவணமானது **http://www.auditorgeneral.gov.lk** என்ற தேகஅ இணையதளத்திலும் பரீட்சித்தலுக்கு மாத்திரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
5. மீளளிக்கப்படாத கட்டணமாக 7000 இலங்கை ரூபாவை செலுத்திய பின்னர், வியாபார தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கிலத்திலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே அமைந்திருத்தல் வேண்டும்.
6. 2024 ஜூன் 28 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் பத்தரமுல்ல, பொல்தூவ வீதி, 306/72 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் 1 ஆம் மாடியின் 101ஆம் இலக்கத்திலுள்ள அறை முகவரிக்கு நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், 2024 ஜூன் 28 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் இலங்கை ரூபாவிற்கு (150,000 இ.ரூ.) குறையாத தொகையிலான விலைமனுப் பாதுகாப்பொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. 2024 ஜூன் 24 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு சமுகமளித்திருக்கும் சாத்தியமான விலைமனுதாரர்களுடன் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேசிய கணக்காய்வு அலுவலகம்,**
**இல.: 306/72, பொல்தூவ வீதி,**
**பத்தரமுல்ல.**

## ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

### விலைமனுக்கோரல்

### ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவமனை இருதய அறுவை சிகிச்சைக்கான அறுவை சிகிச்சை கருவிகளை வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்படுத்தல், பயிற்சி மற்றும் பராமரிப்பு

**Contract Identification No: UHKDU/PRO/MED/250/2023**

1. இரத்மலானை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவமனை அறுவை சிகிச்சைக்கான அறுவை சிகிச்சை கருவிகளை வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்படுத்தல், பயிற்சி மற்றும் பராமரிப்பதற்கு தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| a. | Pump major adult set | - | 03 Sets |
| b. | CABG Top and Bottom sets for chest | - | 03 Sets |
| c. | Conduit harvesting set | - | 04 Sets |
| d. | Valve instrument sets | - | 02 Sets |
| e. | Thorax sets | - | 01 Set |
| f. | Extra vascular clamp set | - | 01 Set |
| g. | Extra instrument set | - | 01 Set |
| h. | Emergency chest opening set for CICU | - | 02 Sets |
| i. | Intercostal tube insertion set | - | 05 Sets |
| j. | Rigid container system for packing & reprocessing | - | 01 Set |

2. மனுக்கோரலானது தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய **(NCB)** நடைபெறும்.
3. குறைந்தபட்சம் **05 வருட** அனுபவத்துடனான வியாபார பதிவினை கொண்டிருப்பதுடன் மற்றும் குறைந்த பட்சம் **05 வருட** மருத்துவமனை இருதய அறுவை சிகிச்சைக்கான அறுவை சிகிச்சை கருவிகளை வழங்கல் மற்றும் பராமரிப்பில் அனுபவம் கொண்ட வழங்குனர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றன. வெளிநாட்டு மனுதாரர்கள் முறையாக நியமிக்கப்பட்ட (அங்கீகரிக்கப்பட்ட) உள்ளூர் முகவர் மூலம் மனுக்கள் கோரல் வேண்டும். (இலங்கை)
   - மனுதாரர் குறைந்தபட்சம் ரூ.150 மில்லியன் அல்லது சராசரி ஆண்டு வருவாய்க்கு சமமான மதிப்பை, கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் கொண்டிருக்க வேண்டும் (கடந்த 3 ஆண்டுகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளை மனு ஆவணத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
   - மேற்கூறிய உள்ளூர் முகவர் குறைந்தபட்சம் **05 ஆண்டுகள்** வணிகப் பதிவு செய்திருக்க வேண்டும்.
   - உற்பத்தியாளர் / வழங்குனர் கடந்த 05 ஆண்டுகளில், குறைந்தது 03 ஒத்த ஒப்பந்தங்களை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும். இந்த 03 ஒப்பந்தங்களில் ஒவ்வொன்றும் மேற்கண்ட நோக்கத்துடன் இருக்க வேண்டும் மற்றும் அவற்றின் ஒப்பந்தத் தொகையானது ஒவ்வொரு விநியோகத்திற்கும் **LKR 37.5 மில்லியனுக்கும்** குறைவாகவோ அல்லது அதற்கு சமமான மதிப்பாகவோ இருத்தல் வேண்டும்.
   - மனுதாரர் உற்பத்தியாளரிடமிருந்து 02 வருட விரிவான உத்தரவாதத்தையும், 10 வருட அமைப்பு பராமரிப்பு உத்தரவாதத்தையும் மற்றும் உற்பத்தியாளரிடமிருந்து உதிரி பாகங்கள், நுகர்பொருட்கள், மென்பொருள் மற்றும் பாகங்கள் கிடைப்பதற்கு 10 வருட உத்தரவாதத்தையும் வழங்கியிருத்தல் வேண்டும்.
   - உத்தரவாதக் காலத்திற்குள் நிறுவப்பட்ட அமைப்பின் எந்தவொரு வினவலுக்கும் இலங்கையில் பிரதேச அலுவலகம் அல்லது உள்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட முகவராக இருத்தல் வேண்டும்.
   - பொருட்களை உற்பத்தி செய்யாத அல்லது மனு ஆவணத்தின் பிரிவு IV இல் உற்பத்தி மனு ஆவணப் படிவத்தைப் பயன்படுத்தி உற்பத்தியாளரின் அங்கீகாரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.
   - அனைத்து மனுதாரர்களும் இந்த மருத்துவ கருவிகளுக்கு செல்லுபடியாகும் (NMRA) சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.
4. 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் தெரிவு தேவைகளை கருத்தில்கொள்ளப்படுதல் வேண்டும். சட்டத்தில் இருந்து சில முக்கியமான பகுதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.
   (1) “எந்தவொரு மனுதாரர் சார்பாக முகவராகவோ அல்லது துணை முகவராகவோ, பிரதிநிதியாகவோ அல்லது பரிந்துரையாளராகவோ செயல்படும் எந்தவொரு நபரும், பிரிவு 10 இன் படி தன்னையும் அத்தகைய பொது ஒப்பந்தத்தையும் பதிவு செய்து, பிரிவு 6 இன் கீழ் வழங்க வேண்டிய விபரங்களை பதிவாளருக்கு வழங்க வேண்டும்.”
   (2) “மனுதாரர்தாரருக்காகவோ அல்லது அவர் சார்பாக முகவராகவோ அல்லது துணை முகவராகவோ, பிரதிநிதியாக-வோ அல்லது பரிந்துரையாளர் யாரேனும் தன்னையும் பொது ஒப்பந்தத்தை பதிவு செய்வதற்கு முன்னர், அவர் முகவர் துணை முகவராக, பிரதிநிதியாக அல்லது பரிந்துரையாளராக நியமிக்கப்பட்டதற்கான சான்றிதழை முதலில் பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்”.
   (3) “1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் படி, மனு ஆவணத்தை பெற்றுக்கொளவதற்கு முன்னர் பணம் செலுத்திய ரசீது அல்லது பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்”.
5. ஒப்பந்த காலம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாளிலிருந்து **60 காலண்டர் நாட்கள்** வரையாகும். (பயிற்சி மற்றும் பராமரிப்பு தவிர)
6. ஆர்வமுள்ள தகுதியுள்ள மனுதாரர்கள் **கொள்முதல் அதிகாரி, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனை, வெஹேரஹெர, பொரலஸ்கமுவ,** இலங்கை என்ற முகவரியில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். மின்னஞ்சல்: **procurement_uh@kdu.ac.lk**, மற்றும் ஒவ்வொரு வேலை நாட்களிலும் **0900 மணி முதல் 1500** மணி வரை மேலே உள்ள முகவரியில் மனு ஆவணங்களை இலவசமாக பரிசீலனை செய்ய முடியும்.
7. மனுதாரர் மற்றும் அவர்களின் உள்ளூர் முகவர் **கறைநிரைப்பட்டியில்** சேர்க்கப்பட்டிருத்தல் கூடாது
8. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அல்லது ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலையில் மீளச்செலுத்தப்படாத **ரூ.16,250/- (பதினாறு ஆயிரத்து இருநூற்றி ஐம்பது ரூபாய்)** கட்டணத்துடன சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

   **தவிசாளர்,**
   **திணைக்கள கொள்முதல் குழு,**
   **ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,**
   **கந்தவளை வீதி, இரத்மலானை.**

   மனு ஆவணங்கள் **2024.06.06** ஆம் திகதியிலிருந்து **2024.06.26** ஆம் திகதி வரை வழங்கப்படும்.
9. மனுக்கள் **தவிசாளர் - திணைக்கள கொள்முதல் குழு, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், கந்தவளை வீதி, இரத்மலானை மு.ப.1000 மணிக்கு 2024.06.27** திகதிக்கு முன்னதாக வழங்கப்பட வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கும் நேரத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவர்கள் பங்கேற்க முடியும்.
10. அனைத்து மனுக்களும் பொதியின் ஏல மதிப்பில் இலங்கை ரூபாய் 1% சதவீத மனுப் பாதுகாப்புடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மனுப் பாதுகாப்பானது இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியால் வழங்கப்பட வேண்டும். மனு **2024.10.04** ஆம் திகதி வரை செல்லுபடியாகும். மனுப் பிணையானது **2024.11.03** ஆம் திகதி வரை செல்லுபடியாகும். மேலும் இது மனு ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்பின் படி இருத்தல் வேண்டும்.
11. தொடர்பு விபரங்கள்:

    **கொள்முதல் அதிகாரி,**
    **ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனை,**
    **வெஹேரஹெர, பொரலஸ்கமுவ, இலங்கை**
    **தொலைபேசி: 0094-11-2044555**
    **தொலைநகல்: 0094-11-2044592**
    **மின்னஞ்சல்: procurement_uh@kdu.ac.lk**
12. முன்மனுக் கூட்டம் **2024.06.18** ஆம் திகதி **காலை 1000** மணிக்கு வெஹேரஹெரவில் உள்ள ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனையின் DMS கூட்டம் இடம்பெறும் மண்டபத்தில் நடைபெறும்.

**தவிசாளர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு,**
**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,**
**கந்தவல வீதி, இரத்மலான.**
**2024.06.06**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

## afc தங்கக் கடன் சேவை தங்க நகை ஏல விற்பனை

அலையன்ஸ் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் பின்வரும் கிளைகளில், அடமானம் வைக்கப்பட்டுள்ள 31.03.2024 அன்று முதிர்ச்சியடைந்த இதுவரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள், பின்வரும் திகதியில் காலை 09:30 முதல் கீழ்க்கண்ட இடங்களில் பொது ஏலம் மூலம் விற்கப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

| தேதி | கிளை | இடம் |
|---|---|---|
| 26-06-2024 | அக்குரஸ்ஸ, அளுத்கம, அம்பலாங்கொட, அம்பலாந்தோட்டை, அம்பாறை, அனுராதபுரம், அதுருகிரிய, அவிசாவளை, பதுளை, பலாங்கொடை, மட்டக்களப்பு, பொகவந்தலாவ, பொரளை சுப்பர், சங்கனை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், தம்புள்ளை, தெஹியத்தகண்டிய, தெனியாய, எம்பிலிபிட்டிய, கலேவெல, கல்கமுவ, காலி, கம்பஹா, கம்பளை, கணேமுல்ல, ஹட்டன், ஹிங்குராக்கொட, ஹோமாகம, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், யாழ்ப்பாண நகரக் கிளை, கடவத்தை, கதுருவெல, கடுவெல, கல்பிட்டிய, களுத்துறை, களுவாஞ்சிகுடி, கேகாலை, களனி, கிளிநொச்சி, கிரிபத்கொட, கிரிந்திவெல, கொஹுவல, குளியாப்பிட்டிய, குருமன்காடு, குருநாகல், மஹரகம, மஹியங்கனை, மாலபே, மன்னார், மாத்தளை, மாத்தறை, மதவாச்சி, மொனராகலை, முழங்காவில், நாவலப்பிட்டி, நீர்கொழும்பு, நிக்கவெரட்டிய, நிட்டம்புவ, நுவரெலியா, பாணந்துறை, பராக்கிரமபுர, பசறை, பிலியந்தலை, பருத்தித்துறை, பூகொடை, புதுக்குடியிருப்பு, புத்தளம், புத்தளம் 2, ராகலை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, தலவாக்கலே, திருநெல்வேலி, திருகோணமலை, திருகோணமலை-2, உடப்புவ, வவுனியா, வார்ட் பிளேஸ், வெலிமடை, வெல்லவாய, வென்னப்புவ. | 722, கோட்டே வீதி, ராஜகிரிய. |

ஏலத்தில் பங்கேற்கும் அனைவரும் தங்களின் தேசிய அடையாள அட்டையை கொண்டுவர வேண்டும் மற்றும் நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் எலாயன்ஸ் ஃபினான்ஸ் கோபி.எல்.சி க்கு எந்தவித அறிவிப்பும் இல்லாமல் ஏலங்களை ரத்து செய்ய, ஒத்திவைக்க அல்லது ஒன்றினைக்க உரிமை உள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
செயைாக்கியுத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600


## கேள்வி அழைப்பு

வடமத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் "பெந்திவெவ ஹெலரஸபியச" (உள்ளூர் உணவகம்) வாடகைக்கு வழங்குவதற்காக மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவர்/ மாகாண ஆயுர்வேத ஆணையாளரான என்னால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. வாடகைக்கு வழங்கும் காலம் ஒரு வருடமாகும்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர்களுக்கு வடமத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் நிதி உதவியாளருக்கு ரூ. 500.00 தொகையைச் செலுத்தி கேள்வி ஆவணத் தொகுதியை 2024.06.05 முதல் 2024.06.24 பிற்பகல் 3.00 வரை கொள்வனவு செய்யலாம்.

04. இவ் உள்ளூர் உணவகத்துடன் பொருந்தும் ரூ.4 5,000.00 குறைந்தபட்ச மாதாந்த வாடகை தவணை தீர்மானிக்கப்படுவதுடன், அவ் விலையை விட குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

இது பற்றிய மேலதிக விபரங்களை 025 - 2054053 தொ.பே. இலக்கத்தின் மூலம் நிதி உதவியாளரை அழைத்து அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

06. தமது கேள்வியுடன் மாகாண ஆயுர்வேத ஆணையாளரின் பெயரில் பெற்றுக் கொண்ட 91 நாட்கள் (2024.09.23) வரை செல்லுபடியாகும் ரூ. 50,000.00 பெறுமதியான கேள்விப் பிணையொன்றை கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரியுடன் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டு சமர்ப்பித்தல் அல்லது காசாக மாகாண ஆயுர்வேத ஆணையாளருக்கு செலுத்துதல் வேண்டும்.

07. 2024.06.25 பி.ப. 3.00 இற்கு கேள்வி கோரப்பட்டு முடிவுறுத்தப்படுவதுடன், கேள்விதாரர்களால் தமது கேள்விகளை 2024.06.25 பி.ப. 3.00 இற்கு முன்பு மாகாண ஆயுர்வேத ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடுவதன் மூலம் அல்லது பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டியதுடன் 2024.06.25 பி.ப. 3.00 இற்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் குறித்த கேள்விகள் திறக்கப்படும். இதற்காக கேள்விதாரருக்கு அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்கு அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

08. இப் பெறுகை பற்றிய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர் / மாகாண ஆயுர்வேத ஆணையாளர்,**
**பெறுகைச் சபை,**
**மாகாண ஆயுர்வேத திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம்,**
**தர்மபால மாவத்த,**
**அநுராதபுரம்.**
**2024.06.05**

## பாதுகாப்பு அமைச்சு

## தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் கீழே குறிப்பிட்டுள்ள பதவிக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**(1) பணிப்பாளர் பதவி (நிருவாகம்) - (ஏச்எம் 1-3)**
**(ஒரு பதவி வெற்றிடம்)**

**தகைமைகள் :**

**வெளிவாரி :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து முகாமைத்துவம், வர்த்தக நிருவாகம், பொது நிருவாகம், மனித வளங்கள் முகாமைத்துவம் அல்லது உரித்தான துறையில் பெற்ற பட்டதாரிப் பட்டம்/ விஞ்ஞானமாணி விஷேட பட்டம்.

அத்துடன்

முகாமைத்துவம், வர்த்தக நிருவாகம், பொது நிருவாகம், மனித வளங்கள் முகாமைத்துவம் அல்லது உரித்தான துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்ற பட்டப்பின் தகைமைப் பட்டமொன்று (முதுமாணி)

அத்துடன்

கூட்டுத்தாபனம், நியதிச் சட்டசபை/ நிறுவனமொன்றில் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் 'முகாமைத்துவ மட்டத்தில்' ஆகக் குறைந்தது 15 வருட அனுபவம்.

**பொதுவான நிபந்தனைகள் :**

சம்பள அளவு : ஏச்எம் 1-3 (86,865-15x2,270-120,915 ரூபா)
சம்பள படிமுறை : 86,865 ரூபா
வயதெல்லை : 35 வயதிற்கு குறையாமலும் 55 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**அனுகூலங்கள் :**

- வாழ்க்கைச் செலவுப் படி
- ஊசேநி இற்கு 12% அத்துடன் ஊநநி இற்கு 3% பங்களிப்பிற்குஉரித்து.
- பாவிக்கப்படாத மருத்துவ விடுமுறையின் மீள்பணமாக்கல் மற்றும் வருடாந்த மிகையூதியம் மாதாந்த செயற்பாட்டு ஊக்குவிப்பு மற்றும் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதாவது படிகள்.
- தொலைபேசி படி, மருத்துவ மற்றும் ஆயுட்கால காப்புறுதி. அரசாங்க நிலையியல் நடைமுறைகளுக்கமைவாக தெரிவு செய்யப்பட்ட அபேட்சகரானவர் போக்குவரத்து வசதிகளுக்கான உரித்துக்களை கொண்டிருப்பார்.

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் பொருத்தமான நிறுவன தலைவர்களூடாகவே அனுப்பப்படல் வேண்டும். சுயதரவு அடங்கலான உரித்தான சான்றிதழ்களின் பிரதிகள் அடங்கலான விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 2024 ஜூன் 27 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியை வந்தடைதல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை தயவு செய்து குறிப்பிடவும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**99/1, ஜாவத்த வீதி,**
**கொழும்பு-5.**


Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams


## இலங்கை தரநிருணய கட்டளைகளின் வரைவு நிறுவனம்

(தொழில்நுட்பவியல் அமைச்சின் கீழானது)

## 2024/25 ஆம் ஆண்டுகளுக்காக பஸ் ஒன்றை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி ஆவணங்களை அழைத்தல்

**2024/2025 ஆம் ஆண்டுகளுக்காக ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளை இலங்கை தரநிருணய கட்டளைகளின் வரைவு நிறுவனத்திற்கு மாதாந்த அடிப்படையில் வழங்குவதற்காக கேள்வி கோரல்கள் அழைக்கப்படுகின்றன.**

பயணவழி : கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து மருதானையூடாக இலங்கை தரநிருணய கட்டளைகளின் வரைவு நிறுவனத்திற்கு காலையிலும், மாலையில் அதே பயண வழியூடாக திரும்பிச் செல்லல்.

ஆசனங்களின் எண்ணிக்கை : ஆகக்குறைந்தது 40 பயணிகளுக்கானது

2024.06.07 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,500 இ.ரூபா + SSCL & VAT 18% (ரொக்கப் பணத்தில் மாத்திரம்) ஆகியவற்றைச் செலுத்திய பின்னர், கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்தை, விக்டோரியா பிளேஸ், 17 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவன நிருவாகப் பிரிவிலிருந்து கேள்விகோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2024.06.14 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு
**இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனம்,**
இல.: 17, விக்டோரியா பிளேஸ்,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு-08.

தொலைபேசி: 0112 671567 - நீடிப்பு - 212

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

**நலன்புரி நன்மைகள் சபை**

### சமூக பாதுகாப்புத் திட்டம் பொருட்களுக்கான பெறுகை

**தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் (NCB)**

**பெறுகையின் தலைப்பு : மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் நலன்புரி நன்மைகள் சபையின் அஸ்வெஸும அலகிற்கு கணனிகள் மற்றும் அச்சுப்பொறிகளுக்கான பெறுகை**

**கடன் இல. : 7363-LK**

**பெறுகை நிறுவனத்தின் பெயர் : நலன்புரி நன்மைகள் சபையின் சமூகப் பாதுகாப்புத் திட்டம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

**செயற்றிட்டத்தின் பெயர் : சமூகப் பாதுகாப்புத் திட்டம் (SSP)**

**செயற்றிட்ட அடையாளம் : P178973**

**விலைக்கோரல் இல. : LK-WBB-410357-G0-RFB**

மேற்கூறிய பெறுகை தொடர்பாக 2024 மே 16ஆம் திகதிய தினகரன், தினமின, டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் சம்பந்தமாக ஆர்வமுள்ள தரப்பினருக்கு நாம் அறிவிப்பதாவது, அசல் அறிவித்தலின் பிரகாரம், விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2024 ஜூன் மாதம் 06ஆம் திகதி பி.ப. 3.00 மணியாகும்.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாளை 2024 ஜூன் மாதம் 14ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை நீடிப்பதற்கு செயற்றிட்டப் பெறுகைக் குழு தீர்மானித்துள்ளது.

ஆர்வமுள்ள மற்றும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை 2024 ஏப்ரல் 17ஆம் திகதிய தினகரன், தினமின, டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திலிருந்து அல்லது 0773914120 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் பெறுகை நிபுணரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். மேலும் விலைமனுதாரர்கள் 2024 ஜூன் 14ஆம் திகதி வரையான அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை உள்ளூர் நேரம்) கொழும்பு 07, இல. 191, தர்மபால மாவத்தை, ஜே.ஆர். ஜயவர்தன நிலையம், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**தலைவர்,**
**சமூகப் பாதுகாப்புத் திட்டம்,**
**ஜே.ஆர். ஜயவர்தன நிலையம்,**
**இல. 191, தர்மபால மாவத்தை,**
**கொழும்பு 07,**
**இலங்கை.**

## விலைமனு அறிவித்தலுக்கான திருத்தம்

**விலைமனுக்களுக்கான அழைத்தல் (IFB)**

### உள்ளூராட்சித் திணைக்களம், ஊவா மாகாணம்
### உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம்

2024 மே 17 ஆம் திகதியன்று டெயிலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட மேலேயுள்ள செயற்றிட்டம் தொடர்பான விளம்பரமான "விலைமனுக்களுக்கான அழைத்தல்", என்பது பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| குறிப்பீடு | வழங்கப்பட்ட ஆவணத்தின் உள்ளடக்கம் | திருத்தம் |
|---|---|---|
| சொரந்தொட்ட பிரதேச சபையில் பலநோக்கு கட்டிடத்தின் நிர்மாணம் (1 ஆம் படிமுறை மற்றும் 2 ஆம் படிமுறை) – LDSP/UP/BD/SOPS/W/2024/2 | 2024.06.07 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். | விலைமனுக்கள் 2024.06.07 ஆம் திகதியன்று திறக்கப்பட மாட்டாது. விலைமனுக்கள் 2024.06.18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு திறக்கப்படும். |
| | சொரந்தொட்ட பிரதேச சபையில் பலநோக்கு கட்டிடத்தின் நிர்மாணம் (1 ஆம் படிமுறை மற்றும் 2 ஆம் படிமுறை) – LDSP/UP/BD/SOPS/W/2024/2<br><br>மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு - 33.49 மில்லியன் இலங்கை ரூபா. விலைமனுப் பிணையானது பின்வருமாறு அமைந்திருத்தல் வேண்டும்.<br>-335,000 ரூபா தொகைக்காகவிருத்தல்<br>-2024.11.01 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் | சொரந்தொட்ட பிரதேச சபையில் பலநோக்கு கட்டிடத்தின் நிர்மாணம் (1 ஆம் படிமுறை மற்றும் 2 ஆம் படிமுறை) **– LDSP/UP/BD/SOPS/W/2024/2**<br><br>மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு- 41.96 மில்லியன் இலங்கை ரூபா. விலைமனுப்பிணையானது பின்வருமாறு அமைந்திருத்தல் வேண்டும்.<br>- 420,000 ரூபா தொகைக்காகவிருத்தல்<br>- 2024.11.01 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் |

ஏனைய அனைத்து தகவல்களிலும் எவ்வித மாற்றமுமில்லை.

**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர்,**
**உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம்,**
**செயற்றிட்ட அமுலாக்கல் அலகு,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**ஊவா மாகாணம்.**
**055 2222407/0552222363**
**05.06.2024.**


To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz it's what you want Auto Focus



Sunday Observer
adz it's what you want




- Auto Focus



- Vehicle Rent / Wanted

Sunday Observer adz Magazine
Issued with
Sunday Observer



- Photo Classifieds

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!

Hot Line - 011 2 429 369/ 011 2 429 368
E-mail - adzsuo@gmail.com

www.adz.lk it's what you want

# 2024/2025 ஆம் ஆண்டுகளுக்காக சேவை வழங்குநர்களை பதிவு செய்தல்

தேசிய சேமிப்பு வங்கியின் சார்பாக வெளியேற்றங்கள் அடங்கலாக, பேராணைகள், ஏலவிற்பனைகள், அழைப்பாணைகளை ஒப்படைத்தல், ஆதனங்களை தேடுதல், சொத்தாண்மையை சரிபார்த்தல் மற்றும் தவறிழைத்தவர்களின் இருப்பிடங்களை கண்டறிதல் ஆகியவற்றிற்காக சேவை வழங்குநர்களாக பதிவு செய்ய ஆர்வமும் அனுபவமுமுள்ள தனிநபர்கள்/ நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**கட்டளை விதிகள்:**

1. புகழ்வாய்ந்த நிதியிடல் நிறுவனங்களின் சார்பாக நிகரான விடயங்களை கையாளுவதில் விண்ணப்பதாரியானவர் ஆகக் குறைந்தது 15 வருட காட்சிப்படுத்தக்கூடிய அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. தேவைான ஆவணங்கள், வெளியீடுகளை கையாளுதல் நீதிமன்ற பணியாளர்களுடனான ஒருங்கிணைப்பு இன்னும் பலவும் அடங்கலாக நேர்மையாகவும் ஆகக் குறைந்தளவு கண்காணித்தல் ஆகியவற்றுடன் முழுமையான செயற்பாட்டை சுதந்திரமாக கையாளுவதில் சான்றுபகரக்கூடிய நிபுணத்துவம் மற்றும் அனுபவம் ஆகியவற்றை கொண்டுள்ளாரோ தேசிய சேமிப்பு வங்கியின் திருப்திகரமான பார்வைக்கு விண்ணப்பதாரியானவர் காட்சிப்படுத்துதல் வேண்டும்.
3. புகழ்வாய்ந்த நிதியிடல் நிறுவனங்களிலிருந்து ஆகக் குறைந்தது இரு பரிந்துரைகளை விண்ணப்பத்துடன் வழங்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.

கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு இந்த விளம்பரத்தின் 14 நாட்களுள் விண்ணப்பங்கள் ஒப்படைக்கப்படலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம்.

**தேசிய சேமிப்பு வங்கி**
**இல.: 255, காலி வீதி,**
**கொழும்பு-03.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

பின்வரும் பெறுகைக்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் பிரகாரம் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் சிறியளவிலான திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (இல. ரூபா) | ஆவணக் கட்டணம் VAT உள்ளடக் கப்பட்டுள்ளது (இல. ரூபா) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| EW/04/ PT/2024 /MA/ SPW/02 | இலங்கை துறைமுகம், கார்கோ கிராப்ட் பிரிவின் பணியாளர் இளைப்பாறும் அறைக்கு புதிய காற்றோட்ட முறைமையொன்றை வடிவமைத்தல், கட்டமைத்தல், வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் | 40,000.00 | 3,500.00 | 2024-06-27ஆம் திகதி பி.ப. 2.00 மணி |

1. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும்.
2. விலைமனுதாரர்கள் முறைமையின் வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கான இயைபுடைய தொழிற்றுறையில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு 01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் கடல்சார் பொறியியல் பிரிவின் பிரதான பொறியியலாளர் (கடல்சார்) அவர்களிடமிருந்து மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: **0094 11 2482330/** தொலைநகல்: **0094 11 2342537** / மின்னஞ்சல்: **jagath_kumara@slpa.lk** மற்றும் 2024-06-07ஆம் திகதி முதல் 2024-06-25ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் இதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. மேற்கூறிய மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர், 2024-06-07ஆம் திகதி முதல் 2024-06-26ஆம் திகதி வரை மு.ப. 10.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரை பிரதான பொறியியலாளர் (கடல்சார்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களில் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். ஆவணக் கட்டணத்திற்கான கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
5. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறிகளுடனான விலைமனுக்களை விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்படும் திகதியான 2024-06-27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குப் பிந்தாமல் தலைவர், சிறியளவிலான திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு - 01 எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும் அல்லது இலங்கை, கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கை துறைமுக அதிகார சபை, கொழும்பு துறைமுக ஆணைக்குழு கட்டிடம், தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டவுடனேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகளின் சமுகத்தில் திறக்கப்படும். அவர் பின்வரும் முகவரியில் உள்ள மாநாட்டு அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் நேரடியாகக் கலந்துகொள்ளலாம்.
6. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-06-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு 01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் பிரதான பொறியியலாளர் (கடல்சார்) அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்திற்கு பின் தள விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**பிரதான பொறியியலாளர் (கடல்சார்),**
**கடல்சார் பொறியியல் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு 01**

# பெறுகை அறிவித்தல்

## போக்குவரத்து சேவைகள் அதிகார சபை - மத்திய மாகாணம்

மத்திய மாகாண போக்குவரத்து சேவைகள் அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் தெரிவு செய்யப்பட்ட வேலைகளுக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | ஒப்பந்த இலக்கம் | விடயம் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | CPC/TA/P/2024/13 | 40 பயணிகள் நிழலிடங்களை நிர்மாணித்தல் | 5000.00 | 120,000.00 |
| 02 | CPC/TA/P/2024/28 | 40 எண்ணிக்கையான பணம் எண்ணும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் | 2000.00 | 4000.00 |
| 03 | CPC/TA/P/2024/26 | போக்குவரத்து சேவைகள் அதிகார சபையின் கண்டி மாவட்ட அலுவலகத்திற்கு கூட்ட மண்டபமொன்றை நிர்மாணித்தல் | 5000.00 | 44,000.00 |
| 04 | CPC/TA/P/2024/18 | பயணிகள் பயணச்சீட்டு புத்தகங்களை அச்சிடுதல் | 5000.00 | 185,000.00 |
| 05 | CPC/TA/P/2024/19 | பயணிகள் பயற்சீட்டு சுருள்களை அச்சிடுதல் | 5000.00 | 145,000.00 |

2024-06-06ஆம் திகதி முதல் 2024-06-26ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் ந.ப. 12.00 மணி வரையில் இல. 595, திகன வீதி, பல்லேகலை, குண்டசாலையில் அமைந்துள்ள போக்குவரத்து சேவைகள் அதிகார சபையின் பிரதான அலுவலக சிறாப்பர் பிரிவிற்கு விண்ணப்பப் படிவக் கட்டணத்தைச் செலுத்தி கணக்கிடல் பிரிவிற்கு குறித்த பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து விலைக்கோரல் மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு ஒப்பந்தத்தின் பொருட்டும் வெவ்வேறான விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட பிரதி விலைமனுவை உறையொன்றினுள் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் 2024 - இயைபுடைய ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2024-06-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, போக்குவரத்து சேவைகள் அதிகார சபை, இல. 595, திகன வீதி, குண்டசாலை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம்.

2024-06-26ஆம் திகதி பி.ப. 4.30 மணிக்கு இல. 595, திகன வீதி, குண்டசாலையில் அமைந்துள்ள மத்திய மாகாண போக்குவரத்து அதிகார சபையில் விலைமனுக்கள் திறக்கப்படவுள்ளது என்பதுடன் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

தேவையான ஏனைய விபரங்களை பொதுவான வேலை நேரங்களில் குண்டசாலை, இல. 595, திகன வீதி, போக்குவரத்து சேவைகள் அதிகார சபையின் பொது முகாமையாளரிடமிருந்து அல்லது 081-2424372 கணக்கிடல் பிரிவைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**போக்குவரத்து சேவைகள் அதிகார சபை,**
**இல. 595, திகன வீதி, குண்டசாலை.**

# பல்லேபொல பிரதேச சபை பல்லேபொல

## கேள்விக்கான அழைப்பு

### பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்கள் மற்றும் கொங்கிறீட் கலவை இயந்திரங்களை விற்பனை செய்தல்

பல்லேபொல பிரதேச சபையில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கீழே விபரிக்கப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் கொங்கிறீட் கலவை இயந்திரங்களை விற்பனை செய்வதற்கு பல்லேபொல பிரதேச சபையின் பெறுகைக் குழுவினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | வாகன/ இயந்திரங்களின் இலக்கம் | வாகன/ இயந்திர வகை | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரு) (கேள்விப் பிணைமுறி) |
|---|---|---|---|
| 01 | 53 - 4729 | ட 200 மிட்சுபிஷி கெப் | 10000.00 |
| 02 | CPHL 2044 | ஸ்வேன் கைடிரக்டர் | 3000.00 |
| 03 | JZC 350 | கொங்கிறீட் கலவை இயந்திரம் I பெரியது | 2000.00 |
| 04 | CHANGFA R175BN | கொங்கிறீட் கலவை இயந்திரம் II சிறியது | 2000.00 |

1. மேற்படி வாகனங்கனை பரீட்சிப்பதற்காக 2024.06.10 முதல் 2024.06.24 வரை வாரத்தின் வேலை நாட்களில் முற்பகல் 9.00 முதல் பிற்பகல் 3.00 வரை வசதிகள் செய்யப்பட்டுள்ளது. அதற்காக வாகனத்தை பரீட்சித்துப் பார்க்கும் வாய்ப்பு பல்லேபொல பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
2. கேள்விப் பத்திரங்களை பல்லேபொல பிரதேச சபையின் செயலாளரிடம் மேற்படி நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். மீளளிக்கப்படாத படிவக் கட்டணமாக ரூ. 2000.00 தொகையை பல்லேபொல பிரதேச சபை தலைமையகத்திற்குச் செலுத்தி கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
3. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வாகனத்துடன் சம்பந்தப்பட்ட மீளளிக்கப்படும் வைப்புத் தொகை நாட்டில் அமைந்துள்ள ஏதாவது மக்கள் வங்கிக் கிளைக்கு பல்லேபொல மக்கள் வங்கிக் கிளையின் பல்லேபொல பிரதேச சபை கணக்கு இல.241100150000086 ஐச் செலுத்தி பற்றுச்சீட்டு அல்லது பல்லேபொல பிரதேச சபை தலைமையகத்திற்கு காசு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை கேள்விப் பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும்.
4. பொறியிடப்பட்ட கேள்விகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறு வேறு உறைகளில் இட்டு (நகல்பிரதி உள்ளிடும் உறையில் நகல்பிரதியெனக் குறிப்பிடுதல் வேண்டும்) இரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு சீல் இட்டு “செயலாளர், பிரதேச சபை, பல்லேபொல” என்ற முகவரிக்கு 2024.06.10 முதல் 2024.06.25 மு.ப. 10.00 இற்கு முன்பு பதிவுத் தபாலில் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடலாம்.
5. கேள்விப் பத்திரம் உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களுக்கான விலைமனுக்கள் (வாகன இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்) என்று குறிப்பிடுதல் வேண்டும்.
6. ஒவ்வொரு வாகனம் அல்லது கொங்கிறீட் கலவை இயந்திரத்திற்கும் வேறுவேறாக கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன், கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2024.06.25 மு.ப. 10.00 இற்கு முடிவடைவதுடன் 2024.06.25ம் திகதி கேள்விப் பத்திரங்கள் திறத்தல், மு.ப. 10.30 இற்கு இடம்பெறும். அவ்வேளையில் கேள்விதாரர் சமுகமளிக்க முடிவதுடன் கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் சபைக்குறியது. மேலதிக விபரங்களுக்கு 066 - 2247208 செயலாளரை அழையுங்கள். (கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இடம்பெறும்)

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**பல்லேபொல**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கணனிகள் மற்றும் கணனி துணைப்பாகங்களின் பெறுகை

#### தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல்

1. பின்வரும் வழங்கல்களுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

**அட்டவணை இல. 01**

| விலைக் கோரல் இல. | லொட் இல. | பெறுகை விபரம் | அளவு (எண்ணிக்கை) | விலைமனு செல்லுபடிக் காலம் | விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| IFB/ID/GOSL/ NCB/2024/008 | 01 | Procurement of i5 Desktop Computers | 70 | 25/09/2024 வரை | 400,000.00 | 23/10/2024 வரை |
| | 02 | Procurement of i7 Desktop Computers | 07 | | 50,000.00 | |
| | 03 | Procurement of i5 Notebook Computers | 07 | | 40,000.00 | |
| | 04 | Procurement of i7 Notebook Computers (16 GB RAM) | 11 | | 60,000.00 | |
| | 05 | Procurement of A4 Laser Jet Printers (Black) | 15 | | 40,000.00 | |
| | 06 | Procurement of A3 Printers (Colour) | 3 | | 18,000.00 | |
| | 07 | Procurement of UPS | 69 | | 15,000.00 | |

2. மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000.00 ரூபாவை செலுத்தியதன் பின் நிறுவனக் கடிதத் தலைப்பில் (மூலப்பிரதி) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்து கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களம், 2ஆம் மாடி, 214ஆம் இலக்க அறை, நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) 2024-06-05ஆம் திகதி முதல் 2024-06-26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
3. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் விலைக்கோரல் ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை நீர்ப்பாசனப் பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2582897 / 011-2582677
4. பின்வரும் வகையில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
   **திகதி :** **2024-06-12ஆம் திகதி**
   **நேரம்:** **மு.ப. 10.00 மணிக்கு**
   **இடம் :** **குழு அறை, 04ஆம் தளம், நீர்ப்பாசனத் திணைக்களம்,**
5. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2024-09-25ஆம் திகதி வரை (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்கள் வரை) செல்லுபடியாதல் வேண்டும். மேலும் அத்துடன் 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு 2024-10-23ஆம் திகதி வரை (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 119 நாட்கள் வரை) செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறல்லாத விலைமனுக்கள் பதிலளிக்காதவை எனக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணையுமின்றி நிராகரிக்கப்படும்.
6. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களிலும் விலைமனுதாரர் கையொப்பமிட்டு அவரது முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை 2024-06-27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னராகக் கிடைக்கும் வகையில், ஒன்றில் கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை 230ஆம் இலக்க நீர்ப்பாசனத் திணைக்களம், 3ஆம் தளத்திலுள்ள (பிரதான நிதியிடல் அலுவலரின்) 311ஆம் இலக்க அறையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில், தலைவர், திணைக்கள பெறுகைக்குழு என முகவரியிட்டு மேற்கூறப்பட்ட முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024-06-27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கல் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கத்தைத் தயவுசெய்து எழுதவும்.
9. சுய விருப்பத்தின் பேரில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**பொறி. அஜித் குணசேக்கர,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07**

**2024-06-05ஆம் திகதி.**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

### பணிமனை, திருகோணமலை

1. கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தரத்திற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பதிவைக் கொண்டுள்ள தகுதியுள்ள கேள்விதாரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வேலைக்காக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்வி மனுக்களை அழைக்கின்றார்.
2. கேள்விக் கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்விக்கோரல் மூலம் தனிக்கட்ட தனியுறை முறை மூலம் நடத்தப்படும். இந்த பெறுகையின் மொத்த ஆகுசெலவு மதிப்பீடானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமையானது 2023.02.09 ஆம் திகதியிடப்பட்ட 04/2016 என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு தேவைப்படுத்தப்படும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள CIDA பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைக்காக தேவைப்பாடுகள் கேள்வி ஆவணங்களின் 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவலை, திருகோணமலை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 026-2220103. தொலைநகல் இல.: 026-2220854. மின்னஞ்சல்: tc.rdhs.ac@gmail.com ) அலுவலக நேரங்களில் மேலேயுள்ள அலுவலகத்தில் கையேற்பதற்கு முன்னராக இலவசமாக பரீட்சிக்கலாம்.
6. 2024.06.06 ஆம் திகதியிலிருந்து 2024.06.19 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் திருகோணமலை, நீதிமன்ற வீதி, 120 ஆம் இலக்கத்திலுள்ள பிசுசேபப இன் கணக்கிடல் கிளையின் கணக்காளரின் அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தியமைக்கான நிரூபணமான பணப்பற்றுச்சீட்டுக்களை எழுத்து மூலமான விண்ணப்பமொன்றுடன் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள கேள்வி ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் இரு பிரதிகளில் கொள்வனவு செய்யப்படலாம்.
7. சமுகமளிப்பதற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்/கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் பின்வருவனவற்றை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
   - திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்று.
   - திருகோணமலை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் திருகோணமலை, நகரக் கிளை, மக்கள் வங்கியின் 255-100120000-490 என்ற கணக்கிலக்கத்திற்கு ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துதல்.
8. 2024.06.20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிசுசேபப இன் அலுவலகம், இல. 120 நீதிமன்ற வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு கீழே குறிப்பிட்டுள்ள தொகைக்கான விலைமனு பாதுகாப்புடன் இணைக்கப்பட்ட கேள்வி மனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
9. ஒப்பந்தத்தை வழங்குவதில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
10. 026-2220103 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின் அவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

**அட்டவணை:**

| தொ. இல. | வேலையின் பெயர் | CIDA தரம் | நிர்மாண ஆகுசெலவு | ஒப்பந்தக் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் | கேள்வி ஆதனத்தின் செல்லு படியாகும் காலம் | விலைமனு பாதுகாப்பு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | தொகை | செல்லு படியாகும் காலம் |
| 01. | மூதூர் தள வைத்தியசாலையின் தாதி அலுவலர்களின் விடுதிகள் மற்றும் MO விடுதியின் பழுதுபார்த்தல் வேலை | சி-9 மற்றும் சி-8 | 1,226,831.00 | 20 நாட்கள் | 3,500.00 | 49 நாட்கள் | 12,500.00 | 77 நாட்கள் |
| 02. | கிண்ணியா தள வைத்தியசாலையின் மகப்பிரசவ வாட்டின் கூரையின் பழுதுபார்த்தல். | சி-9 மற்றும் சி-8 | 821,628.20 | 20 நாட்கள் | 3,500.00 | 49 நாட்கள் | 8,500.00 | 77 நாட்கள் |
| 03. | புல்மோட்டை தள வைத்தியசாலையின் தாதி அலுவலர்களின் விடுதிகள் மற்றும் MO விடுதியின் பழுதுபார்த்தல் வேலை | சி-9 மற்றும் சி-8 | 1,222,174.60 | 20 நாட்கள் | 3,500.00 | 49 நாட்கள் | 12,500.00 | 77 நாட்கள் |
| 04. | தோப்பூர் மாவட்ட வைத்தியசாலையில் (வெளி நோயாளர் பகுதியில் ஆண்களுக்கான வாட்டின் கூரை பழுதுபார்த்தல் மற்றும் கழிவறை மற்றும் பற்சிகிச்சை அலகு) | சி-9 மற்றும் சி-8 | 1,478,256.40 | 20 நாட்கள் | 3,500.00 | 49 நாட்கள் | 15,000.00 | 77 நாட்கள் |
| 05. | மூதூர் தள வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ வாட் ஆகியவற்றின் மேம்படுத்தல் மற்றும் ஆண்களுக்கான மருத்துவ வாட் கழிவறை அறையின் பழுதுபார்த்தல்கள் | சி-9 மற்றும் சி-8 | 1,803,212.20 | 20 நாட்கள் | 3,500.00 | 49 நாட்கள் | 18,500.00 | 77 நாட்கள் |
| 06. | கந்தளாய் MOH இன் ரஜ-எல GHC இல் வேலி மற்றும் கேட் ஆகியவற்றை அமைத்தல் | சி-9 மற்றும் சி-8 | 822,455.00 | 20 நாட்கள் | 3,500.00 | 49 நாட்கள் | 8,500.00 | 77 நாட்கள் |
| 07 | கிண்ணியா பைசால் நகர் GHC இன் மேம்படுத்தல் | சி-9 மற்றும் சி-8 | 815,292.50 | 20 நாட்கள் | 3,500.00 | 49 நாட்கள் | 8,500.00 | 77 நாட்கள் |
| 08. | குறிஞ்சாகேணி MOH இல் (புதிய கட்டிடம்) வேலியமைத்தல் மற்றும் மண் நிரப்பல் | சி-9 மற்றும் சி-8 | 826,400.00 | 20 நாட்கள் | 3,500.00 | 49 நாட்கள் | 8,500.00 | 77 நாட்கள் |
| 09 | மூதூர் MOH இல் சம்பூர் GHC இல் பழுதுபார்த்தல் வேலை | சி-9 மற்றும் சி-8 | 409,736.75 | 20 நாட்கள் | 3,500.00 | 49 நாட்கள் | 4,500.00 | 77 நாட்கள் |
| 10. | மூதூர் MOH இல் பள்ளிகுடியிருப்பு GHC இன் பழுதுபார்த்தல் வேலை | சி-9 மற்றும் சி-8 | 331,148.00 | 20 நாட்கள் | 3,500.00 | 49 நாட்கள் | 3,500.00 | 77 நாட்கள் |
| 11. | அன்புவழிபுரம் GHC நீர்தாங்கி, குழாய் வேலை, வேலியமைத்தல் மற்றும் நோயாளர் காத்திருக்கும் இடப்பரப்பின் நீடித்தல் | சி-9 மற்றும் சி-8 | 1,066,116.00 | 20 நாட்கள் | 3,500.00 | 49 நாட்கள் | 11,000.00 | 77 நாட்கள் |
| 12. | மூதூர் MOH இல் பதவிநிலை அலுவலர்களின் வாகன நிறுத்துமிடம் மற்றும் நோயாளர்களுக்கான தடுப்பு வேலி ஆகியவற்றின் மேம்படுத்தல் | சி-9 மற்றும் சி-8 | 2,058,557.00 | 20 நாட்கள் | 3,500.00 | 49 நாட்கள் | 21,000.00 | 77 நாட்கள் |
| 13. | குச்சவெளி MOH அலுவலகத்தின் பழுதுபார்த்தல் வேலை. | சி-9 மற்றும் சி-8 | 1,226,596.70 | 20 நாட்கள் | 3,500.00 | 49 நாட்கள் | 12,500.00 | 77 நாட்கள் |
| 14. | திருகோணமலை MOH இன் அலுவலக மேம்படுத்தல் | சி-9 மற்றும் சி-8 | 1,219,849.10 | 20 நாட்கள் | 3,500.00 | 49 நாட்கள் | 12,500.00 | 77 நாட்கள் |


# The largest Job Market in Sri Lanka

# www.observerjobs.lk




**Widest reach for your employment advertisement**

**Email : info@observerjobs.lk Hotline: 1949**

**For more information**

**0777270012 / 0777270000 / 0112429314**


# கேள்விக்கான அழைப்பு

### மாநகர சபை - பொலன்னறுவை

## உலக வங்கியின் மற்றும் ஐரோப்பிய யூனியனின் நிதியைப் பெற்றுக்கொள்ளும் பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டம் (LDSP)

01. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கு உலக வங்கியினால் பிரதேச அபிவிருத்தி உதவிச் செயற்றிட்டம் (LDSP) நிதி மூலம் கீழ்க்காணும் செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

    கழிவுபொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக Skid star - Loader 01 ஐ கொள்வனவு செய்தல்

    கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக டிரக்டருடன் இணைக்கக்கூடிய புல்வெட்டும் இயந்திரம் 01 ஐ கொள்வனவு செய்தல்
02. பிரதேச அபிவிருத்தி உதவிச் செயற்றிட்டம் சார்பாக பொலன்னறுவை மாநகர சபையின் பெறுகைக்குழுவின் தலைவரால் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் செயற்றிட்டங்களுக்காக தகைமையும் தகுதியுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
03. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்விகோரல் செயற்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்படும்.
04. வழங்கல் மேற்கொள்வதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன், கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
05. வழங்கல் பெறுகைக்காக தகைமைகள் பெறுவதற்காக தகைமைகள் தேவைப்பாடுகள் கேள்விகோரல் ஆவணங்களில் உட்படுத்தப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களை பொலன்னறுவை, புதிய நகரம், இம் மாநகரசபையின் மாநகர ஆணையாளர்/ பெறுகைக்குழுவின் தலைவரால் (தொ.பே.இல.027-2222275 அல்லது mcpolonnaruwa@gmail.com) வார நாட்களில் 09.00 முதல் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
07. கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர் 2024.06.06 முதல் 2024.06.26 வரை 09.00 மணிமுதல் 15.00 மணிவரை பொலன்னறுவை, புதிய நகரத்தில் அமைந்துள்ள மாநகர சபையின் மாநகர ஆணையாளர்/பெறுகைக்குழுத் தலைவரிடம் ஆர்வமுள்ள கேள்விதாரர்களுக்கு ஆங்கில மொழியிலான கேள்விகோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியை கொள்வனவு செய்யலாம். காசாகவே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
08. கேள்விகள் நகல்பிரதியுடன் 2024.06.27 2024.06.27 பி.ப.2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு பொலன்னறுவை, புதிய நகரம் இல் அமைந்துள்ள மாநகர சபையின் மாநகர ஆணையாளர்/பெறுகைக் குழுத் தலைவர் என்ற முகவரிக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவ்வேளையில் சமுகமளித்துள்ள கேள்விதாரர்களின் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
09. சகல கேள்வியுடனும் கேள்விப் பிணையொன்றை மற்றும் தகைமைகளை உறுதி செய்யும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். செயற்றிட்டத்திற்கான கேள்விப்பிணைத்தொகை மற்றும் செல்லுபடியாகும் காலம் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| தொடர் இல | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பிடப் பட்ட செலவு | CIDA தரம் மற்றும் விசேடத்துவம் | கேள்விச் செல்லுபடி காலம் வரை | கேள்விப் பிணையின் பெறுமதி (ரு) மற்றும் செல்லுபடி காலம் | மீளளிக்கப் படாத தொகை ரு. |
|---|---|---|---|---|---|---|
| 01 | கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு Skid star - Loader 01 ஐ கொள்வனவு செய்தல் | ரூ.12.3 மில்லியன் | பொருட்கள் | 60 நாட்கள் 2024.08.26 | 246,000.00 2024.09.26 வரை | 10,000.00 |
| 02 | கழிவு முகாமைத்துவ நிலையத்திற்காக டிரக்டருடன் இணைக்கக்கூடிய புல்வெட்டும் இயந்திரம் 01 ஐ கொள்வனவு செய்தல் | ரூ.0.7 மில்லியன் | பொருட்கள் | 60 நாட்கள் 2024.08.26 | 14,500.00 2024.09.26 வரை | 2,500.00 |

**தலைவர்**
**பெறுகைக்குழு (LDSP)**
**மாநகரசபை**
**பொலன்னறுவை**

## இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் அலுவலக உபகரணங்கள் மற்றும் பயிற்சி உபகரணங்களை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையில் இடம்பெறும்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறி (ரூபா) | மீளளிக்கப் படாத விலைக் கோரல் ஆவணக் கட்டணம் (ரூபா) | விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| OCU/PROC/ 2024 - Office Equipment | சமுத்திரப் பல்கலைக்கழகத்திற்கு 37 எண்ணிக்கையான மேசைக் கணனிகள் மற்றும் 07 எண்ணிக்கையான மடிக் கணனிகளை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் | 150,000.00 2024-10-11ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் | 3,500.00 | 2024-06-24ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு |
| OCU/PROC/ 2024 - Training Equipment | சமுத்திரப் பல்கலைக்கழகத்திற்கு Scuba சுழியோடும் உபகரணங்கள் மற்றும் உயிர் காப்பு உபகரணங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் | 50,000.00 2024-09-29ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் | 1,500.00 | 2024-06-24ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |

3. ஒவ்வொரு விலைக்கோரல் ஆவணத்திற்கும் மேற்கூறிய மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 09.30 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையில் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் (பெறுகை) அவர்களுக்கு வங்கி வைப்புப் பற்றுச்சீட்டின் பிரதியுடன் எழுத்து மூலமான கோரிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து கொழும்பு-15, மட்டக்குளி, காக்கைத் தீவு, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழக பெறுகைப் பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.
4. ஒவ்வொரு விலைக்கோரல் ஆவணத்திற்காகவும் மேற்கூறிய கட்டணத்தை 2024-06-06ஆம் திகதி முதல் 2024-06-26ஆம் திகதி வரையில் மக்கள் வங்கி, மட்டக்குளி கிளையில் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தினால் பேணப்படும் 214-1-001-6-3629909 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைத்தல் வேண்டும்.
5. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகையின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு (........................ வழங்கலுக்கான கேள்வி) மற்றும் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென தெளிவாகக் குறிப்பிட்டு 2024-06-27ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது பின்வரும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
6. ஒவ்வொரு உருப்படியும் தனித்தனியான விலைக்கோரலாக கவனத்திற் கொள்ளப்படும் என்பதுடன் விண்ணப்பதாரர்கள் தனித்தனி விலைமனுக்களாக சமர்ப்பிக்கலாம்.
7. பயிற்சி உபகரணங்களுக்கான விலைமனுக்கள் 2024-06-27ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கும் அலுவலக உபகரணங்களுக்கான விலைமனுக்கள் மு.ப. 11.30 மணிக்கும் கொழும்பு-15, மட்டக்குளி, காக்கைத் தீவு, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழக கேட்போர்கூடத்தில் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் (அங்கீகார கடிதம் சகிதம்) கலந்துகொள்ளலாம்.
8. அலுவலக உபகரணங்களுக்கான விலைமனுக்கள் 2024-09-12ஆம் திகதி வரையிலும் பயிற்சி உபகரணங்களுக்கான விலைமனுக்கள் 2024-08-29ஆம் திகதி வரையிலும் செல்லுபடியாதல் வேண்டும்.
9. விலைமனுதாரர் மேற்கூறப்பட்ட பெறுமதிக்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் எந்தவொரு வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட மேற்கூறப்பட்ட திகதி வரையில் செல்லுபடியாகும் நிபந்தனையற்ற கோரிக்கை விலைமனுப் பிணை முறியொன்றை இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரின் பெயரில் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.
10. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பிலக்கம்: 011-4346991/993.
11. எந்தவொரு வேளையிலும் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**பதிவாளர்,**
**இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்,**
**காக்கைத் தீவு,**
**மட்டக்குளி, கொழும்பு-15.**
**தொலைபேசி: 4346991/993.**

# அல் ஹுசைன் மாணவர்கள் கோட்ட மட்டத்தில் வெற்றி



மாளிகைக்காடு குறூப் நிருபர்

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட காரைதீவு கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் மாளிகைக்காடு அல் ஹுசைன் வித்தியாலய மாணவர்கள் பல போட்டி நிகழ்ச்சிகளிலும் வெற்றியீட்டியுள்ளனர்.

ஆண்களுக்கான 18 வயதுக்கு உட்பட்ட நீளம் பாய்தல், உயரம் பாய்தல், தட்டெறிதல் போட்டிகளில் எச்.எம். ஹஸ்னி முதலிடங்களையும், 14 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 60 மீற்றர், நீளம்பாய்தல் மற்றும் உயரம் பாய்தல் போட்டிகளில் எம்.ஸராப் முதலிடங்களை பெற்றனர்.

இதனடிப்படையில் அல் ஹுசைன் வித்தியாலயம் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் 10 முதலிடங்களையும், 09 இரண்டாம் இடங்களையும், 13 மூன்றாம் இடங்களையும் பெற்றது.

இம் மாணவர்களுக்கு விளையாட்டு பொறுப்பாசிரியர் ஏ.எம் முஹம்மத் ரஜி, விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஏ.என். முஹம்மத் ஜஷாத் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

# இலங்கை கால்பந்து அணி புரூணை சுற்றுப் பயணம்



இரு நட்புறவு சர்வதேச கால்பந்து போட்டிகளில் ஆடுவதற்காக இலங்கை கால்பந்து அணி நேற்று (05) புரூணை நாட்டுக்கு பயணித்தது.

இலங்கை மற்றும் புரூணை அணிகள் பங்கேற்கும் இரு சர்வதேச நட்புறவுப் போட்டிகள் எதிர்வரும் ஜூன் 8 மற்றும் 11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இதற்காக புரூணை செல்லும் இலங்கை அணிக்கு கோல்காப்பாளர் சுஜான் பெரேரா தலைமை வகிப்பதோடு அணியில் மொத்தம் 24 வீரர்கள் மற்றும் 10 அதிகாரிகள் அடங்குகின்றனர்.

இலங்கை அணி கடந்த மார்ச் மாதத்திற்குப் பின்னரே சர்வதேச போட்டிகளில் பங்கேற்கவுள்ளது. அப்போது பப்புவா நியூ கினி அணிக்கு எதிரான போட்டியை கோலின்றி சமநிலை செய்த இலங்கை பூட்டானுக்கு எதிரான போட்டியை 2–0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

தற்போது இலங்கை அணி சர்வதேச கால்பந்து தரவரிசையில் 204 ஆவது இடத்தில் இருப்பதோடு புரூணை 194 ஆவது இடத்தில் உள்ளது. எவ்வாறாயினும் கடைசியாக 2009 ஆம் ஆண்டு புரூணை அணியை இலங்கை எதிர்கொண்டபோது 5–1 என்ற கோல்களால் வெற்றிபெற முடிந்தது.

இதில் புரூணை செல்லும் இலங்கை அணியில் இலங்கை பூர்வீகத்தைக் கொண்ட இரட்டை பிரஜா உரிமை பெற்ற வீரர்களில் மட்டுப்படுத்தப்பட்டோரை மாத்திரம் பயன்படுத்த திட்டமிடப்பட்டிருப்பதாக இலங்கை கால்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது. இவ்வாறான 12 வீரர்கள் தற்போது இலங்கை அணியில் இடம்பெற்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஐரோப்பிய நாடுகளில் தொழில் முறை லீக் கால்பந்து போட்டிகளில் ஆடுபவர்களாவர். இவர்களில் சிலருக்கு இலங்கை பிரஜா உரிமையை பெற்றுக்கொடுப்பதற்கும் இலங்கை கால்பந்து சம்மேளனம் முயன்று வருகிறது.

# இங்கிலாந்தின் போட்டி மழையால் முடிவில்லை



இங்கிலாந்து மற்றும் ஸ்கொட்லாந்து அணிகளுக்கு இடையிலான பி குழுவுக்கான டி20 உலகக் கிண்ணப் போட்டி மழை காரணமாக பாதியில் கைவிடப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி பகிர்ந்தளிக்கப்பட்டது.

பிரிட்ஜ்டவுனில் இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டிக்கு அடிக்கடி மழை குறுக்கிட்டது.

இதில் நாணய சுழற்சியில் வென்று துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி 10 ஓவர்களுக்கு விக்கெட் இழப்பின்றி 90 ஓட்டங்களை பெற்றது.

தொடர்ந்து நடப்புச் சம்பியனான இங்கிலாந்து அணிக்கு 10 ஓவர்களுக்கு 109 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டபோதும் தொடர்ந்து மழை பெய்ததால் போட்டியை தொடர முடியாமல்போனது.

இதேவேளை நேற்றுமுன்தினம் இலங்கை அணி இடம்பெற்றிருக்கும் டி குழுவில் நடந்த நேபாளத்திற்கு எதிரான போட்டியில் நெதர்லாந்து அணி 6 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட நேபாள அணி 106 ஓட்டங்களுக்கு சுருண்ட நிலையில் நெதர்லாந்து அணி 18.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து அந்த இலக்கை எட்டியது.

இதனால் தென்னாபிரிக்காவிடம் தோற்ற இலங்கை அணி புள்ளிகள் இன்றி அந்த குழுவில் நிகர ஓட்டவீதம் அடிப்படையில் 4ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

# தம்புள்ள அணிக்கு புது உரிமையாளர்




லொஸ் ஏஞ்சல்ஸை தளமாகக் கொண்ட சிவில் பொறியியல் ஆலோசனை நிறுவனம் ஒன்றான Sequoia Consultants, Inc. லங்கா பிரீமியர் லீக்கின் (எல்.பி.எல்) தம்புள்ள அணியை வாங்க முன்வந்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் மற்றும் எல்.பி.எல். உரிமையாளர்கள் கூட்டாக வெளியிட்ட அறிவிப்பில், தம்புள்ள அணி இந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட டி சில்வா ஹொல்டிங்ஸினால் இயக்கப்படும் என்று தெரிவித்துள்ளது. இதன் பெரும்பான்மை பங்கை Sequoia Consultants இன் உரிமையாளரான பிரியங்க டி சில்வா பெற்றுள்ளார்.

தம்புள்ள தன்டர்ஸ் என முன்னர் அழைக்கப்பட்ட தப்புள்ள அணியின் முன்னாள் உரிமையாளர் ஆட்ட நிர்ணயக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நிலையிலேயே அணி உரிமையாளர் மாற்றப்பட்டுள்ளார்.



## சர்வதேச செய்திகள்

# மத்திய காசாவில் இஸ்ரேலின் புதிய படை நடவடிக்கையில் 75 பேர் பலி

## மக்கள் இரவோடு இரவாக வெளியேற்றம்

காசாவில் போர் நிறுத்தம் தொடர்பான எதிர்பார்ப்பு குறைந்து வரும் நிலையில் மத்திய காசாவில் இஸ்ரேல் நடத்திய சரமாரி தாக்குதல்களில் 75க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

மத்திய காசாவில் புரைஜ் மற்றும் மகாசி அகதி முகாம்களை இலக்கு வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் இஸ்ரேலியப் படை தரை மற்றும் வான் வழியாக கடும் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்தப் பகுதியில் உள்ள ஹமாஸ் இலக்குகள் மீது தரைப் படை நடவடிக்கைக்கு மத்தியில் இஸ்ரேல் வான் தாக்குதல்களையும் தீவிரப்படுத்தி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அல் புரைஜ் பகுதியில் உளவு வழிகாட்டலுடன் படை நடவடிக்கையை மேற்கொள்வதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

மத்திய காசாவில் தற்போது மருத்துவ வசதிகளை வழங்கி வரும் ஒரே மருத்துவமனையாக உள்ள அல் அக்சா தியாகிகள் மருத்துவமனை காயமடைந்தவர்களால் நிரம்பி இருப்பதாகவும், பலரும் தரையில் வைத்து சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் காசா சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் அந்தப் பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான மக்கள் இரவோடு இரவாக வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் தெற்கு நகரான ரபாவில் இஸ்ரேலின் படை நடவடிக்கையால் அங்கிருந்து வெளியேறி அடைக்கலம் பெற்றவர்களாவர்.

ரபா மீதான தாக்குதல் தொடர்பில் அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் எச்சரித்திருந்தபோதும் இஸ்ரேலிய டாங்கிகள் அந்த நகரின் மத்திய பகுதியை அடைந்துள்ளன. இதனால் அண்மைக்காலத்தில் அந்த நகரில் இருந்து ஒரு மில்லியனுக்கும் அதிகமான பலஸ்தீனர்கள் வெளியேறி இருப்பதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இந்நிலையில் புரைஜ் அகதி முகாமில் பாடசாலை வளாகம் ஒன்று உட்பட பல இடங்கள் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் செவ்வாய்க்கிழமை இரவு தாக்குதலை தீவிரப்படுத்தி இருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் இங்கும் இஸ்ரேல் இராணுவம் கடந்த டிசம்பர் தொடக்கம் நடத்தும் இரண்டாவது படை நடவடிக்கையாக இது உள்ளது. முன்னதாக புரைஜ் அகதி முகாமை தளமாகக் கொண்ட ஹமாஸ் படைப்பிரிவை ஒழிப்பதாகக் கூறியே இஸ்ரேல் அங்கு தாக்குதலை நடத்தி இருந்தது. இந்நிலையில் அந்த முகாமுக்கு இஸ்ரேல் மீண்டும் திரும்பி இருப்பதன் மூலம் அங்கு பலஸ்தீன போராளிகள் தொடர்ந்தும் இயங்கி வருகின்றனர் என்பது தெரிகிறது என்று அமெரிக்காவை தளமாகக் கொண்ட போர் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

'இரவு முழுவதும் குண்டு சத்தம் நிற்கவில்லை' என்று டெயிர் அல் பலாவில் இருந்து இடம்பெயர்ந்த 30 வயதான ஆயா என்பவர் தெரிவித்தார்.

புரைஜுக்கு டாங்கிகளை அனுப்பிய இஸ்ரேல் இராணுவம் அருகில் உள்ள குடியிருப்பு பகுதிகளான அல் மகாசி மற்றும் அல் நுஸைரத் அதேபோன்று டெயிர் அல் பலா நகரங்களில் வான் தாக்குதல்களை நடத்தியதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

'புதிய போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை பற்றி பேசும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆக்கிரமிப்பாளர்கள் நகரங்கள் அல்லது அகதி முகாம் ஒன்றை அழுத்தம் கொடுப்பதற்கு பயன்படுத்துகின்றனர். தமது வீடுகள் அல்லது கூடாரங்களில் பாதுகாப்பாக இருக்கும் பொதுமக்கள் ஏன் விலை கொடுக்க வேண்டும்? அரபு மற்றும் உலகத்தால் போரை நிறுத்த முடியாதது ஏன்' என்று ஆயா ரோய்ட்டர் செய்தி நிறுவனத்திடம் 'சாட்' செயலி வழியாக தெரிவித்தார்.

மத்திய காசாவின் டெயிர் அல் பலா நகரில் உள்ள வீடுகள் மீது இடம்பெற்ற வான் தாக்குதல்களில் 11 பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது. மகாசி முகாமில் உள்ள டார்விஷ் குடும்பத்திற்கு சொந்தமான வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது எட்டுப் பேர் கொல்லப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவில் 243 ஆவது நாளாக நேற்று நீடித்த இஸ்ரேலின் தாக்குதல்களில் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகர் மற்றும் தெற்கின் கான் யூனிஸ் நகரங்களில் உள்ள குடியிருப்பு பகுதிகள் இலக்கு வைக்கப்பட்டிருப்பதாக வபா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக வடக்கு காசாவின் ஜபலியா அகதி முகாமில் பல வாரங்கள் படை நடவடிக்கையை மேற்கொண்டு பயங்கர தாக்குதல்களை நடத்திய இஸ்ரேலியப் படை கடந்த வெள்ளிக்கிழமையே அங்கிருந்து வாபஸ் பெற்றது. இந்தப் படை நடவடிக்கையின்போது அந்த நகர் முற்றாக சின்னாபின்னமாக்கப்பட்டது. படைகள் வாபஸ் பெற்ற பின்னர் மேற்கொள்ளப்பட்ட முதல் கட்ட மீட்புப் பணிகளில் அங்கு 360 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டதோடு பெரும்பாலானவை பெண்கள் மற்றும் சிறுவர்களுடையது என்று காசா சிவில் பாதுகாப்பு பிரிவின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

இஸ்ரேலின் தொடரும் தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 36,500ஐ தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த வாரம் மூன்று கட்ட போர் நிறுத்த திட்டம் ஒன்றை வெளியிட்டபோதும் இஸ்ரேல் அல்லது ஹமாஸ் தரப்பினர் இதுவரை அதற்கு உறுதியான ஒப்புதலை அளிக்கவில்லை.



நிரந்தர போர் நிறுத்தம் மற்றும் காசாவில் இருந்து இஸ்ரேல் முழுமையாக வாபஸ் பெறுவது தொடர்பில் தெளிவாக குறிப்பிடாத இஸ்ரேலுடனான உடன்படிக்கை ஒன்றை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கடந்த செவ்வாய்க்கிழமை (04) பேசிய மூத்த ஹமாஸ் அதிகாரியான ஒசாமா ஹம்தான் குறிப்பிட்டுள்ளார்.

'முடிவு அல்லது காலக்கெடு இல்லாது பேச்சுவார்த்தை கதவை திறப்பது பற்றி இஸ்ரேல் கூறுகிறது. இது கைதிகளை விடுவிக்கும் வரையான ஒரு கட்டம் பற்றியே இஸ்ரேல் விரும்புவதை உறுதி செய்வதாக உள்ளது. அதன் பின்னர் எமது மக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பு மற்றும் போரை மீண்டும் ஆரம்பிக்கும்' என்று ஹம்தான் கூறினார்.

மறுபுறம் பைடனின் போர் நிறுத்த திட்டம் தொடர்பில் இஸ்ரேலிய அரசும் விலகி இருப்பதோடு ஹமாஸை ஒழிக்கும் வரை போரை தொடர்வது பற்றியே கூறி வருகிறது.

எவ்வாறாயினும் இந்த உடன்படிக்கையை ஏற்கும்படி ஹமாஸை வலியுறுத்தி இருக்கும் பைடன், புதிய பேச்சுவார்த்தை முயற்சியாக அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. வின் தலைவரான பில் பர்ன்ஸை கட்டாருக்கு அனுப்பி இருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கு இடையே போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றை எட்டுவது மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் பர்ன்ஸ் மத்தியஸ்தர்களுடன் இணைந்து தொடர்ந்து செயற்படவிருப்பதாக இது தொடர்பில் தெரிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

பைடனின் மத்திய கிழக்குக்கான ஆலோசகர் பிரெட் மக்கர்க்கும் கட்டாருக்கு விரைந்திருப்பதாக அக்சோஸ் செய்தித் தளம் குறிப்பிட்டுள்ளது. 'போர் நிறுத்த பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கும் பொறிமுறை தொடர்பில் பேசுவதற்கு எகிப்து பாதுகாப்பு தூதுக் குழு ஒன்று கட்டார் சென்று கட்டார் மற்றும் அமெரிக்க சகாக்களுடன் பேசவுள்ளது' என்று எகிப்து அரசுடன் தொடர்புபட்ட அல் கெஹரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் இரு தரப்பில் இருந்தும் நம்பிக்கை தரும் அறிவிப்புகளை இன்னும் பார்க்கவில்லை என்று கடந்த செவ்வாய்க்கிழமை குறிப்பிட்டிருந்த கட்டார், ஆனால் முன்வைக்கப்பட்டிருக்கும் முன்மொழிவு தொடர்பில் இரு தரப்புடனும் பணியாற்றி வருவதாக தெரிவித்தது.



# பப்புவா நிலச்சரிவில் மீட்புப் பணி நிறுத்தம்

பப்புவா நியூ கினியில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் புதையுண்ட பல கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்களின் உடல்களை மீட்கும் பணிகள் கைவிடப்பட்டுள்ளன.

மீட்பு நடவடிக்கை அபாயகரமாக இருப்பதால் அனைத்து முயற்சிகளும் கைவிடப்பட்டன என்று அந்நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது. அனர்த்தம் இடம்பெற்ற மலைப்பகுதி செல்வதற்கு தடை வலயமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

என்கா மாகாணத்தில் கடந்த மே 24 ஆம் திகதி இடம்பெற்ற இந்த நிலச்சரிவின்போது சுமார் 2,000 அடி மலைப் பிரதேசம் மண் மற்றும் பாறைகளால் புதையுண்டது. இதில் 2,000 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இதுவரை நடந்த மீட்பு நடவடிக்கைகளில் ஒன்பது உடல்கள் மாத்திரமே கண்டுபிடிக்கப்பட்டன.

இந்நிலையில் நிலச்சரிவு இடம்பெற்ற பகுதியில் மீண்டும் ஒருமுறை நிலச்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதாக பப்புவா நியு கினி சுரங்க மற்றும் புவி அபாய திணைக்களம் வெளியிட்ட உள்ளக அறிக்கையில் தெரியவந்துள்ளது.



# ஹஜ் காலத்தில் வெப்ப எச்சரிக்கை

புனித ஹஜ் காலத்தில் சுமார் 44 பாகை செல்சியஸ் வெப்பத்தை எதிர்பார்ப்பதாக சவூதி அரேபியா தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு ஹஜ் கடமையின்போது ஆயிரக்கணக்கான வெப்ப பாதிப்பு சம்பவங்கள் பதிவான நிலையில் இந்த ஆண்டிலும் அதன் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

'இந்த ஆண்டு ஹஜ் காலத்தில் மக்கா மற்றும் மதீனாவில் சராசரி வெப்பத்தை விட ஒன்றரை மற்றும் இரண்டு பாகை அதிக வெப்பம் எதிர்பார்க்கப்படுகிறது' என்று தேசிய வானிலை ஆய்வு மையத்தின் தலைவர் ஐமன் குலாதம் நேற்று முன்தினம் (04) நடந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

வசதி படைத்த முஸ்லிம்கள் வாழ்நாளில் ஒரு தடவையேனும் செய்ய வேண்டிய இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் ஒன்றான ஹஜ் கடமை எதிர்வரும் ஜூன் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

கடந்த ஆண்டு இந்த யாத்திரையில் 1.8 மில்லியனுக்கும் அதிகமான முஸ்லிம்கள் பங்கேற்றிருந்ததோடு வெப்பநிலை 48 பாகை செல்சியஸை தொட்ட நிலையில், 2,000க்கும் அதிகமானவர்கள் வெப்ப அழுத்தத்தால் பாதிக்கப்பட்டதாக சவூதி நிர்வாகம் குறிப்பிட்டது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 6ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.